வெளியீடு : 3 - 12 - 2002 Issued : 3 - 12 - 2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 2, 2002 — தொகுதி 17 — எண் 1

**Tuesday the 2nd April, 2002– Volume 17– No. 1**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**



D.
V2ll, 31'P02,
V02.17.1.
224486


[Price Rs. 3.00

139/2003

2-4-2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xvii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1-40 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த வழக்கில் தமிழகத்தின் சார்பில் வாதாடும் வழக்கறிஞர் மாற்றம்.— | 40-52 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 60 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| ஆற்காடு, கவரம்பாளையத்தைச் சேர்ந்த சிறுமி புவனேஸ்வரி, யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டதால் இறந்ததாகக் கூறப்பட்டது .. .. | 52-60 |
| திரு. சி. ஞானசேகரன் | 53-54 |
| *திரு. எ.வ. வேலு | 54-55 |
| *மாண்புமிகு திரு. செ. செம்மலை | 55-58 |

பக்கங்கள்

4. **விதி 110-ன்கீழ் அறிக்கை—**

பொது விநியோகத் திட்டத்திற்காகக் கொள்முதல் செய்யும் நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுப்பது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 60-64

5. **கவன ஈர்ப்பு—**

அறந்தாங்கி தொகுதி, மனையல்குடி ஒன்றியம், கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப் பட்டினத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தது குறித்து .. .. 64-68

6. **வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி.** 68-119

*திரு. எ.வ. வேலு 68-85

*திரு. சி. சிவசாமி 86-93

திரு. கே.சி. கருணாகரன் 94-101

திரு. போளூர் வரதன் 101-111

*திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி 112-120

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 120-121



## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. **நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :**

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

4. **கல்வி அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்பநலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானப் மற்றும் கடவுச் சீட்டுகள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224485
சென்னை-600 008
நூலகம்



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிக சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

தொழிற்சாலைகள், இரும்பு, உருக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்க மின்னணுவியல் மற்றும் வணிக வரி

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன் :

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :

வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. க.க. பாலசுப்ரமணியன் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர் :

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works & Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons. |
| 3. | **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies and Information Technology. |
| 4. | **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

**5. Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

**6. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

**7. Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

**8. Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

**9. Minister for Co-operation, Food & Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

**0. Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

**· Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess Sugarcane Development.



**12. Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

**13. Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

**14. Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

**15. Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity and Non-conventional Energy Development.

**16. Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

**17. Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

**18. Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.,

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ. பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்திரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ் | .. | புவன்கிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ் .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா. தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. சு.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்கரபாணி, திரு. ஆர் .. ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அண்ணக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

| | |
|---|---|
| 157. பாரிமோகன், திரு. கி. | .. தருமபுரி |
| 158. பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. கடலாடி |
| 159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | .. தொண்டாமுத்தூர் |
| 160. பாலசுப்ரமணியன், திரு. க.க. | .. ஸ்ரீரங்கம் |
| 161. பாலபாரதி, செல்வி க. | .. திண்டுக்கல் |
| 162. பாலன், திரு. எஸ்.எம். | .. லால்குடி |
| 163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | .. சேரன்மகாதேவி |
| 164. பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |
| 165. புகழேந்தி, திரு. இ. | .. கடலூர் |
| 166. பூபதி மாரியப்பன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 167. பெருமாள், திரு. என்.கே. | .. விளாத்திகுளம் |
| 168. பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 169. பொன்னம்பலம், திரு. ப. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 170. பொன்னையன், திரு. சி. | .. திருச்செங்கோடு |
| 171. போளூர் வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 172. மகாலிங்கம், திரு. எஸ். | . அவினாசி (செ.வ.) |
| 173. மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 174. மகேஸ்வரி, திருமதி எஸ். | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 175. மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 176. மணி, திரு. டி. | .. விளவங்கோடு |
| 177. மணி, திரு. ஜி.கே. | .. பெண்ணாகரம் |
| 178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். | .. சாத்தான்குளம் |



| | |
|---|---|
| 179. மலையப்பசாமி, திரு. அ.இரா. | .. கபிலர்மலை |
| 180. மல்லிகா சின்னசாமி, திருமதி | .. முசிறி |
| 181. மாணிக்கராஜ், திரு. எஸ். | .. நாங்குநேரி |
| 182. மில்லர், திரு. அ. | .. கூடலூர் |
| 183. முரளிதரன், திரு. கே.வி. | .. தளி |
| 184. முருகவேல் ராஜன், திரு. க. | .. வந்தவாசி (செ.வ.) |
| 185. முருகேசன், திரு. ஆகு. | .. ஆத்தூர் |
| 186. முனுசாமி, திரு. கா.பூ | .. காவேரிப்பட்டினம் |
| 187. மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. மோகன், திரு. ப. | .. சின்னசேலம் |
| 189. யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 190. ரங்கநாதன், திரு. ப. | .. புரசைவாக்கம் |
| 191. ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | .. கோபிசெட்டிப்பாளையம் |
| 193. ராதாகிருஷ்ணன், திரு. எம். | .. திருமயம் |
| 194. ராமராஜ், திரு.ச. | .. போடிநாயக்கனூர் |
| 195. ராம்குமார், திரு. எம். | .. பாபநாசம் |
| 196. ராஜகோபால், திரு. ஆ | .. சிவகாசி |
| 197. ராஜம்மாள், திருமதி எஸ். | .. தூத்துக்குடி |
| 198. ராஜா, திரு. எச். | .. காரைக்குடி |
| 199. ராஜாங்கம், திரு. வி.ஆர். | .. சோழவந்தான் |
| 200. ராஜு, திரு. எச்.எம். | .. உதகமண்டலம் |
| 201. ரெங்கநாதன், திரு. என். | .. பூம்புகார் |

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ. அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 19, விசு- திருவள்ளுவர் ஆண்டு 2033

## 2002 ஏப்ரல் 2, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்."

உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் முயற்சிகளை மேற்கொள்பவருடைய பெருமைக்கு மேலாக வேறொரு பெருமை கிடையாது.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 53, திருமதி நளினி மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**53—**

### கலைக் கல்லூரி

***405—திருமதி நளினி மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதியில் கலைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போளூர் தொகுதியில் நடப்பாண்டில் புதிய அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி நளினி மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருவண்ணாமலை மாவட்டத்தில் எனது போளூர் தொகுதி விவசாயப் பகுதி என்பதால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதில் தொழிற்சாலை, கல்லூரி போன்றவைகள் இல்லை. போளூர் தனித் தாலுகாவாகவும், 4 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியும் 500-க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்டதாகவும் உள்ளது. இங்குள்ள மாணவ, மாணவியர்கள் தங்கள் மேல்நிலைப் படிப்பை வெற்றிகரமாக முடித்து மேற்கொண்டு கல்லூரிப் படிப்பைத் தொடர மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். வருடந்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் தங்களின் கல்லூரிப் படிப்பிற்கு தினந்தோறும் 50 முதல் 100 கிலோ மீட்டர் வரை பேருந்திலும், இரயில்களிலும் சென்று வரும் நிலை நிலவி வருகிறது. இச்சிரமத்தால் எத்தனையோ மாணவ, மாணவியர்கள் தங்களின் கல்லூரிப் படிப்பைத் தொடரும் வாய்ப்பை இழந்துவிடுகின்றனர். அதனால் அவர்களின் எதிர்காலக் கனவுகளும், இலட்சியங்களும் சீரழிந்து விடுகின்றன. எனவே தன்னிகரற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் போளூர் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது விவசாயக் கல்லூரியை அடுத்த ஆண்டிலாவது தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதியினுடைய வளர்ச்சிக்காக நல்ல கல்லூரி அமைய வேண்டும் என்ற ஆர்வத்துடன் கூறுகிறார். அவருடைய கருத்து மிகவும் ஏற்கக்கூடிய கருத்துதான். ஆனால், நம்முடைய நிதிநிலை பொருந்தாததன் காரணமாக அத்தகைய கல்லூரியை இப்போது ஆரம்பிக்கும் நிலை இல்லை. எதிர்காலத்தில் நிதிநிலை ஓரளவுக்கு உயர்ந்தால் அத்தகைய கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2002 ஏப்ரல் 2]

**54—**

## தொழில் நுட்பப் பயிலகம்

***2668—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரையில் தொழில் நுட்பப் பயிலகம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊத்தங்கரையில் இந்த ஆண்டில் தொழில் கல்வி சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் கருத்துரு எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை, தருமபுரி மாவட்டத்திலேயே பின்தங்கிய ஒரு பகுதி. அங்கு வானம் பார்த்த பூமியே மிகப் பெரிய அளவில் இருக்கிறது. அங்குள்ள மக்கள் எல்லோரும் வேலை தேடி வெளி மாநிலங்களுக்கும். வெளி மாவட்டங்களுக்கும் சென்று கொண்டிருக்கக்கூடிய நிலையில் அங்கு படித்துவிட்டிருக்கிற இளைஞர்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாத சூழ்நிலை நிலவுகிறது. அங்கு ஏற்கெனவே தொழிற்பேட்டை தொடங்குவதற்காக அரசுக் கட்டடங்கள் ஏராளமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட இடத்தில் அந்தக் கட்டடங்கள் அனைத்தும் வெறுமனே காலியாகக் கிடக்கின்றன. அவற்றிலே தொழிற் பயிலகம் ஒன்று அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற சந்தர்ப்பம் கிடைக்கும். எனவே அப்படி அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை பகுதியானது மிகவும் பின்தங்கிய பகுதிதான். அங்கு பல்வேறு கல்வி நிலையங்கள் சிறப்பான முறையிலே பணியாற்றி மாணவர்களுக்கு நல்ல கல்வியைக் கொடுத்து வருகின்றன. அதில் ஒன்றும் ஐயப்பாடு கிடையாது. ஆனால் தொழில் கல்வியைப் படிப்பதற்கு

[2002 ஏப்ரல் 2

அவர் கேட்கின்ற அந்தத் தொழில் பயிலகம் ஆரம்பிப்பதற்கு கருத்துரு எதுவும் இப்போது கிடையாது. ஆனால், அவர் அந்தப் பகுதியில் பல கட்டடங்கள் கட்டப்பட்டு பயன்படாமல் இருக்கின்றன என்று சொன்னார். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள், ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க இருப்பதாக. ஆகவே, ஊத்தங்கரைப் பகுதியில் இருக்கும் அந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தி நல்ல ஒரு தொழிற்சாலையை எதிர்காலத்திலே அம்மா அவர்கள் வகுத்த திட்டத்தின்படி அறிஞர் அண்ணா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து அதன் மூலமாக பலருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**55—**

### பழனியில் மருத்துவக் கல்லூரி

***6862—திரு. மா. சின்னசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலுள்ள பழனியாண்டவர் தேவஸ்தான நிதி ஆதாரங்களைக் கொண்டு மிகவும் பின்தங்கிய பகுதியான பழனியில் மருத்துவக் கல்லூரி தொடங்கும் கருத்துருவை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனி நகரில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமெனில், இதன்பொருட்டு போதுமான தண்ணீர் வசதியுள்ள, திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லை. மேலும் மருத்துவக் கல்லூரிக்கான கட்டடம், விடுதிக் கட்டடம், விளையாட்டு மைதானம் மற்றும் மருத்துவ மாணவ, மாணவிகள் பரிசோதனைக்காக அனைத்து இடவசதி மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் அடங்கியதாகவும் உள்ள மருத்துவமனைக்கான கட்டடம் கட்டுவதற்குக் குறைந்தது 100 ஏக்கர்



2002 ஏப்ரல் 2]

நிலம் தேவைப்படும். இத்தகைய வகையில் நீர்வசதியுள்ள இடமில்லாதது மட்டுமின்றி கட்டடங்கள் கட்டுதல், கருவிகள் கொள்முதல் செய்தல் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் அளித்திடவும் போதுமான நிதி ஆதாரம் தற்போது திருக்கோயிலில் இல்லாததால் இத்திருக்கோயில் சார்பில் மருத்துவக் கல்லூரி தொடங்கும் சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

*முற்பகல் 10-05*

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித ஆட்சியில் கோயில் நகரமாம் பழனி நகர்ப் பகுதியில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு ஒரு நவீன மருத்துவமனையை உருவாக்கவும், ஒரு மருத்துவக் கல்லூரியை உருவாக்கவும் தேவையான நிதியாதாரம் பழனி திருக்கோயில் நிருவாகத்தில் இருப்பதால், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அம்மாவின் ஆசியுடன் பழனி பகுதி மக்களுக்கு இதனை அடுத்த ஆண்டிலாவது வழங்கிட நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் கீழ்க்காணும் 10 நிறுவனங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன:

அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி.
பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி.
பழனியாண்டவர் ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரி.
பழனியாண்டவர் பெண்கள் தொழில்நுட்பக் கல்லூரி.
பழனியாண்டவர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி.
தண்டாயுதபாணி சுவாமி உதவிபெறும் ஆரம்பப் பள்ளி.
பழனியாண்டவர் காதுகேளாதோர் பள்ளி.
பழனியாண்டவர் தவில் மற்றும் நாதஸ்வரப் பள்ளி.
பழனியாண்டவர் தேவார இசைப் பள்ளி.
பழனியாண்டவர் சைவ வேத ஆகமப் பாடசாலை, பழனி.

இவற்றை நிர்வகிப்பதில் திருக்கோயில் நிருவாகம் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. மேலும் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கினால்

[2002 ஏப்ரல் 2

ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் தொடர் செலவினத்தை இத்திருக்கோயில் நிருவாகம் ஏற்க இயலாது. திருக்கோயில் உபரி நிதியிலிருந்துதான் பெரும்பாலான வசதியில்லாத கோயில்களின் தேவைகளுக்கேற்ப செலவிடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பழனியாண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடமில்லை, அதனால் மருத்துவக் கல்லூரி அமைக்க இயலாது என்று பதிலுரையில் சொன்னார்கள். தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் கள்ளிமந்தயத்தில் சுமார் 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் அதிகமான வருமானம் கொண்ட கோயில் பழனி தண்டாயுதபாணி திருக்கோயில். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த 300 ஏக்கர் நிலத்தைக்கொண்டு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடத்தை வைத்து என்ன செய்வது, நிதியாதாரம் இல்லையே!

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரம் ஓரளவுக்கு இருந்தாலும் அதனுடைய நிதியை வைத்துத்தான் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஆலயங்களுக்கும் அந்த நிதியிலிருந்து செலவிடப்பட்டு வருகிறது. இருந்தாலும் அந்த இடம் அருகிலே இல்லை. சற்றுத் தொலைவிலே இருந்தாலும், நிதியாதாரம் இல்லாத காரணத்தினாலேதான், இப்போது 10 நிறுவனங்களுக்கு அதனுடைய நிதியிலிருந்து செலவிடப்படுகிற காரணத்தினாலே இப்போது மருத்துவக் கல்லூரி கொண்டு வருவதற்கு நிதி சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவஸ்தான நிதியாதாரங்களைக் கொண்டு கல்லூரி தொடங்கப்பட்டுள்ள இடங்களில் கட்டட வசதி இல்லாமல் உள்ள



2002 ஏப்ரல் 2]

கல்லூரிகளுக்கு தேவஸ்தான நிதியிலிருந்து வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களுடைய கல்வி நிறுவனங்களால் கட்டப்பட்டுள்ள பள்ளிகளில் கல்விக்கூடம் இல்லையென்று சொன்னால், அவற்றை ஆராய்ந்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற அந்த ஆலயத்தினுடைய நிதியிலிருந்து கட்டுவதற்கு அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது மருத்துவக்கல்லூரி தொடங்குவதற்கு 100 ஏக்கர் நிலம் தேவைப்படும், அதிக நிதி தேவைப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். பழனி பொதுவாக சித்தர்கள் அதிகமாக வாழ்ந்த ஒரு பகுதி. சித்த மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அத்தனை ஏக்கர் நிலம் தேவைப்படாது. Allopathy அதாவது, ஆங்கில மருத்துவ முறையைக் கொண்டிருக்கக் கூடிய ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று சொன்னால்தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் 100 ஏக்கருக்கு அங்கே தேவையிருக்கும். சித்த மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மிகக் குறுகிய வட்டத்திற்கு, சிறு நிலம் இருந்தாலே போதும். அதற்கு அதிகமான தொகையும் தேவைப்படாது. ஆகவே, இந்த அரசாங்கம் சித்தா, யுனானி போன்ற மருத்துவ முறைகளை ஊக்கப்படுத்திக்கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சித்த மருத்துவக் கல்லூரியை-- அங்கே சித்தர்கள் வாழ்ந்த ஒரு பகுதி என்கிற காரணத்தினாலே முக்கியத்துவம் தந்து, அந்த சித்த மருத்துவக் கல்லூரி -- தொடங்குவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தர்கள் வாழ்ந்த பகுதி என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சித்த மருத்துவக் கல்லூரி, யுனானி மருத்துவக் கல்லூரி கொண்டு வருவதற்கு நிதியாதாரத்தை வைத்து, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களைக் கலந்தாலோசித்து முடிந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சின்னசாமி.

**திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு எத்தனை கல்லூரிகள், பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன? ஆசிரியர் பணியிடங்கள் எத்தனை நிரப்பப்படாமல் இருக்கின்றன? எத்தனை நாட்களுக்குள் இந்த ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் சொல்லியதைப்போல், பழனி ஆண்டவர் ஆலயத்தின் சார்பில் 10 நிறுவனங்கள் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனுடைய அடிப்படையில் கல்லூரியில் 50 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த 50 பணியிடங்களை நிரப்புவது குறித்து அங்கே இருக்கின்ற ஆசிரியர் பெருமக்கள் உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்த காரணத்தினாலேயே இதுவரையில் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இப்போது தடையாணை நீக்கப்பட்டு இருக்கிறது. கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் அனுமதி கோரப்பட்டு உள்ளது. கிடைத்தவுடன் அந்த 50 காலியிடங்கள் நிரப்பப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவில் உடுப்பி, மூகாம்பிகை, தர்மஸ்தலா போன்ற எல்லா இடங்களிலும் தனியார் கோயில்களே பல கல்வி நிறுவனங்களை நடத்துகிறார்கள். ஆனால், நம்முடைய பழனி கோயிலின் சார்பில் நீண்டகாலமாக துவக்கப்பட்ட நிறுவனங்கள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆதிபராசக்தி நிறுவன தனியார் கோயிலாலே பல புதிய படிப்புகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, எல்லாக் கோயில்களிலும் இப்படித் தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிபராசக்தி ஆலயத்தில், அந்த ஓர் ஆலயத்தில்தான் அதனுடைய நிதியை பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அருள்மிகு பழனி ஆண்டவருடைய ஆலயத்தினுடைய



நிதியிலிருந்துதான் தமிழகத்திலே இருக்கின்ற, வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கின்ற, கிராமப் பெருமக்கள் வாழ்கின்ற பகுதியிலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள நூறு ஆலயங்கள் தேர்வு செய்து திருப்பணிக்காக 25,000/- ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கின்ற நிதி அந்த பழனி ஆண்டவர் ஆலயத்தினுடைய நிதியுதவியிலிருந்துதான் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற பகுதிகளிலுள்ள திருக்கோயில்களுக்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய 2,500 ரூபாய் தொகையை அரசே ஏற்று ஒரு கால பூசை திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 56, திரு. எஸ். மாணிக்கராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**56—**

**திருப்பணி**

***7417—திரு. எஸ். மாணிக்கராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் உள்ள சத்தியவாகீஸ்வரர் கோயில் திருப்பணிக்காக ரூ.55 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டு 06-03-1995-ல் அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திருப்பணி மீண்டும் நடந்தேறிட அரசு மேல்நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் உள்ள அருள்மிகு சத்தியவாகீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்கு 1996 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மொத்தம் 10 திருப்பணிகளுக்கு

[2002 ஏப்ரல் 2

ரூ.52,00,000/- திருக்கோயில் நிர்வாக வாரியச் செயலர் நிர்வாக அனுமதி வழங்கி கீழ்க்கண்டவாறு நிதி பங்கீடு செய்யப்பட்டது:

| | |
|---|---|
| 1. அரசு மானியம் | ரூ. 15,60,000/- |
| 2. பொதுமக்கள் நன்கொடை | ரூ. 36,40,000/- |
| மொத்தம் | ரூ. 52,00,000/- |

பொதுமக்கள் நன்கொடை வசூலித்த விவரம் தெரிவிக்கப்படாததால் அரசு மானியம் விடுவிக்கப்படவில்லை. உபயதாரர்கள் மூலம் திருநெல்வேலி இணை ஆணையரின் அனுமதி பெற்று ஐந்து பணிகள் முடிக்கப்பட்டு 16-4-2001 அன்று குடமுழுக்கும் நடைபெற்றுவிட்டது. இராஜகோபுரத் திருப்பணி மட்டும் இன்னும் நடைபெறவில்லை. ஏற்கெனவே இராஜகோபுரப் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.35.00 இலட்சத்தில் தற்போது இராஜகோபுரத் திருப்பணியைச் செய்ய இயலாத நிலை உள்ளதால், விரிவான திருத்திய மதிப்பீட்டினை தற்கால விலை நிலவரப்படி தயாரித்து அனுப்ப திருநெல்வேலி உதவி கோட்டப் பொறியாளர் மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, களக்காட்டிலுள்ள சத்தியவாகீஸ்வரர் கோமதி அம்மன் கோயில்—களக்காடு பெரிய கோயில்—கும்பாபிஷேகத்திற்கு 6-3-1995ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் கால்கோள் விழா நடந்தது. அதன்பின் பணி ஏதும் நடக்கவில்லை. அப்போதைய மதிப்பீடு 52 இலட்சம். இந்தக் கோயிலில் 65 ஆண்டுகளுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடந்தபோதுகூட இராஜகோபுரத்திற்கு கும்பாபிஷேகம் நடத்தப்படவில்லை. ஆதலால் நடத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், களக்காடு அருள்மிகு சத்தியவாகீஸ்வரர் திருக்கோயிலின்கீழ் 8 உப ஆலயங்கள் உள்ளன. மேற்படி கோயில், நான்காம் நிலை செயல் அலுவலர்களால் நிருவகிக்கப்படுகிறது. அவரே தக்காராகவும் உள்ளார். திருக்கோயில் சகாயத் தொகை நிர்ணய வருமானம் ரூ.54,495 ஆகும். நவராத்திரி திருக்கல்யாணம், கந்தர் சஷ்டி மற்றும் வைகாசித் திருவிழா போன்ற திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருக்குளம் ஒன்று உள்ளது. மேலும், திருக்கோயிலுக்கு 26 ஏக்கர் ஒரு சென்ட் நன்செய் நிலமும், 68 ஏக்கர் புன்செய் நிலமும், 11 கட்டடங்கள் மற்றும் 21 மனைகளும் உள்ளன. மேற்படி திருக்கோயில் திருப்பணிக்கு அப்போதைய திருக்கோயில் நிருவாக வாரிய செயலர்/ஆணையர் செ.மு.நா. 10275/95 ஓய் 2, நாள் 8-1-1996-ன்படி மொத்தம் 10 திருப்பணிகளுக்கு 52 இலட்சம் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு கீழ்க்கண்டவாறு நிதி பங்கீடு செய்யப்பட்டது. அரசு மானியம் 15 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய். பொதுமக்களுடைய நன்கொடை 36 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய். மொத்தம் 52 இலட்சம் ரூபாய். பொதுமக்கள் நன்கொடை வசூலித்த விவரம் தெரிவிக்கப்படாததால் அரசு மானியம் விடுவிக்கப்படவில்லை. உபயதாரர்கள் மூலம் திருநெல்வேலி இணை ஆணையர் அனுமதி பெற்று 5 பணிகள் முடிக்கப்பட்டு, 16-4-2001 அன்று குடமுழுக்கு நடைபெற்றுவிட்டது. இராஜகோபுர திருப்பணிகள் மட்டும் இன்னும் நடைபெறவில்லை. ஏற்கெனவே இராஜகோபுரப் பணிக்குத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை 35 இலட்சம் ரூபாய்க்கு தற்போது இராஜகோபுரத் திருப்பணி செய்ய இயலாத நிலை உள்ளதால், விரிவான திருத்திய மதிப்பீட்டினை தற்காலிக விலை நிலவரப்படி தயாரித்து அனுப்ப திருநெல்வேலி உதவிக் கோட்டப் பொறியாளர் மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**57—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***1921—திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 2

தஞ்சாவூர் ஒன்றியம், ஆலக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலக்குடி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்ட பணித்தளம் பொதுப் பணித் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெறும்போது கிராம மக்கள் அதை வேறு இடத்தில் கட்ட வேண்டுமென எதிர்ப்புத் தெரிவித்து கலவரம் செய்ததால் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி நிறுத்தப்பட்டுவிட்டது. தற்சமயம், தகராறுகள் சமரசமாகத் தீர்க்கப்பட்டு, கட்டடப் பணி தொடர முடிவு எடுக்கப்பட்டு, கட்டடப் பணிக்கான திருத்திய மதிப்பீட்டுக்கு ஒப்பளிப்பு வழங்கக் கருதப்பட்டுள்ளது.

**திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலக்குடி ஊராட்சிக்கு அருகில் உள்ள நான்கு ஊராட்சிகளைச் சேர்ந்த 20 ஆயிரம் பேர் பயன்பெறுகின்ற வகையில் அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்திருக்கிறது. கடந்தகால ஆட்சியில் அந்த மருத்துவமனைக்கு வேண்டிய ஒப்பந்தங்கள் விடப்பட்டு அதனுடைய முதல் கட்ட வேலையாக மண்வேலைகள் தொடங்கிய பின்னர் அங்கே இருந்த ஆளும் கட்சியினருடைய நடவடிக்கையால் அந்த வேலை நிறுத்தப்பட்டுள்ளது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் அங்கேயுள்ள பொது மக்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து அந்த ஊராட்சியின் மத்தியிலே ஓர் இடத்தை வாங்கித் தருவதாகச் சொல்கிறார்கள். அந்த இடத்தில் இந்த ஆண்டே அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு முதலிலே 9.90 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்கப்படுகிற நேரத்தில்தான் பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டன. எனவே, காலம் கடந்ததாலே கட்டுமான விலை உயர்வின் காரணமாக இப்போது திருத்திய மதிப்பீடு 14.80 இலட்சம் ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு, அந்தத் திருத்திய மதிப்பீட்டின் தொகைக்கு நிர்வாக ஒப்புதலை எதிர்பார்த்திருக்கிறோம். திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு ஆணை வெளியிட்டவுடன் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களில் பழுது ஏற்படுகிறபோது பழுதுபார்க்கின்ற பணிகளை யார் மேற்கொள்வது என்ற ஒரு பிரச்சினை உள்ளது. மருத்துவச் சேவைக் கழகம் பழுதுபார்க்கும் பணியினை மேற்கொள்ளுமா அல்லது பொதுப் பணித் துறை மேற்கொள்ளுமா என்ற சச்சரவுகள் நாங்கள் மதிப்பீட்டுக் குழுவில் Tour சென்றபோது ஏற்பட்டது. எனவே, பழுதுபார்க்கின்ற பணியினை எந்தத் துறை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பணிகளையெல்லாம் பொதுப் பணித் துறைதான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. பொதுப் பணித் துறையின் மூலம் செய்வதுதான் உசிதமாக இருக்கும். காரணம், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொன்னதைப்போல் T.N.M.S.C. அதாவது மருந்துக் கட்டுப்பாட்டுக் கழகத்தின் மூலம் செய்வது என்றால் அதற்குத் தனியாக பொறியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். எனவே, மருந்துக் கட்டுப்பாட்டுக் கழகம் மருந்து வாங்குகிற பணியை மட்டும் செய்யவேண்டும் என்றும் பழுதுபார்க்கிற பணிகளை எல்லாம் பொதுப் பணித் துறைக்கே விட்டுவிடலாம் என்றும் நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுதுபட்டிருக்கின்றனவோ, அந்தப் பணிகளை எல்லாம் விரைவிலே செய்து முடிப்பதற்கு பொதுப் பணித் துறையின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு எங்கள் துறையும் முயற்சிகள் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ளிருப்பு நோயாளிகளை அனுமதிப்பதற்காக படுக்கை வசதிகள் செய்துகொடுத்தும், அந்தப் படுக்கை வசதியைச் செய்வதற்குரிய கட்டட வசதிகள் இல்லாததால் அவையெல்லாம் அந்த அலுவலர்களின் வீட்டிலே வைக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற நிலை அரசுக்குத் தெரியுமா? என்னுடைய தொகுதியில்கூட அப்படி இருக்கிறது. அவற்றுக்கெல்லாம் கட்டட வசதி செய்து கொடுத்து, உள்ளிருப்பு நோயாளிகள்

பயன்பெறுகின்ற அளவிலே அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** பெரும்பாலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போதுள்ள நிலையில் பிரசவத்திற்குத்தான் படுக்கைகள் கொடுக்கப்படுகின்றன. அதுவும், அதிகபட்சமாக 6 படுக்கைகள்தான் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, சுகாதாரப் பணிகளோடு, சுகாதாரச் சேவையோடு மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட வேண்டும் என்றுதான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தேர்ந்தெடுத்து 30 படுக்கைகள் கொண்ட, தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற வேண்டுமென்று நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் படுக்கைகள் கூடுதலாக ஒதுக்கப்படுகிறபோது அதற்கான கட்டடமும் கட்டப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் சொன்னதுபோல, தற்போது இருக்கிற நிலையில் எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் படுக்கைகள் இல்லையோ அவற்றிற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுத்து தற்போது பிரசவத்திற்குத் தேவையான படுக்கைகளை அமைக்க ஏற்பாடு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசு அதற்காக ஒதுக்கும் நிதி எவ்வளவு என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசினுடைய நோக்கமே புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதைவிட, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தி, அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, infrastructure facilities, அடிப்படை வசதிகளைக் கூடுதலாகச் செய்வதன் மூலம் இன்னும் அதிக சுகாதார சேவையை, மருத்துவ சேவையை அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு அளிக்க முடியும்





என்று அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் எதுவும் அமைப்பதற்கான உத்தேசம் இல்லை. ஆனால், இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில், அதனுடைய தரத்தை உயர்த்துவதற்கும், அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கும் நம்முடைய அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலையங்களை எல்லாம் பழுதுபார்ப்பதற்காக ஒவ்வொரு டிவிஷனிலும் இருக்கின்ற Deputy Director-க்கு—துணை இயக்குநருக்கு—5 இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை சீர் செய்ய வேண்டும் என்று சொன்னால்கூட 5 இலட்ச ரூபாய் போதாது என்ற நிலைதான் இன்று இருக்கிறது. எனவே, "யானைப் பசிக்கு சோளப் பொரியைப் போல" இந்தப் பணம் போதாது. எனவே, ஒவ்வொரு பகுதிக்கும் போதுமான அளவுக்கு பணத்தை ஒதுக்குவதற்கு இந்த அரசு முன்வருமா? அப்படி எந்தெந்தப் பகுதி repair-ஆகி இருக்கிறது என்பதைக் குறித்து இந்த அரசு பட்டியலிட்டு அதற்குரிய பணத்தை ஒதுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஒரு நல்ல நோக்கத்தோடு பொன்னை வைக்கிற இடத்தில் பூவை வைக்கிற அளவில் ஒரு துணை இயக்குநருக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* 5 இலட்ச ரூபாய் அளவுக்கு இப்போது நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பழுது பார்க்கிற பணிக்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலு போன்றவர்கள், அந்தப் பகுதியிலே இருக்கிற—இன்னும் சொல்லப்போனால் அவரேகூட செய்யலாம்—கொடையாளிகளை எல்லாம் அணுகி அவர்களிடம் நிதி உதவியைப் பெற்று அப்படிப்பட்ட பழுதடைந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை பழுதுபார்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வாரேயானால் இந்த அரசுக்கு அவர் பெரிதும் உதவி செய்தவராக இருப்பார் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்து அந்த முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் எப்படி உதவி செய்வார்? (குறுக்கீடு) வேலு, உதவி செய்கிறேன் என்று சொல்கிறீர்களா?

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, தண்டராம்பட்டு துணை சுகாதார நிலையத்தைப் பொறுத்த அளவில் இப்போது adopt செய்து எங்களுடைய trust மூலம் உதவி செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும் தொகுதி என்கிற முறையில், பக்கத்தில் இருக்கின்ற தொகுதிகளில் எல்லாம் இப்படி பழுதுபட்டு இருக்கின்ற காரணத்தால் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்பினேனேயொழிய வேறல்ல. தண்டராம்பட்டு துணை நிலையத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய அறக்கட்டளை நேரடியாக ஆண்டுக்கு வேண்டிய மருந்துகளை, அதற்கு வேண்டிய தளவாடச் சாமான்களை, அதற்கு வேண்டிய உபகரணங்களை எல்லாம் இன்றைக்கும் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் அறக்கட்டளையைக் கொஞ்சம் விரிவுபடுத்துங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுடைய வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பெண்களுடைய பிரசவத்திற்காக 6 படுக்கைகள் ஒதுக்கப்படுகின்றன என்பதைச் சொல்லியிருப்பது மகிழ்ச்சி. ஆனால், அதேநேரத்திலே பிரசவம் பார்ப்பதற்குரிய பெண் மருத்துவர்கள் இல்லாத நிலை பல மருத்துவமனைகளிலே நிலவுகிறது. அதேபோல, ஆண் மருத்துவர்கள் பற்றாக்குறையும் இருக்கிறது. ஆகவே, மருத்துவர்களுடைய பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு முன் வைக்குமா? அதற்கான ஏற்பாடுகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணிகளிலேயே முக்கியப்பணி அதிகப்படியான பிர்சவங்களைப் பார்ப்பதுதான். அதுதான் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். அந்த



2002 ஏப்ரல் 2]

அடிப்படையில்தான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு பெண் மருத்துவராவது இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் 350 பெண் மருத்துவர்களை உடனடியாக நியமித்து ஆணை பிறப்பித்தார்கள். அவர்களெல்லாம் பணியிலே அமர்த்தப்பட்டுவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொல்வதுபோல ஆண் மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்காகத்தான் 555 ஆண் டாக்டர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக, பதிவு மூப்பு அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களும் பணியிலே அமர்த்தப்பட்டிருக் கிறார்கள். ஆனால், இதிலே ஒரேயொரு பிரச்சினை என்னவென்று சொன்னால், குறிப்பாக, நாகப்பட்டினம், பெரம்பலூர், திருவண்ணாமலை, ஊட்டி போன்ற சில குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு மருத்துவர்களை நியமிக்கிறபோது அவர்கள் அங்கே செல்ல மறுக்கிறார்கள். அதுதான் எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. ஆனால், இப்போது நியமிக்கப்பட்டிருக்கிற டாக்டர்கள் நியமிக்கப்பட்ட இடங்களிலே பணிபுரிவார்களேயானால், எந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் டாக்டர்கள் இல்லை என்ற நிலைமை இல்லை என்ற அளவில்தான் நாங்கள் இப்போது பணியிடங்களை நிரப்பியிருக்கிறோம். ஆனால், மருத்துவர்களைப் பொறுத்தவரையில் 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்று கிராமத்திலே பழமொழி சொல்வதைப்போல, மருத்துவர்கள் வேலைக்குச் சென்றால் அரசாங்கச் சம்பளம், வெளியிலே இருந்தால் அவர்களுக்கு private practice இருக்கிறது. எனவே, அந்த அடிப்படையிலே நீண்ட விடுப்புக்களைப் போட்டுவிட்டு அவர்கள் போய்விடுகிறார்கள். அதனால்தான் நியமிக்கப்பட்ட இடங்களில், ஏழை எளியவர்களுடைய நிலைமைகளை உணர்ந்து, ஒரு சேவை மனப்பான்மையோடு அங்கே நீங்கள் போய் பணியாற்ற வேண்டுமென்று நாங்கள் மருத்துவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது படிப்படியாக அந்த நிலைமை கொஞ்சம் மாறி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வருகின்ற ஆண்டுக்கு எத்தனை தொடங்கப்படவிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இல்லை என்று சொல்லிவிட்டார். திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விரிவான பதிலை இங்கே கொடுத்தார்கள். நீலகிரி மாவட்டத்தில் அதிக அளவில் சுகாதார நிலையங்களெல்லாம் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. நல்ல வசதிகளெல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவர்கள் வரமாட்டேன் என்று சொல்கிறார்கள்; வந்து தங்கமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு 6 மாத அளவிலேயாவது கண்டிப்பாக மருத்துவர்கள் அங்கு இருக்க வேண்டுமென்ற வசதியைச் செய்தால் கண்டிப்பாக அந்தப் பகுதியினுடைய மக்கள் முன்னேற்றம் அடைவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மருத்துவரும் முதன்முதலில் தேர்வு பெற்றவுடன் 6 மாதகாலம் நீலகிரி மாவட்டத்தில் கண்டிப்பாகப் பணியமர்த்த முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்கள் சொல்வதைப்போல 6 மாதம் அல்ல, நியமன உத்தரவு பிறப்பிக்கிறபோதே கண்டிப்பாக இரண்டு ஆண்டுகள் அப்படி நியமிக்கப்படுகிற மருத்துவர்கள் மலைப் பிரதேசங்களிலோ அல்லது கிராமப்புறப் பகுதிகளிலோ சேவை செய்யவேண்டுமென்றுதான், அந்த நிபந்தனையோடுதான் நாங்கள் அவர்களுக்கு உத்தரவே கொடுக்கிறோம். உத்தரவைப் பெற்றுக்கொள்கிறார்கள்; பணியிலும் சேர்ந்துவிடுகிறார்கள். ஆனால், விடுப்பிலே போய்விடுகிறார்கள். எங்களுடைய துறையைப் பொறுத்தமட்டில் விடுப்பிலே போகிற மருத்துவர்களின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு 6 மாதம், ஒரு வருடகாலம் ஆகிவிடுகிறது. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ 6 மாதம், ஒரு வருட காலம் ஆகிவிடுகிறது. இதற்குள் அந்த மருத்துவமனையிலே டாக்டர்கள் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. அப்படி நடவடிக்கை எடுப்பதற்குமுன் வேறு மருத்துவர்களை நிரப்புவதற்கும் எங்களுக்கு சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. இரண்டு ஆண்டுகள் கட்டாயம் அதுபோன்ற கிராமப்புறப் பகுதிகளிலோ, மலைப் பிரதேசங்களிலோ கட்டாயமாகப் பணியாற்ற வேண்டுமென்றுதான்,



2002 ஏப்ரல் 2]

அந்த நிபந்தனையோடுதான் நாங்கள் உத்தரவைப் பிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதிலே இருக்கிற சங்கடங்கள் எல்லாம், மருத்துவர்கள் மனம் திருந்தி அவர்களுடைய நிலைமையை, கடமையை உணர்ந்து ஏழை எளிய மக்களுக்கு மருத்துவச் சேவை செய்ய வேண்டுமென்ற சேவை மனப்பான்மையோடு அவர்கள் பணியாற்றுவார்களேயானால், நிச்சயமாக இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

**திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட வளத்தி ஆரம்ப சுகாதார நிலையத்தின் மேற்கூரைகள் இடிந்து விழுந்துவிட்ட நிலையிலே பழுதடைந்துள்ளது. இவற்றைச் சரி செய்ய டாக்டர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு இந்த நிதியாண்டிலே நிதியை ஒதுக்கித் தருமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட துணை இயக்குநர் மூலமாக உடனடியாக இந்தப் பணியை எடுத்துக்கொள்வதற்கு உத்தரவிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி முருகேசன்.

**திருமதி செல்வி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைக்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி என்னுடைய காங்கேயம் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் இன்னும் சில மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. அவற்றை தற்போது உடனடியாக நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன்.

[2002 ஏப்ரல் 2

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே நடப்பு நிதியாண்டிலே புதிய சுகாதார நிலையங்கள் தொடங்குகின்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே வாழ்ந்து வருகின்ற, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கோ அல்லது துணை சுகாதார நிலையங்களுக்கோ சென்று சிகிச்சை பெறவேண்டுமானால் சுமார் 10 அல்லது 15 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று அவர்கள் சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. பாமர, ஏழையெளிய மக்களுடைய அரசாக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே, அந்த நிலைமையை மாற்றி மீண்டும் நடப்பு நிதியாண்டிலே புதியதாக தமிழகத்திலே ஆரம்ப சுகாதார நிலையங்களையும் துணை சுகாதார நிலையங்களையும் தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட மாட்டாது என்று நான் சொல்லவில்லை. இன்றைக்குள்ள நிலைமையிலே, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தி அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும், அதற்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்றும் அரசு முடிவெடுத்திருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொஞ்சம் தாராளமாக முன்வந்து நிதியை எங்களுடைய துறைக்குக் கொடுப்பார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற தேவையான அத்தியாவசியமான இடங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்போம். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு வேண்டுமானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த 10 மாதங்களில் யாருமே சாதிக்க முடியாத அளவிற்கு மிகவும் நேர்மையாக



2002 ஏப்ரல் 2]

மருத்துவத் துறையின் மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோதிலும் இங்கே நமது மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி இன்னும் அவைபோன்ற பல குறிப்பிட்ட மாவட்டங்களில் மருத்துவர்கள் பதவி ஏற்க மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி நீலகிரி மற்றும் பெரம்பலூர் போன்ற மாவட்டங்களில் நாங்கள் பணிபுரிகிறோம் என்று—எம்ப்ளாய்மெண்ட் சீனியாரிட்டி இல்லாவிட்டாலும்—அவர்கள் முன்வருகின்ற நேரத்தில், அவர்களுக்கு முன்னுரிமை தரப்படுமா? அவர்களுக்கு அந்த வாய்ப்பை அளிக்க முன்வருவீர்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை கேட்பதற்கு நன்றாக இருக்கும். ஆனால், அவர் சொல்கின்ற முறையிலே மருத்துவர்களைத் தேர்ந்தெடுத்தால், யாராவது ஒருவர் கோர்ட்டுக்குப் போனால், அதற்குத் தடையாணையைப் பெற்றுவிடுவார்கள். யாராவது விரும்புகிற டாக்டர்களை நியமிக்கிற அளவிலே அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அல்லது அந்த மாவட்டத்திலே விரும்பி பணியாற்றுகின்றவர்களை சீனியாரிட்டி இல்லாமல் அல்லது தேர்வு முறை இல்லாமல் நாம் நடவடிக்கை எடுத்து நிரப்புவோமேயானால், யாராவது ஒரு மருத்துவர் நீதிமன்றம் சென்றால்கூட அதற்குத் தடையாணை பெற்றுவிடுவார்கள். அதனாலே அப்படி எடுக்கப்படுகின்ற நடவடிக்கைக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமான டாக்டர்களை அங்கே நியமிக்கின்றபோது அவர்கள் 6 மாதத்தில் விடுப்பு எடுத்துச் செல்வதெல்லாம் உண்மைதான், நடைமுறை சிக்கல்தான். ஆனால், இப்போது நீங்கள் ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கின்ற மருத்துவர்கள், தற்காலிகமாக 10(a)(1) முறையிலே நியமிக்கப்படுகின்ற மருத்துவர்களுக்கெல்லாம் விதிமுறைகளிலேயே விடுப்பு எடுப்பதற்கு உரிமைகள் கிடையாது. ஆகவே, தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற மருத்துவர்களோ, ஒப்பந்த அடிப்படையிலே நியமிக்கப்படுகின்ற மருத்துவர்களோ அங்கே நியமிக்கப்படுகின்றபோது—நீங்கள் சொல்வதைப் போல 2 ஆண்டு காலம் பணியாற்ற வேண்டும் என்று சொன்னால் அவர்கள் விடுப்பு எடுப்பதற்கு வாய்ப்பு இல்லாதபோது அவர்களைத் தொடர்ந்து

அங்கே பணி செய்ய இந்த அரசு வலியுறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்

புள்ளிகள் 10-

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன அந்த நிபந்தனையின் அடிப்படையில்தான் மருத்துவர்களை நியமிக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் எங்களுக்கும் தெரியாமல், அந்த துணை இயக்குநருக்கும் தெரியாமல், அவர்கள் ஒரு டெபுடேஷன் மூலமாக விடுமுறை எடுத்துச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். எனவே, அங்கேயுள்ள துணை இயக்குநர் மூலமாக அவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் பணியிலே இருக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையிலே மருத்துவர்கள் எங்கே செல்கிறார்கள் என்றால் மாறுதலுக்கும் ஏற்பாடு செய்கிறார்கள். வேறு இடங்களுக்கு, வசதியான இடங்களுக்கு அல்லது நகர்ப்புறப் பகுதிகளுக்கு மாறுதலுக்கும் அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். அதனாலேதான் நியமிக்கப்படுகின்ற இடங்களிலேயே, அது கிராமப் பகுதியாக இருந்தாலும் சரி, மலைப் பிரதேசமாக இருந்தாலும் சரி, முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மருத்துவர்கள் கட்டாயம் பணியிலே இருக்க வேண்டுமென்கிற அந்த நிபந்தனையைக் கடுமையாக அறிவுறுத்தியிருக்கிறோம். மருத்துவர்களும் ஏதோ அரை மனதோடு சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முழு மனதோடு இருப்பார்களேயானால், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பொன்முடி அவர்கள் சொல்வதைப்போல நிச்சயமாக அனைத்துப் பணியிடங்களும் [illegible] நிரம்பும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த குறிஞ்சிப்பாடியில் கடந்த ஆண்டு [illegible] மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலமாக 10 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அடிப்படை வசதிகளான கூடுதல் கட்டடம், அதிக மருத்துவர்கள், கூடுதல் படுக்கை வசதி, எக்ஸ்-ரே பிரிவு போன்றவை அங்கே ஆரம்பிக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புவதோடு, தாங்களும்



[illegible] செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதி குறிஞ்சிப்பாடிக்கு கடந்த மாதம் அமைச்சர் அவர்கள் எனது தொகுதி குறிஞ்சிப்பாடிக்கு வருகை தந்தபோது அந்தப் புதிய மருத்துவமனையைப் பார்வையிட்டு, அடிப்படை வசதிகள் இல்லை என்பதை அவர்களே [illegible] கண்டறிந்துள்ளார்கள். கூடுதல் வசதி செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்கள். இந்த மாமன்றத்தின் மூலமாக அந்த உறுதியை நிலைநாட்ட வேண்டுமென்ற கோரிக்கையைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரிடம் பதில் இருந்தால் சொல்லுங்கள். இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்ய முடியாத அந்தப் பணிகளை, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலேதான் [illegible] செய்து, தன்னுடைய இடத்தைத் தக்க வைத்துக்கொள்ளலாம் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னால் நானும் அங்கே சென்றேன். மாண்புமிகு உறுப்பினரைக்கூடத் தேடிப் பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு பன்னீர் செல்வம், எங்கே போய்விட்டீர்கள்?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** நான் பார்வையிட்ட போது, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் தன்னுடைய உள்ளபடியே மாண்புமிகு [illegible] இலட்ச ரூபாய் என்று நினைக்கிறேன், நிதியிலிருந்து எடுத்து [illegible] இலட்ச ரூபாய் ஒதுக்கீடு அங்கே ஒரு கட்டடம் (குறுக்கீடு) 5 இலட்சம் (குறுக்கீடு) அதற்கு ஒதுக்கி அங்கே ஒரு கட்டடம் (குறுக்கீடு) [illegible] வசதி, கட்டட வசதியெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அருமையான கட்டடம் அங்கேயிருக்கிறது. [illegible] அதையும் அவர்கள் செய்து கொடுப்பார்களேயானால் நன்றாக இருக்கும். அது நல்ல இடமாக இருக்கிறது. எனவே, அதை விரிவுபடுத்த வேண்டுமென்பதுதான் நம்முடைய மாண்புமிகு [illegible] தலைவியினுடைய எண்ணம். காரணம் நல்ல இடம் [illegible] வசதிகளைச் செய்து கொடுக்கிற அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல அங்கே ஒரு எக்ஸ்-ரே யூனிட், ஒரு [illegible] ultra-sound scan [illegible] ஒரு கட்டடம்

[2002 ஏப்ரல் 2

புரட்சித் தலைவி அவர்கள்—எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும், அதுவும் நம்முடைய ஆட்சியை கடுமையாக விமர்சிக்கிற முன்னாள் அமைச்சர் பன்னீர்செல்வத்திற்காக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வசதிகளை, அதாவது ஒரு எக்ஸ்-ரே யூனிட், லெபாரெட்டரி, புற நோயாளிகளுக்கு கட்டடம், ultra-sound scan ஆகிய வசதிகளை—தாயுள்ளத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், கேள்வியா கேட்கப் போகிறீர்கள்?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், பன்னீர்செல்வம் அவர்கள் எம்.எல்.ஏ. நிதியிலிருந்து அங்கே காம்பவுண்ட் சுவர் கட்ட நிதி கொடுத்தால் பரவாயில்லை என்று சொன்னார்கள். எம்.எல்.ஏ. நிதியிலிருந்து காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு அரசிடமிருந்து அனுமதி வாங்கிக் கொடுத்தால் பன்னீர்செல்வம் அவர்கள் அதைக் கட்டத் தயார். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் அவர்கள் சொல்வதைப்போல காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு எம்.எல்.ஏ. நிதியைப் பயன்படுத்த முடியாதுதான். ஆனால், காம்பவுண்ட் சுவர் என்ற பெயரில் கட்டக் கூடாது. Safety wall என்ற பெயரில், அந்த அடிப்படையில் கட்டினால் அதற்கு அனுமதி உண்டு. அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அனுமதி அளிப்பார்கள். தாராளமாகக் கட்டலாம். Compound wall என்று போடக் கூடாது, safety wall என்ற அந்தப் பெயரிலே நீங்கள் அந்தப் பணியை எடுத்துக் கொண்டால் நிச்சயமாக உங்களுடைய நிதியிலிருந்து அந்தப் பணியை தொடங்குவதற்கு வழிவகை இருக்கிறது.

முற்பகல் 10-10

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....



2002 ஏப்ரல் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் எவ்வளவு safety-ஆன யோசனையைச் சொல்லி இருக்கிறார் என்று பாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இது safety-ஆன யோசனை அல்ல. இது பெரிய **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 58, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**58—**

## இரத்த வங்கி

***6516—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி ஏற்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலுள்ள பேராவூரணி காமராஜர் அரசு மருத்துவமனை, தாலுகா தலைமை மருத்துவமனை. அங்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கானபேர் சிகிச்சைக்கு வருகின்றனர். மற்றும் பேராவூரணியைச் சுற்றி இரண்டு மாநில நெடுஞ்சாலைகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

செல்கின்றன. அங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்காகச் செல்கின்றபோது இரத்தம் தேவைப்படுவோருக்கு தஞ்சையிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து பேராவூரணியிலே இரத்த வங்கி ஏற்படுத்த ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த வங்கியை அமைக்கிறபோது நம்முடைய அரசோ அல்லது எங்கள் துறையோ நினைத்தபடி நினைத்த நேரத்திலே அமைத்துவிட முடியாது. அப்படி ஒரு மருத்துவமனையிலே இரத்த வங்கி அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசும் அதேபோல, National Aids Control Organisation—NACO—அவர்களும் சில நிபந்தனைகளோடுதான் அந்த உரிமங்களை வழங்குகிறார்கள். அப்படி அந்த உரிமங்களை வழங்குகிறபோது கட்டடங்கள் இந்த அளவிலே இருக்க வேண்டும், இத்தனை அறைகள் இருக்க வேண்டும், அதேபோல இரத்தத்தைப் பாதுகாப்பதற்கு ரெமி ரெப்ரிஜிரேட்டர் போன்ற வசதிகள் இருக்க வேண்டும் என்பது போன்ற சில நிபந்தனைகளையெல்லாம் விதிக்கிறார்கள். அந்தவகையில் தஞ்சாவூரைப் பொறுத்தவரையில் தற்போது, கும்பகோணம், பட்டுக்கோட்டை, தஞ்சை மருத்துவக் கல்லூரி, ராஜா மிராசுதார் மருத்துவமனை மற்றும் 3 தனியார் இரத்த வங்கிகள் ஆகிய ஏழு இரத்த வங்கிகள் அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இரத்த வங்கிகள் ஆரம்பிப்பதற்கு புதிதாக கட்டுப்பாடுகள் இல்லை. எங்கு வேண்டுமானாலும் தேவையான இடங்களில் ஆரம்பிக்கலாம். ஆனால், இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு மைய அரசினுடைய உத்தரவைப் பெற்று, அதேபோல NACO-வினுடைய நிபந்தனைகளை நிறைவேற்றிய பிறகுதான் இரத்த வங்கிகளை அமைக்க முடியும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேராவூரணியைப் பொறுத்தவரையில் அங்கே தேவை என்று கருதுவாரேயானால் அதற்கான முன்மொழிவுகளை அனுப்பி அங்கே ஆரம்பிப்பதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. எஸ். தாமோதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.





59—

## குடிநீர்

***1492—திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் தொகுதி, நெடுங்குளம் ஊராட்சியின் உட்கிடை கிராமமான பவளமாலைப்பட்டியில் கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு கக்கன் காலனியிலிருந்து பதிக்கப்பட்டுள்ள குழாய் இணைப்பு மிகவும் தரம் குறைவாக உள்ளதால் குடிநீர் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் தொகுதி, நெடுங்குளம் ஊராட்சியில் உள்ள பவளமாலைப்பட்டி குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.4.72 இலட்சங்கள் மதிப்பீட்டில் 2000-2001ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு இக்குடிநீர்த் திட்டத்திற்கான குடிநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டன. இத்திட்டம் 2000 ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு அதே ஆண்டு நவம்பர் மாதம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் ஊராட்சித் தலைவர் வசம் ஒப்படைக்கப்பட்டு ஊராட்சியின் பராமரிப்பில் உள்ளது. இந்தத் திட்டமானது கடந்த கால அரசில் நடைபெற்ற பணியாகும். ஒருவேளை தரம் குறைந்த குழாய்கள் இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு இவ்வாறு தரம் குறைந்த அல்லது அளவு குறைந்த குழாய்களைப் பயன்படுத்தக்கூடாது என்று துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் தரம் குறைந்த குழாயை மாற்றிவிட்டு வேறு குழாய்களை அமைப்பதற்கு ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவளமாலைப்பட்டியிலே 300-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்குள்ள குழாய்கள் மிகத் தரக்குறைவாக உள்ளதால் அடிக்கொருதரம் வெடித்து விடுவதால் தண்ணீர் உரிய முறையில் விநியோகம் செய்ய இயலாமல் இருக்கிறது. இந்த கிராமத்தில் வசிக்கும் மக்கள் நலன் கருதி, பஞ்சாயத்தில் போதிய

[2002 ஏப்ரல் 2

நிதி ஆதாரம் இல்லாததால் அரசே அந்த பாழ்பட்ட குழாய்களை மாற்றி புதுக் குழாய்களை அமைத்து இந்த ஊர் மக்களுக்கு தண்ணீர் அளிக்க, முறையாக விநியோகம் செய்ய அரசு முன்வருமா? அதேபோல, அருகிலேயுள்ள முத்தலாபுரம் பஞ்சாயத்திலேயுள்ள குழாய்களிலே வேர்கள் புகுந்து, தண்ணீர் செல்வதைத் தடுத்து, விநியோகம் பாதிக்கப்படுகிறது. இவற்றையும் மாற்றிதர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழாய்களை மாற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் நடவடிக்கை எடுத்து அதை நிவர்த்தி செய்வதற்கு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் போடுகிறபோது, பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதி எனக்கு அடிஷனலாகத் தேவைப்படுகிறது. திருமங்கலம் தொகுதியில்—நீங்கள் பேரவைத் தலைவராக இருக்கின்ற காரணத்தால் கேள்வி கேட்க முடியாத காரணத்தால், வாக்காளர் என்ற முறையில் நான் கேள்வி கேட்கலாம் என்று ஆசைப்படுகிறேன். திருமங்கலம் தொகுதியில்—திருமங்கலம் நகர மன்றத்தில், அங்கே வாழக்கூடிய 30,000, 40,000 மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹக்கீம், இது கேள்விக்குத் தொடர்பற்றது.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** இல்லை, இல்லை. குழாய்க்காகக் கேட்கிறேன்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**60—**

**சோடியம் மின் விளக்குகள்**

***6756—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 2]

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியிலுள்ள காரியாப்பட்டி, மல்லாங்கிணறு ஆகிய பேரூராட்சிகளில் சோடியம் மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள காரியாப்பட்டி பேரூராட்சியில் 60 சோடியம் ஆவி விளக்குகளும், 497 குழல் விளக்குகளும், 2 மெர்க்குரி விளக்குகளும், ஒரு ஹை-மாஸ் விளக்கும், ஆகமொத்தம் 560 மின்விளக்குகள் உபயோகத்தில் உள்ளன. மல்லாங்கிணறு பேரூராட்சியில் 60 சோடியம் ஆவி விளக்குகளும், 236 குழல் விளக்குகளும், ஆகமொத்தம் 296 மின் விளக்குகள் உபயோகத்தில் உள்ளன. எனவே, இவ்விரு பேரூராட்சிகளிலும் கூடுதலாக சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும்பட்சத்தில் மின்கட்டணம், உபகரணங்கள் மற்றும் தொடர் பராமரிப்புச் செலவினத்தால் கூடுதல் செலவின வகையில் பேரூராட்சிக்கு நிதிச் சுமை ஏற்படும். எனவே, காரியாப்பட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கு புதியதாக சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இந்தத் தொகுதியில் காரியாப்பட்டி, மல்லாங்கிணறு ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மட்டும்தான் இருக்கின்றன. ஒவ்வொரு பேரூராட்சியிலும் 25,000-க்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். எனவே, மேலும் அங்கே மின் விளக்கு வசதி தேவைப்படுகிறது. சோடியம் விளக்குகள் அமைக்காத பட்சத்தில், குழல் விளக்குகளை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழல் விளக்குகள் அமைப்பதற்கு அந்தந்தப் பேரூராட்சிகளில் நிதிநிலையைப் பற்றி எங்களுக்குத் தீர்மானம் போட்டு அனுப்புகிறபோது அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 61, திருமதி எஸ். ராஜம்மாள், திரு. எஸ்.எஸ். மணி நாடார், திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**61—**

**மானிய விலையில் மண்ணெண்ணெய்**

* **7527—திருமதி எஸ். ராஜம்மாள்:**
**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**
**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுமர மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலுள்ள கட்டுமர மீனவர்களுக்கு ஒரு லிட்டருக்கு 50 பைசா மானியமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. அதன் வாயிலாக ஒரு வருடத்திற்கு 1500 ரூபாய் மானியம் கிடைத்தது. ஒரு வருடம் முழுவதும் உள்ள Bill-ஐச் சேர்த்து வைப்பதில் சிரமம் ஏற்பட்டதால், அந்த Bill-ஐச் சரிவர கொடுக்காத காரணத்தினால் நிறுத்தப்பட்டதாக T.S.O. அவர்கள் காரணம் சொல்கிறார்கள். இந்த ஏழை கட்டுமர மீனவர்களுக்காக விதிமுறைகளைத் தளர்த்தி A.D. அல்லது அந்த சொசைட்டியினுடைய தணிக்கை அலுவலர் கையெழுத்தைப்



2002 ஏப்ரல் 2]

போட்டு, அதன் வாயிலாக அவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்க வழி செய்வீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரை, பொது விநியோகக் கடைகளுக்கு முழுக்க முழுக்க மத்திய அரசினுடைய ஒதுக்கீட்டின் அடிப்படையிலேதான், அவர்களுடைய ஒதுக்கீட்டை நம்பியேதான் இந்த பொது விநியோகத் திட்டத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய வேண்டியிருக்கிறது. தற்போது நம்முடைய மாநிலத்தில் மொத்த மண்ணெண்ணெய் தேவை 74,781 கிலோ லிட்டராகும். மத்திய அரசு தற்போது மாநிலத்திற்கு 67,876 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை மட்டுமே ஒதுக்கீடு செய்து வருவதால், இது மாநிலத்தின் தேவையைவிட 6,905 கிலோ லிட்டர் குறைவாகும். மாநிலத்தின் தேவைக்கு ஏற்ற வகையிலே மத்திய அரசின் ஒதுக்கீடு இல்லாத நிலையில், கட்டுமர மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெயை வழங்குவது தற்போது இயலாத காரியமாக இருக்கிறது. மேலும், இப்போது மத்திய அரசு ஒரு லிட்டரை 9.00 ரூபாய்க்கு பொது விநியோகத் திட்டத்திலே வழங்குவதற்கு முடிவெடுத்து அறிவித்து நடைமுறைப்படுத்தியிருக்கிறது. அதிலேயும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசு, சாதாரண மக்கள் பயன்படுத்துகிற இந்த மண்ணெண்ணெயை வழங்குவதிலே அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேதான், 9 ரூபாய்க்கு மத்திய அரசு கொடுத்தாலும்கூட, ஒரு லிட்டருக்கு 60 பைசா மானியமாக வழங்கி, 8 ரூபாய் 40 பைசாவிற்குத்தான் தமிழகத்திலே இருக்கிற அத்தனை 'கார்டு ஹோல்டர்ஸ்'-க்கும் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தற்போது மீனவர்களுக்கு இதை வழங்க முடியாத நிலையிலே அரசு இருக்கிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே கட்டுமர மீனவர்களுக்கு மானிய

[2002 ஏப்ரல் 2

விலையிலே மண்ணெண்ணெய் வழங்க இயலாத காரணத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அப்படிச் சொல்கின்ற நேரத்திலே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து சாதாரண ஏழையெளிய மக்களுக்கு 8 ரூபாய் 40 காசுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்கக்கூடியத் அந்தத் திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது கட்டுமர மீனவர்கள் கடலுக்குச் சென்று திரும்பி வருவது கேள்விக்குறியாக இருக்கக்கூடிய நிலை; வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாத நிலை. இவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மக்கள் நலனிலே அக்கறை கொண்டிருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய அரசு இவர்கள் மீது கருணைகூர்ந்து எந்தவகையிலாவது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை, வறுமைக்கோட்டிலிருந்து உயர்த்துவதற்கு நல்ல நோக்கத்தோடு மானிய விலையிலே மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்பது, அவசிய அத்தியாவசியத் தேவையாக இருக்கின்ற காரணத்தினாலே அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு—அந்த சங்க உறுப்பினர்கள் மாதம் 80 ரூபாய் செலுத்துகிறார்கள். அப்படி 80 ரூபாய் செலுத்துகின்ற நேரத்திலே—மத்திய அரசு நிதியாக, மாநில அரசு நிதியாக இரண்டு மடங்குத் தொகை வழங்கப்பட்டு, ஆண்டுக்கு 2,400 ரூபாய் வழங்குவதாக உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று மீனவர் சங்க உறுப்பினர்களெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைக் கூடுதலாக வழங்க அரசு முன்வருமா? அதேநேரத்திலே, ஆண்களாக இருக்கக்கூடிய உறுப்பினர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்கள் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய சங்கங்களில், அந்த உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய உதவித் தொகையை, மீன்பிடித் தொழிலில், மீனை விற்பனை செய்யக்கூடிய மகளிர், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பெண்களுக்கும் அந்த நிவாரணத் தொகை—அதாவது அந்த நிவாரணத் தொகை தேசிய மீனவர் நிவாரண நிதி என்று வழங்கப்படுகிறது. அந்த நிவாரண நிதி—பெண்களுக்கும் சேர்த்து வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 2]

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொல்லியிருக்கிற ஆலோசனைகளையெல்லாம் மீன்வளத் துறை தீவிரமாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவ்ர் அவர்களே, மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று திரும்பி வரும்போது, சில நாட்கள் மண்ணெண்ணெய் வாங்கக்கூட இயலாமல், அவர்களுக்கு வருமானம் இல்லாத நிலை ஏற்பட்டுவிடுகின்றது. 'Out-Board Engine', பொருத்தி, அதற்கு மண்ணெண்ணெய் வாங்கும்போது, வெளி மார்க்கெட்டில் 20 ரூபாய் வரை கொடுத்து வாங்குகின்றார்கள். நமது அண்டை மாநிலமான கேரளாவில் ஒவ்வொரு மீனவருக்கும் மாதந்தோறும் 400 லிட்டர் மண்ணெண்ணெய் நியாயவிலைக் கடை மூலம் வழங்கப்படுகிறது. அதுபோல, நமது மீனவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவர்களும் பரிசீலிப்பதாக நினைக்கின்றேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழக ஏழை மீனவர்களுக்கு கேரளாவில் வழங்குவது போன்று மாதம் 400 லிட்டர் மண்ணெண்ணெயை ரேஷன் விலையில் வழங்குவதற்கு, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் பரிந்துரையைப் பெற்று அறிவிக்க வேண்டும்; அறிவிப்பீர்களா என்று நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை, மத்திய அரசு லிட்டருக்கு 9 ரூபாய் விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தாலும்கூட, கருணையுள்ளம் கொண்ட, தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாதாரண மக்கள் பயன்படுத்துகிற இந்த மண்ணெண்ணெயை 60 பைசா மானியத்திலே 8 ரூபாய் 40 பைசாவிற்குக் கொடுத்தால் போதும் என்று உத்தரவிட்டு, அது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள், மீனவர்களுக்குக் கேட்டிருக்கிற இந்தச் சலுகை குறித்து, மீன்வளத் துறையுடன் கலந்தாலோசிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி.

*முற்பகல் 10-55*

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களுக்கு மானிய விலையிலே மண்ணெண்ணெய் தர முடியாத சூழ்நிலை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கெனவே மானிய விலையிலே டீசல் தரப்பட்டு வந்தது. அது தொடர்ந்து தரப்படுகிறதா அல்லது அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மண்ணெண்ணெயோடு நில்லுங்கள்.

வினா எண் 62. திரு. ஆஸ்டின், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**62—**

**சப்போட்டா பழங்கள் ஏற்றுமதி**

***3818—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உற்பத்தியாகும் சப்போட்டா பழங்களை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உற்பத்தியாகும் சப்போட்டா பழங்களைப் பதப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போதில்லை.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்போட்டா பழங்கள் திண்டுக்கல் மாவட்டத்தில், குறிப்பாக, வேடசந்தூர் தாலுகா பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் சில பகுதிகளிலும் அதிகமாக விளைகின்றன. அந்தப் பகுதிகளிலே கிட்டத்தட்ட 10 இலட்சத்திற்கும் அதிகமான சப்போட்டா மரங்கள்



2002 ஏப்ரல் 2]

இருக்கின்றன. ஒரு மரத்திலேயிருந்து ஆண்டிற்கு 50 கிலோ முதல் 80 கிலோ வரை சப்போட்டா பழங்கள் நமக்குக் கிடைத்து வருகின்றன. தற்போது வத்தலகுண்டு பகுதியிலே, குறிஞ்சி Food Processing unit என்ற ஒரு தனியார் நிறுவனம் சப்போட்டா பழங்களைப் பதப்படுத்தி அதை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து நல்ல வருமானம் வந்து கொண்டிருக்கிறது. இதைப்போல பெரிய அளவிலே அரசு ஒரு Food Processing unit-ஐ அந்தப் பகுதியிலே தனியாகவோ அல்லது தனியாருடன் இணைந்தோ ஏற்படுத்தி அங்கே விளையக்கூடிய அதிகமான சப்போட்டா பழங்களைப் பதப்படுத்தி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தால், அதன்மூலமாக அரசுக்கு வருமானமும் அன்னியச் செலாவணியும் கிடைக்கும் என்ற அடிப்படையிலே வரக்கூடிய ஆண்டிலாவது அரசு இதைக் கருத்திலே கொண்டு சப்போட்டா பழங்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததுபோல விவசாயத் துறையை மேம்படுத்துகிற வகையிலே, அதைச் சார்ந்த தொழில்களை வளப்படுத்திட வேண்டுமென்கின்ற வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவதாக அறிவித்து இருக்கிறார்கள். அது சாத்தியப்படுமானால் அந்தத் திட்டங்கள் அந்தப் பகுதியிலே நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்களில், பல்வேறு வகையான பழங்கள் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன. பழங்களைப் பதப்படுத்தி வெளி நாட்டிற்கு அனுப்புவதற்கான திட்டம் ஏதேனும் வேளாண்மைத் துறையின் பரிசீலனையில் இருக்கிறதா? குமரி மாவட்டத்திலே, ஏராளமான அன்னாசிப்பழம் உற்பத்தியாகின்றது. அதைப் பயன்படுத்துவதற்கு கூட்டுறவுத் துறையில் ஓர் ஆலை அங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், போதுமான அளவிற்கு அது function செய்யாததன் காரணமாக, அங்கே இப்போது அந்த ஆலை நடைமுறையிலே இல்லாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதை மாற்றுவதற்கு, அன்னாசிப்பழத்தை பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை, வேளாண்மைத் துறை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு பழங்களை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று சொன்னால், வெளிநாடுகளில் எல்லாம், இப்போது இயற்கை உரங்களால், இயற்கை Farm-ல் தயாரிக்கப்படுகின்ற உணவுப் பொருட்களுக்குத்தான் அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக, கொல்லிமலையிலே தயாராகின்ற அன்னாசிப்பழத்திற்கு வெளிநாடுகளில் நல்ல ஏற்றுமதி வாய்ப்பு இருக்கிறது; அதிகமாக விற்கப்படுகிறது. ஆகவே, இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் இயற்கை உரங்களின் மூலமாகத் தயாரித்தால் வெளிநாடுகளில் அதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் புதுமையைப் புகுத்த வேண்டும், வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மையங்களை வட்டந்தோறும் அமைக்க வேண்டும். அதைப்போலவே புதிய வகையான வித்துக்களை அறிமுகப்படுத்திட வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளதாகச் சொல்லும் இந்த அரசு ஏற்கெனவே உற்பத்தியாகி உள்நாட்டில் வியாபாரம் இல்லாமல், வெளிநாட்டில் ஏற்றுமதியும் இல்லாமல், நொடித்துப் போய் இருக்கிற விவசாயப் பெருமக்களை, அதுவும் தோட்டக் கலைத் துறையை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல. வேண்டுமென்ற அக்கறை கொண்டிருக்கின்றதாகச் சொல்லும் இந்த அரசு-தேனி மாவட்டம், கம்பம் பகுதியிலே உலகத் தரம் வாய்ந்த திராட்சைப் பழங்கள் உற்பத்தியாகின்றன. அவற்றை உள்நாட்டிலும் சந்தைப்படுத்த முடியாமல், வெளிநாட்டிலும் ஏற்றுமதி செய்ய முடியாமல் அவதிப்படுகின்ற விவசாயிகள் அந்தத் திராட்சைப் பழத்தைப் பயன்படுத்தி ஒயின் தொழிற்சாலை தொடங்குவதற்கு அரசு அனுமதிக்க வேண்டுமென்று கடந்த 10 ஆண்டுக் காலமாக அப்பகுதி விவசாயப் பெருமக்கள் போராடி வருகிறார்கள். அதைப்போலவே, நிலக்கோட்டைப் பகுதியிலும் ஏராளமான அளவில் திராட்சைப் பழங்கள் உற்பத்தியாகின்றன. எனவே-திராட்சை விவசாயிகளுடைய நீண்டகால கோரிக்கையை மனதிலே வைத்து அந்தப் பகுதியிலே ஒயின் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி அளிக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உலக அளவில் எடுத்துக்கொண்டால், அதிகமாக பழம் உற்பத்தி செய்யக்கூடிய நாடு இந்தியாதான். ஆனால், ஏற்றுமதி என்று எடுத்துக்கொண்டால், ஒரு சதவீதம் அளவிற்குத்தான் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு நமது ஏற்றுமதி நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், நாம் தயாரிக்கின்ற அந்தப் பழங்கள் அவர்களுக்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு தரத்தை உயர்த்தி தயார் செய்யப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தேனி போன்ற பகுதிகளிலே திராட்சைப் பழங்கள் அதிகமாக விளைகின்றன. அங்கே தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். அதை அரசு பரிசீலிக்கும், சிந்திக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, சப்போட்டா, தக்காளி, மாங்காய், திராட்சை போன்ற பழங்கள் அதிகமாக விளைகின்றன. சென்ற ஆட்சியிலே அவற்றையெல்லாம் சேமித்து வைப்பதற்காக குளிர்சாதனக் கிடங்கு அமைக்க Agriculture Marketing Committee மூலமாக 3½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இன்னும் அந்தப் பணி ஒட்டன்சத்திரத்திலே ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு குளிர் சாதனக் கிடங்கு அமைப்பதற்கு முன் வருவார்களா, வேலையை விரைவாக செய்வதற்கு உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆய்விலே இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 2

**63—**

**விதைப் பண்ணை**

***8715—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றிய விவசாய விதைப் பண்ணை திருப்பத்தூரில் உள்ளதால், கந்திலியில் விதைப் பண்ணையை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றிய விவசாய விதைப் பண்ணை திருப்பத்தூரில் உள்ளதால், கந்திலியில் விவசாய விதைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நாட்ராம்பள்ளி தொகுதியிலுள்ள, கந்திலி ஊராட்சி ஒன்றியம், 39 சிற்றூராட்சிகளைக் கொண்ட ஒன்றியம். இந்த ஊராட்சி ஒன்றியத்தில் வசித்து வரும் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட விவசாய விதைக் கிடங்கு, திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட திருப்பத்தூர் நகராட்சியில் இருந்து வருவதால், விவசாயப் பெருமக்கள் விதைகளை வாங்கிச் செல்ல அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த விதைப் பண்ணையை கந்திலி ஊராட்சி ஒன்றியத்தின் மையப் பகுதியான கொரட்டி ஊராட்சியில் அமைத்துத் தர மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என உங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஆய்வு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 2]

**64—**

**உதவித் தொகை**

***6872—திரு. கு. அண்ணாமலை:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணி கிராமத்தில் கடந்த காலத்தில் சரிவர விதவைகள் உதவித் தொகை கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்குறைபாடு எப்பொழுது நிவர்த்தி செய்யப்படும்?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கீழப்பாவூர் ஒன்றியம், கல்லூரணி கிராமத்தில் விதவை உதவித்தொகை பெறும் பயனாளிகள் எவரும் இல்லை. விதவை உதவித் தொகை வழங்கக் கோரி பிப்ரவரி மற்றும் ஜூன் மாதங்களில் 9 மனுக்கள் பெறப்பட்டன. விசாரணையின் பேரில் மனுதாரர்கள் அனைவரும் உழைக்கும் திறன் உள்ளவர்கள் என்றும், பீடி சுற்றும் தொழில் மூலம் கூலி வருமானம் பெறுவதால் விதவை உதவித் தொகை பெற தகுதியின்மை காரணமாக நிராகரிக்கப் பட்டுள்ளது. இருப்பினும் தற்போது விதவை உதவித் தொகை பெறாத தகுதியானவர்கள் எவரேனும் இருப்பதைக் கண்டறிந்து அவர்களிடம் மனுக்கள் பெற்று நடவடிக்கை எடுக்க கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தில் உறுப்பினர் ஆக்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பீடித் தொழில் நிரந்தர வருமானம் வரக்கூடிய தொழில் இல்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே படிப்பறிவின்றி நோய்களுடன் போராடும் வயதான விதவைகளின் நலன் கருதி அவர்களுக்கு உதவிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 2

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவைத்திலிருந்து பறந்து வந்து கூண்டில் அடைபட்டதலால் ஆஸ்மி என்ற குயிலுக்கு விடுதலை தந்து, கூடு கட்ட மரம் தர பரிந்துரை செய்த கொடைவள்ளல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). மனிதாபிமானத்திற்கு குறுக்கே மதம் இல்லை, இனம் இல்லை, மொழி இல்லை என்று நிரூபித்த உலகப் பெண் குலத்தின் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதவைத் தாய்மார்களுக்காக முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு என்ன சலுகைகளோ அதைக் கொஞ்சம் தளர்த்தி 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும், தகுதியின் அடிப்படையிலே திருமணமாகி, விதவையாகி மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற பெண்களுக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வழங்க வேண்டுமென்று இப்போது அறிவுறுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, ஆய்ந்து செயல்படுத்துவதற்கு ஆலோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்த வழக்கில் தமிழகத்தின் சார்பில் வாதாடும் வழக்கறிஞர் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆற்காடு.....

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பத்திரிகையிலே படித்ததையும், கேட்டதையும் வைத்துக்கொண்டு, உங்கள் மூலமாக, இந்த அரசிடமிருந்து குறிப்பாக, சிறப்பாக, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து சில விளக்கங்களைப் பெற விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 2] [திரு. துரைமுருகன்]

காவிரிநீர்ப் பங்கீட்டிற்காக ஒரு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, அந்த மன்றத்தில் பல ஆண்டுகளாக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அந்த மன்றத்திலே, நம்முடைய அரசின் சார்பில், திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலும் சரி, முன்பு அ.தி.மு.க. அரசு இருந்த காலத்திலும்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருந்த அ.தி.மு.க. அரசு காலத்திலும் சரி—பிறகு நாங்கள் வந்த காலத்திலும் சரி, அந்த வழக்கைத் தமிழ்நாட்டின் சார்பில், மூத்த வழக்கறிஞராக, அட்டர்னி ஜெனரலாக இருந்த திரு. பராசரன் அவர்கள்தான், நம்முடைய தமிழ்நாட்டின் சார்பிலே வழக்கறிஞராக நின்று வாதாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது, பொதுப் பணித் துறையில் பொறுப்பு வகித்துக் கொண்டிருந்த காரணத்தினால் நான் அறிவேன். மிகச் சிறந்த வழக்கறிஞர்; பொறுப்புடன் இருந்தார். இன்னும் சொல்லப்போனால், fees கூட அவ்வளவு demand செய்யமாட்டார். ஏனென்றால், இது நாட்டுக்குச் செய்யக்கூடியது என்பதால், எப்போதாவது சில நேரங்களில்தான் fees கூட வாங்குவார். அவ்வளவு பெரிய ஒரு வழக்கறிஞரை எடுத்துவிட்டு, இப்போது அவரை வேண்டாம் என்று சொல்லிவிட்டு, வேறு யாரையோ நியமித்திருக்கிறார்கள். அவர்கள்கூட அந்த வழக்கிலே தொடர்ந்து அவருக்கு ஜூனியராக இருந்தவர்கள்தான். ஆனாலும், கர்நாடக மாநிலத்தின் சார்பிலே வழக்காடுகிறவர் திரு. நாரிமன், மிகப் பெரிய ஜாம்பவான். அவரை எதிர்த்து நின்று வாதாடக்கூடிய அளவிற்கு திரு. பராசரன் போன்ற மூத்த வழக்கறிஞர்களால்தான் முடியும். அவரை ஏன் எடுத்தார்கள் என்ற விளக்கம் எனக்குப் புலப்படவில்லை. அவராக நான் வழக்காட வரவில்லை என்று சொன்னாரா? அல்லது இந்த ஆட்சி அவரை வேண்டாம் என்று சொல்லிவிட்டதா? அப்படி எது நடந்திருந்தாலும் மீண்டும் அப்படிப்பட்ட ஒரு மூத்த வழக்கறிஞர் இருந்து அந்த வழக்கை நடத்துவதுதான் நம்முடைய தமிழ்நாட்டிற்கு நல்லது; நமக்கும் நல்லது. எனவே, என்ன நடந்தது என்பதை மாண்புமிகு முதலமைச்சரோ, பொதுப் பணித் துறை அமைச்சரோ, தெரிவிக்கலாம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான விளக்கத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் தரவிருக்கிறார்கள். அதற்கு முன்பு, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய சில கேள்விகளுக்கு பதில் தருவது அவசியம் என்று கருதுகிறேன். மூத்த வழக்கறிஞர் திரு. பராசரன் அவர்கள் வர முடியாது; வழக்காட முடியாது என்று சொல்லிவிட்டாரா அல்லது

இந்த ஆட்சி அவரை வேண்டாம் என்று சொல்லிவிட்டதா என்ற கேள்வியை எழுப்பினார். கடந்த ஆண்டு, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கர்நாடக மாநிலம் நமக்கு வரவேண்டிய காவிரி நீரை, உரிய நேரத்தில் விடுவிக்கத் தவறியபோது, விடுவிக்க மறுத்தபோது, வேறு வழியின்றி—அப்போது காவிரி டெல்டா பகுதியில் பயிர்கள் எல்லாம் வாடிவிடுகின்ற அபாயம் இருந்த நேரத்தில், வேறு வழியின்றி-உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோம். அந்த வழக்கை திரு. பராசரன் அவர்கள்தான் முன்னின்று நடத்த வேண்டுமென்று நானே அப்போது கோரிக்கை விடுத்தேன். அப்போது, ஏதோ காரணங்களால் மத்திய அரசுக்குச் சாதகமாக திரு. பராசரன் அவர்கள் செயல்பட்ட காரணத்தினால், குறிப்பிட்ட தேதிக்குள் வர முடியாது என்று அவர் மறுத்துவிட்டார். தமிழ்நாட்டிற்கு ஒரு நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டபோது, குறிப்பிட்ட காலத்திற்குள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தே ஆகவேண்டுமென்ற நிலை இருந்தபோது, திரு. பராசரன் அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். அவருடைய கடமையை அவர் தட்டிக் கழித்துவிட்டார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆற்காடு, கவரம்பாளையம் .... *(குறுக்கீடு)*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர் தாவாவில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காடுவதற்கு வழக்கறிஞர் திரு. பராசரனை நம்முடைய அரசு அழைக்காததற்கு எந்தவித அரசியல் உள்நோக்கமும் இல்லை என்பதை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். மூத்த வழக்கறிஞர் திரு. கங்குலி அவர்களை அந்த வழக்கில் வழக்காடுவதற்கு அரசு நியமனம் செய்து, வழக்கு நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடு)*

*முற்பகல் 11-10*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பராசரன் அவர்களுடைய ஜூனியர் ஒருவர் நியமிக்கப்பட்டு





இருக்கிறார் என்று கூறியது உண்மைக்கு மாறான ஒன்று. கங்குலி என்பவரைப் பற்றி இந்தியத் துணைக் கண்டத்தில் கேள்விப்படாத எந்த ஒருவரும் இருக்க முடியாத அளவிற்கு, உச்ச நீதிமன்றத்திலே மிகத் தலைசிறந்த ஒரு வழக்கறிஞர். Senior Counsel of the Supreme Court என்ற முறையிலே அவரும் இந்த வழக்கிலே நியமிக்கப்பட்டு இருக்கிறார். உங்கள் ஆட்சிக் காலத்திலும் அவர் ஒரு Senior Counsel—ஆகவேதான் இருந்தார். கிட்டத்தட்ட 10 ஆயிரம் பக்கங்களுக்கு மேல் உள்ள தஸ்தாவேஜுகளை அவரே தயார் செய்திருக்கிறார். இருபது சாட்சிகள் மற்றும் 900 ஆவணங்களை எல்லாம் விசாரித்து, சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்து ஒரு பெரும் சிறப்பை ஏற்படுத்தியிருக்கிறார். அவர் ஒரு நல்ல நிபுணர். அந்த அடிப்படையில், உங்கள் ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டு, அவர் Senior Counsel என்ற முறையிலே இருக்கிறார்; அவர் இதைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். அதுமட்டுமல்ல, நமது Advocate-General திரு. என்.ஆர். சந்திரன் அவர்களும், மிகவும் திறமை மிக்க முன்னாள் சட்டச் செயலாளர் திரு. வடிவேல் அவர்களும், அவர்களோடு முத்துக்குமாரசாமி, Additional Advocate-General அவர்களும் இந்த வழக்கிலே உறுதுணையாக திரு. கங்குலியோடு இருக்கிறார்கள். சிறந்த முறையிலே வழக்கு நடத்தப்பட்டு வருகிறது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றம் ஒன்றும் சொல்லவில்லை. கங்குலி அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர்தான்; அதையெல்லாம் நான் சொல்லவில்லை. அவர் பராசரனுடன் இருந்து வழக்கை நடத்தியவர்; வேண்டுமானால் ஜூனியர் என்பதை எடுத்துவிடலாம்; அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே தெரியும். கங்குலியை நானும் 5 ஆண்டு காலம் அறிவேன். (மணியடிக்கப்பெற்றது) இந்த வழக்கு பல முறை ... (மணியடிக்கப்பெற்றது) நான் இந்த ஆட்சிக்கு தெரிவிக்க விரும்புவதெல்லாம், இன்னும் கொஞ்சம் மூத்த வழக்கறிஞரை—ஒரு மூத்த வழக்கறிஞரை—நீங்கள் நியமித்து வழக்காடினால்தான் தமிழகத்திற்கு வெற்றி வரும். நான் இப்பொழுது சொல்கிறேன். இதிலே ஏனோதானோ என்று இருக்காதீர்கள். தப்பித் தவறி ஏதாவது நடந்தால், அதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டியது- தமிழ்நாட்டுக்குச் சரியான நீதி கிடைக்காவிட்டால், அதற்குப் பொறுப்பு ஏற்க வேண்டியது—இந்த அரசாகத்தான் இருக்கும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் நான் இப்போதும் சொல்கிறேன். நாரிமனை meet பண்ணக்கூடிய அளவுக்கு ஒரு சிறந்த வழக்கறிஞரை தமிழக அரசு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் ஏனோதானோ என்று என்றைக்குமே இந்த அரசு இருந்தது கிடையாது; முந்தைய ஆட்சிக் காலத்திலும் இல்லை; இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சிக் காலத்திலும் இல்லை. ஆனால் தொடர்ந்து காவிரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு துரோகம் இழைத்தது தி.மு.க. ஆட்சியில் இருந்த காலங்களில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சுட்டிக்காட்டும்படி, அந்தக் கட்டாயத்திற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்னைத் தள்ளிவிட்டார் என்றே கூறவேண்டும். B.J.P. மத்திய கூட்டணி ஆட்சியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்தபோது, எந்தவிதமான அதிகாரமும் இல்லாத காவிரி நதிநீர் ஆணையத்தை அமைக்க மத்திய அரசு முன்வந்தபோது, அதை எதிர்த்து அதற்காக கூட்டணியிலிருந்தே விலகி, B.J.P. அரசுக்குக் கொடுத்துவந்த ஆதரவை வாபஸ் பெற்றது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், தமிழகத்திற்கு எந்தப் பலனும் அளிக்காத, எந்தவகையிலும் செயல்பட முடியாத காவிரி நதிநீர் ஆணையத்தை அமைக்க அன்றைக்கு ஆட்சியிலிருந்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள்தான் ஒத்துக்கொண்டார்; அவர்தான் அதில் கையெழுத்துப் போட்டார் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் ஏனோதானோ என்று இருந்து, மத்திய அரசின் தயவு கிடைத்தால் போதும் என்று இருந்ததனால்தான் தமிழகத்திற்கு மாறாத தீங்கு இழைக்கப்பட்டது என்பதை இந்தநேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனால்தான் அன்றையதினம் நாம் நமது உரிமையை நிலைநாட்ட ஒரு வாய்ப்பு கிடைத்தும்கூட, தி.மு.க. தலைவர், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அந்த வாய்ப்பை நழுவவிட்டதால், இன்றுவரை நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். இன்றுவரை தமிழ்நாட்டுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிச்சயமாக காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் இந்த அரசு ஏனோதானோ என்று இருக்காது. திரு. நாரிமன் அவர்கள் பெரிய வக்கீல்தான். அதைப்போலவே திரு. பராசரன் அவர்களும் அறிவார்ந்த வழக்கறிஞர்தான். ஆனால், அன்றையதினம் திரு. பராசரன் அவர்கள், மத்திய அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிரான ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, நமக்குத்



2002 ஏப்ரல் 2] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தேவைப்பட்ட நேரத்தில், கடந்த ஆண்டு நமக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில், சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர வேண்டும்; அதை நீங்கள் முன்னின்று நடத்துங்கள்; file செய்ய வேண்டிய suit-ன் draft-ஐ நீங்கள் தயார் செய்து கொடுங்கள் என்று கேட்டபோது, ஒத்துழைக்க மறுத்தார்; ஒத்துக்கொள்ளவில்லை. தமிழ்நாட்டிற்கு அன்றைக்கு அவர் துணை நிற்கவில்லை. இன்றைக்கு மத்திய அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் நட்புறவோடு இருக்கிறது. அதனால் இன்று மீண்டும் திரு. பராசரன் அவர்கள் உள்ளே நுழைய வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது எந்தவகையில் நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, திரு. கங்குலி அவர்கள் திறமையான வழக்கறிஞர் என்று இந்த அரசு நம்புகிறது. இன்னொரு பெரிய வழக்கறிஞரை ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதை நிச்சயம் இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, ஒரு வழக்கறிஞரை நியமிப்பதும், நியமிக்காததும் அந்த அரசினுடைய முடிவு. ஆனால், ஒரு எதிர்க்கட்சியிலே இருக்கிறவர் என்ற முறையில் சொல்ல வேண்டியதைச் சொன்னேன். அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் அவர்களுடைய பொறுப்பு. ஆனால், நான் சாதாரணமாக ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் ஏனோதானோ என்று சொன்னதால்தான் அவர் அந்தக் கருத்தைச் சொன்னார்.

**திரு. துரைமுருகன்:** ஆனால், முதலமைச்சர் அவர்கள் வாதத்தைத் தொடங்கி விட்டார்கள். நான் கூடுமானவரையில், இன்டர்ஸ்டேட்—அதாவது மாநிலங்களுக்கு இடையே ஓடுகிற அந்த நதிநீர்ப் பிரச்சினைகளில் அதிகமான விவாதத்திற்கு உள்ளே போகக்கூடாது என்ற எண்ணம் உடையவன். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம்தான் காவிரிப் பிரச்சினையிலே துரோகத்தை இழைத்தது என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திலே சொல்கிறேன், முதன்முதலாக நடுவர் மன்றம் அமைக்க

வேண்டுமென்று கேட்டதும் கலைஞர்தான்; அந்த நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்ததும் கலைஞர்தான். அந்த நடுவர் மன்றத்தில் இடைக்காலத் தீர்ப்பு வேண்டுமென்று கேட்டதும் கலைஞர்தான். அதை மறுத்த நேரத்திலே சுப்ரீம் கோர்ட் வரையிலே போனதும் கலைஞர்தான். ஆக, இன்றைக்கு வழக்கு நடந்து கொண்டிருப்பதற்கே முழுமுதல் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்தான். நான்—அம்மையார் அவர்களுக்கு—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு—ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு என்னைக் கொண்டுவந்து தள்ளிவிட்டீர்கள். ஆனால், நீங்கள் உண்ணாவிரதம் இருந்தீர்கள், நல்ல எண்ணத்திலேகூடத்தான். ஆனால், அந்தத் திட்டத்திலே நீங்கள் இரண்டு கமிட்டியைக் கேட்டீர்கள். சுக்லா வந்தார். ஆனால், அந்த இரண்டு கமிட்டி—உண்ணாவிரதம் நீங்கள் இருந்தீர்களே அந்த இரண்டு கமிட்டி—உங்களுக்குக் கிடைத்ததா? அந்த இரண்டு கமிட்டியைக்கூட நீங்கள் பெறாதது மட்டுமல்ல, உங்களால் ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி போட்டார்கள். அந்த ஸ்டாண்டிங் கமிட்டி வந்ததற்கே அ.தி.மு.க. அரசுதான், முதலமைச்சருடைய உண்ணாவிரதம்தான் காரணம். அந்த ஸ்டாண்டிங் கமிட்டியினுடைய நோக்கம் இம்ப்ளிமென்டேஷன் அல்ல. ஆனால், எங்கே அளப்பது தண்ணீரை, பில்லிகுண்டுவிலா மேட்டூரிலா என்ற புதுப் பிரச்சினையை விட்டு ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், காவிரிப் பிரச்சினையைப் பற்றிய விவாதம் அல்ல இப்போது. ஒரு வழக்கறிஞர் பற்றிய பிரச்சினையைப் பற்றிச் சொன்னீர்கள். அதற்கு முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அத்தோடு பிரச்சினையை முடியுங்கள். ஒரு வழக்கறிஞர் பிரச்சினையை நீங்கள் எடுத்தீர்கள். அதற்கு முதலமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். இன்னும் நீங்கள் காவிரிப் பிரச்சினைக்கு உள்ளே போய் அதிலே நீச்சல் அடிப்பது என்பது சரியல்ல. (குறுக்கீடு) நீங்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு முதலமைச்சர் பதில் சொன்னார்கள். ஏனோதானோ என்று இருக்கக்கூடாது என்ற குற்றச்சாட்டுக்கு முதலமைச்சர் பதில் சொன்னார்கள். (குறுக்கீடு) அதற்குத்தான் விளக்கம் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** அதைச் சொல்லியிருக்கலாம். நாங்கள் ஏனோதானோ என்று இல்லை. உஷாராக இருக்கவேண்டும் என்பதற்காகச் சொன்னேன். ஆனால், நான் தெரிவித்துக்கொள்கிறேன், காவிரிப் பிரச்சினையில், திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல;





இன்னும் சொல்லப் போனால் கமிட்டி வேண்டுமா என்று சுக்லா எழுதியதற்கு கிட்டத்தட்ட 13 மாத காலம் கழித்து பதில் எழுதியவர்தான் நம்முடைய முதலமைச்சர். ஆக, துரோகம் அ.தி.மு.க. பக்கமா? தி.மு.க. பக்கமா என்பது நாட்டுக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடுவர் மன்றம் அமைத்தோம் என்ற பெருமை தி.மு.க.விற்கு உண்டு என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். மைய அரசிலே தங்களுக்கு இடம் வேண்டும் என்ற நோக்கோடு அதிகாரத்தை மைய அரசிலே அனுபவித்து தமிழக மக்களுக்கு துரோகத்தை இழைத்தது தி.மு.க. என்பதற்கு ஒரேயொரு உதாரணம். வாரா வாரம், மாதா மாதம் காவிரி நதியிலிருந்து மேட்டூர் அணைக்கு முறைப்படி தர ஆணையிடப்பட்ட அந்தத் தண்ணீரை, அந்த இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்தாமல் மைய அரசினுடைய விருப்பத்திற்கு இணங்கிப் போனதால் கர்நாடக அரசுக்குச் சாதகமான முறையில் வாரா வாரம் தண்ணீர் தமிழகத்திற்கு வரவில்லை: 7 நாட்களுக்கு ஒருமுறை வரவேண்டும் என்று ஆணையிடப் பட்ட முறையில் தண்ணீரும் வரவில்லை, மாதா மாதமும் தண்ணீர் வரவில்லை. அதற்கு மாறாக பருவ காலத்திலே கர்நாடக மாநிலத்திலே மழை பெய்கிறபோது ஒரே நாளில், ஒரு வாரத்தில் 205 டி.எம்.சி. என்று தண்ணீர் இயற்கை ரீதியாக இங்கு வந்துவிட்ட பிறகு, ஒட்டுமொத்தத் தண்ணீரை நாங்கள் தந்துவிட்டோம், தமிழகத்திற்குத் தந்துவிட்டோம் என்று கர்நாடகம் கூறியது. அப்படி கர்நாடகம் கூறக்கூடியவற்றை அந்த ஆணையம் ஏற்றுக்கொண்டது. அந்த ஆணையத்திற்கு வித்திட்டது நீங்கள். பல் இல்லாத ஆணையம். நடைமுறைப்படுத்த முடியாத ஆணையம். ஏதோ மைய அரசினுடைய சில உதவிகள் வேண்டுமென்ற நோக்கோடு டெல்லியில் நீங்கள் இடம்பிடிக்க வேண்டுமென்ற நோக்கோடு, பாரதப் பிரதமர் கூறியதற்கெல்லாம் ஒத்துக்கொண்டு, தமிழகத்திற்குத் துரோகத்தைச் செய்தீர்கள். வாரா வாரம் உங்களால் தண்ணீரை வாங்கித் தர முடியவில்லை. 7 நாட்களுக்கு ஒரு முறையும் தண்ணீரை வாங்கித் தர முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாதா மாதம் உங்களால் தண்ணீரை வாங்கித் தர முடியவில்லை. நடுவர் மன்றத் தீர்ப்பைக் கடலில் போட்டீர்கள். அதற்கு உறுதுணை நின்றீர்கள். மைய அரசுக்குத் துதி பாடினீர்கள். இலட்சக்கணக்கான ஏக்கருக்கு வாரா, வாரம், மாதா மாதம் நமக்கு வர வேண்டிய தண்ணீர் எல்லாம் கர்நாடக மாநிலத்திற்குத் திருப்பப்பட்டது. அதுகுறித்து நீங்கள் குரல் எழுப்பவில்லை. டெல்லியிலே அங்கம் வகித்தீர்கள், அங்கும் நீங்கள்

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 2

குரல் எழுப்பவில்லை. பதவி சுகம் மைய ஆட்சியிலே வேண்டும் என்பதற்காக தமிழகத்தை கர்நாடக மாநிலத்திற்கு விற்றுவிட்டு நாட்டைக் காட்டிக் கொடுத்த ஒரு தமிழ் துரோகத்தைத்தான் நீங்கள் செய்தீர்கள். இது ஒரு மாபெரும் குற்றம். இது ஒரு மாபெரும் துரோகம். இந்தத் துரோகத்தைக் களைவதற்காகத்தான் நிரந்தரமாக வாரா வாரம், மாதா மாதம், காவிரி நதிநீர் தண்ணீரை, மேட்டூர் அணைக்குத் தர வேண்டிய தண்ணீரை, சட்ட ரீதியாக தர வேண்டிய தண்ணீரை, ஆணையிடப்பட்ட தண்ணீரை, பெறவேண்டுமென்ற நோக்கோடுதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், உச்ச நீதிமன்றத்திலே இந்த வழக்கு செம்மையாக நடைபெற்றாக வேண்டும். அதிலே உறுதியோடு செயல்பட்டாக வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அவைக்கு நான் தெரிவிக்க விழைகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) விவாதத்தைப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் வைத்துக்கொள்ளலாம். உட்காருங்கள், உட்காருங்கள். ஆற்காடு, கவரம்பாளையம் கிராமத்தைச் சார்ந்த (குறுக்கீடு) உட்காருங்கள், துரைமுருகன் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அனுமதிக்க முடியாது. நீங்கள் சொன்னீர்கள்; விளக்கம் சொல்லியாயிற்று. (குறுக்கீடு) ஒரு வழக்கறிஞர் சம்பந்தமாகக் கேட்டீர்கள். விளக்கம் சொல்லியாயிற்று. இனிமேல் இதை வந்து, (குறுக்கீடு) காவிரிப் பிரச்சினைபற்றி முழு நேரம் விவாதிக்கக்கூடிய அளவுக்கு மன்றத்தைப் பயன்படுத்துவது சரியல்ல. இதோடு விட்டு விடுங்கள், (குறுக்கீடு) விட்டுவிடுங்கள். (குறுக்கீடு)

ஆற்காடு, கவரம்பாளையம் கிராமத்தைச் சார்ந்த சிறுமி புவனா, யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டதால் (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். பேராசிரியர் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். பழனிசாமி உட்காருங்கள். பேராசிரியர் சொல்லட்டும். (குறுக்கீடு) பழனிசாமி சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழகத்தினுடைய உயிர்நாடியான பிரச்சினை. இந்த மாமன்றத்திலே இதுபோன்ற விவாதங்கள் தொடர்ந்து நடைபெறுவதன் மூலமாக இந்த மாநிலத்தினுடைய உரிமைகளை நாம் இழந்து வருகிறோம். இதில் ஆளுங்கட்சியா எதிர்க்கட்சியா என்று பார்க்காமல் தமிழ்நாட்டினுடைய உரிமைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்வது



2002 ஏப்ரல் 2] [திரு. ஜி. பழனிசாமி]

என்பது, பிரதான காரியம். தொடர்ந்து காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் 50 ஆண்டுக் காலமாக அரசியல் கலந்ததன் விளைவாக தஞ்சை மாவட்ட விவசாயிகளைத் தெருவிலே நிறுத்த வேண்டிய அவசியங்கள், திருவோடு எடுக்கவேண்டிய நிலை விவசாயத்திலே போய்க்கொண்டிருக்கிறது. இது உண்மையிலே கவலைக் கிடமாகிவிட்டது. பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் என்பது நம்முடைய காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குச் சாதகமாக அமையாது. இது பாதகமாக அமையும். இதுபோன்ற விவாதம் வருவதைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்).

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதிலே விவாதம் வேண்டாம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுத்தீர்கள், எங்களுக்கும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், (குறுக்கீடு) பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர் தாவா என்பது இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினையினுடைய சாதக பாதகங்களைக் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக்காமல், அதைக் கட்டிக் காக்கின்ற பணி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. அதை அரசியல் ஆக்குகின்ற நோக்கத்தில் திமுக-வைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியில் விளம்பரம் தேடவேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கு சம்பந்தமே இல்லாமல், வழக்கில் இந்த வழக்கறிஞர்தான் வாதாட வேண்டுமென்ற நோக்கத்தில் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சில நல்ல கருத்துகளைச் சொன்னார்கள். இரு மாநிலங்களுக்கும் இடையில் இருக்கின்ற தாவா பிரச்சினை சுமுகமான முறையில் தீர்க்கப்படவேண்டும் என்பதுதான், நம்முடைய நியாயமான உரிமைகள், அடிப்படை உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய உறுதியான நிலைப்பாடு. அந்த

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 2

நிலைப்பாட்டின் அடிப்படையில்தான் பல்வேறு காலகட்டங்களில் இந்த நதிநீர் தாவா குறித்து பல்வேறு மட்டங்களில் பேசிக்கொண்டிருந்தபோது, மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி. தண்ணீர் கர்நாடகத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்ற தீர்ப்பினைத் தமிழகத்திற்கு வாங்கித் தந்தார்கள் என்பதை இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-25*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிநீர்ப் பிரச்சினை என்பது நீண்டநாளைய பிரச்சினை. இது தமிழ்நாட்டு மக்களுடைய, தமிழ் மக்களுடைய வாழ்வுரிமைப் பிரச்சினை என்ற காரணத்தினாலே இந்த மாமன்றத்திலே விவாதிக்கின்ற நேரத்திலே, நடந்து முடிந்த விவாதங்களைப் போல இருப்பது நம்முடைய நலனுக்கு நிச்சயமாக உகந்ததாக இருக்காது.

ஊர் இரண்டு பட்டால் கர்நாடகத்திற்கு நிச்சயமாகக் கொண்டாட்டம் ஆகிவிடும். ஆகவே, கடந்த கால அரசு, தற்போதைய அரசு நிலை என்ற நிலையிலே பார்க்காமல், காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, இது தமிழர்களுடைய வாழ்வுரிமைப் பிரச்சினை என்ற காரணத்தினாலே, யார் ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்தாலும்கூட, காவிரி நீரைப் பெற்றுக் கொடுப்பது அவர்களுடைய தலையாய கடமையாகக் கருத வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை வைக்கிறேன். அதேநேரத்திலே, இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவிரிநீர்ப் பிரச்சினையிலே எந்தப் பிரச்சினையைப் பேச ஆரம்பித்தாலும் சரி, நீங்கள் நல்ல முடிவுகளை எட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்ற காரணத்தினாலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இங்கே பிரச்சினையை அணுகினாலும் சரி, மத்திய அரசுக்குத் தகவல் அல்லது நீதிமன்றப் பிரச்சினை என்று செல்லுகின்ற நேரத்திலே, அனைத்துக் கட்சிகளினுடைய ஒட்டுமொத்தக் குரலாக நீங்கள் செல்ல வேண்டுமென்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆசை. இதிலே மாறுபாடு கிடையாது. அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தி.மு.க., காங்கிரஸ் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, எந்தக் கட்சியாக இருந்தாலும்கூட, உங்களுக்கு ஒத்துழைப்பதற்கு நாங்கள் எல்லோரும் தயாராக இருக்கிறோம். அதேநேரத்திலே ஒருமித்த கருத்தை நீங்கள்



2002 ஏப்ரல் 2] [திரு. ஜி.கே. மணி]

கேட்டு, அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, இந்தப் பிரச்சினையை இதோடு முடித்து, இப்படிப்பட்ட விவாதங்கள் மாமன்றத்திலே நடைபெறுவது நல்லதாக அமையாது என்ற கருத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லி அமைகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி இப்போது மத்தியிலே ஆளும் அரசிலே அங்கம் வகிக்கின்ற ஒன்று. அதேபோன்று இன்று மத்திய அரசினுடைய ஆதரவு இங்கு ஆட்சியிலே இருந்து கொண்டிருக்கிற அரசுக்கும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை இங்கே விவாதித்து மக்களுக்கு ஒரு சிரமத்தை ஏற்படுத்துவதைவிட, இந்த அவையினுடைய ஒட்டுமொத்த கருத்தாக, அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி, தமிழகத்திற்கு நியாயம் கிடைப்பதற்காக காவிரியிலிருந்து நாம் பெற வேண்டிய நியாயமான தண்ணீரைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காக அரசும் - பிரதான ஆளுங்கட்சியும் - அதேபோன்று பிரதான எதிர்க்கட்சியும் முன்வரவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொண்டு, அதற்கு எங்கள் கட்சியினுடைய ஒத்துழைப்பையும் அறிவித்து அமைகிறேன்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்து விளக்கம் கேட்கத் தொடங்கி, அந்த விளக்கம் சொன்ன அடிப்படையில் மறுபடியும் தன்னுடைய நியாயத்தை வலியுறுத்துவதற்குத் தலைப்பட்ட காரணத்தால் பிரச்சினை வேறு பக்கம் திரும்பி, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது, இவையெல்லாம் துரோக சிந்தனையோடு நடைபெற்றதாக ஒரு கருத்து இந்த அவையிலே இடம் பெற்றுவிட்டது. முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேயிருந்து காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அணுகுகிற முறையில் அவ்வப்போது சில வேறுபாடு ஏற்பட்டாலும், குறிக்கோள் ஒன்றுதான், ஒரே நோக்கம்தான்; அடிப்படை வாதமும் ஒன்றுதான் என்ற கருத்து அன்றைய முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களாலேயே தெரிவிக்கப்பட்டு, ஒரு பொது நோக்கம் அதிலே வேண்டும் என்பது அப்போதே நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இன்றைக்கும்கூட, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் எடுத்துவைத்த கருத்து வழக்கறிஞர் பராசரனுக்காக அல்லது தனிப்பட்ட முறையில்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2002 ஏப்ரல் 2

அவர்தான் வாதாட வேண்டுமென்று அவர் விரும்பி, அதற்காக எழுப்பப்பட்ட பிரச்சினை அல்ல. உச்ச நதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றதற்குப் பின்னர், தமிழ்நாடு வெற்றி பெற்றாக வேண்டும். வழக்கு செல்லாமல் இருக்குமானால் அது வேறு. வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வந்தபோது மிகச் சிறந்த முறையில் வாதாடி வெற்றி பெறுவதற்கு வல்லவராக அல்லது அதற்குப் பயன்படக்கூடியவராக இருப்பார் என்ற எண்ணத்தில் திரு. துரைமுருகன் அவர்கள் அந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே அரசுடன் அவர் ஒத்துழைக்கவில்லை என்ற காரணத்தைச் சொன்ன போது அந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது. ஆகவே. இப்படிப்பட்ட பிரச்சினையில், தமிழகத்திற்கும் கர்நாடகத்திற்கும் இடையில், மாநிலங்களுக்கு இடையில், அந்தந்த மாநிலக் கட்சிகள் அனைத்தும் அந்தந்தப் பக்கம் இருக்கக்கூடிய ஒரு நிலையில் ஒரு பிரச்சினை ஏற்பட்டு இருக்கின்றபோது, அதில் திராவிட முன்னேற்றக் கழகம் உச்ச நீதிமன்ற வழக்கிலே வெற்றி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தப் பிரச்சினையை எழுப்பியது என்பதைத் தெரிவித்து இந்த அளவில் இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### ஆற்காடு, கவரம்பாளையத்தைச் சேர்ந்த சிறுமி புவனேஸ்வரி, யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டதால் இறந்ததாகக் கூறப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆற்காடு, கவரம்பாளையத்தைச் சேர்ந்த சிறுமி புவனா யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டதால் இறந்தது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. ஐ. கணேசன் அவர்களும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. எ.வ. வேலு அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். பிரச்சினையை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.



2002 ஏப்ரல் 2]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் ஆற்காடு பக்கத்தில் இருக்கக்கூடிய கவரம்பாளையத்தில் சென்ற 24-3-2002 ஆம் தேதி இலவச யானைக்கால் நோய் ஒழிப்பு மாத்திரைகள் வழங்கப்பட்டதை உட்கொண்ட சிறுமி புவனா, வயது 7, வாசுதேவனுடைய மகள், வாந்தி பேதி ஏற்பட்டு, பிறகு மயக்கம் ஏற்பட்டு ஆற்காடு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் 25 ஆம் தேதி அந்தச் சிறுமி இறந்துவிட்டாள். அவளுடைய சகோதரி, குணா, வயது 6, அவளுக்கும் இதுபோல யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டு வாந்தி பேதி ஏற்பட்டு, மயக்கம் ஏற்பட்டு முதலிலே ஆற்காடு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு அங்கு ரொம்ப சீரியஸ் என்று சொன்ன காரணத்தாலே சென்னையிலே இருக்கக்கூடிய எழும்பூர் மருத்துவமனைக்கு அங்கிருந்து refer செய்யப்பட்டு இங்கே வந்து அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறாள்.

பக்கத்தில் இருக்கக்கூடிய கீழ்குப்பம் என்ற கிராமத்திலேகூட பலராமனுடைய மகள் சித்ரா, வயது 13, அவளுக்கும் வாந்தி பேதி ஏற்பட்டு மயக்கம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறாள். யானைக்கால் நோய்க்கு மாத்திரை வழங்கும் இந்தத் திட்டம், தமிழக அரசும், உலக சுகாதார நிறுவனமும் இணைந்து ஒரு நல்ல நோக்கத்திற்காகக் கொடுத்து, பல இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதாவது இப்போது அந்த மாத்திரையை சாப்பிட்ட பலபேருக்கு இப்படிப்பட்ட நிகழ்வுகள் இல்லை. ஆனால், சில இடங்களில் மட்டும் இப்படிப்பட்ட நிகழ்வுகள், ஆற்காட்டில் வந்திருக்கிறது. அதேபோல, நாகை மாவட்டத்திலேகூட வாஞ்சூர் என்ற கிராமத்தில் சுண்ணாம்புக் கால்வாய் தெரு என்ற பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. சேலத்திலேகூட இதுபோன்று ஏற்பட்டு இருக்கிறது, இறப்பும் ஏற்பட்டிருக்கிறது. இந்த இடத்திலே ஏதாவது தரம் குறைந்த மாத்திரை வழங்கப்பட்டதா? அல்லது ஒரு வேளை - after effect - அங்கே மருந்து சாப்பிட்ட பிறகு ஏற்பட்ட விளைவுகளால் வந்ததா? இல்லை, ஏற்கெனவே உடல்நலம் குன்றியவர்கள் சாப்பிட்டு, இதுபோன்ற இறப்பு ஏற்பட்டதா என்பதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் அவைக்குத் தெரிவித்தால்தான் நல்லது. ஏனென்றால், சிலபேர் இப்போது எங்களுடைய பகுதியில் இந்த இறப்பு ஏற்பட்டவுடனேயே - 3 மாத்திரை, பெரிய மாத்திரை 1 கூட கொடுக்கிறார்கள். அந்த மாத்திரையினுடைய பெயர்களைக்கூட நம்முடைய அமைச்சரவர்கள் விளக்கினார்கள் என்றால் பரவாயில்லை—

பரவாயில்லை—சிலபேர் சாப்பிட மறுக்கிறார்கள். என்னுடைய வீட்டில்கூட என்னுடைய தாயார், "ஏண்டா, குழந்தை செத்துப் போச்சு, இதை வேறு சாப்பிடச் சொல்கிறாயே" என்று என்னையே திருப்பிக் கேட்கக்கூடிய ஒரு நிலை. ஆகவே, அப்படியில்லாமல், மற்றவர்களுக்கும் தைரியத்தை ஊட்டக்கூடிய வகையில், இந்த நிகழ்வுகளில் என்ன நடந்தது? ஏன் இப்படி இறப்பு அல்லது வாந்தி, பேதி, மயக்கம் எல்லாம் வந்தது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கி, தமிழ்நாட்டினுடைய மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, இந்த மாத்திரை இந்தப் பகுதியில் இப்படி வந்ததற்கான காரணங்கள் என்ன என்பதை விளக்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு. (குறுக்கீடு) ஜி.கே. மணி, கணேசன் இல்லை, அதனால் பேச முடியாது.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், கவரம்பாளையத்தில் 24-3-2002 அன்று புவனா என்கிற 7 வயது சிறுமி இறந்ததோடு மட்டுமல்லாமல், சேலத்திலே ஒரு மாணவியும் இறந்துவிட்டார். அதேபோன்று, ஆற்காடு மருத்துவ மனையிலே குணா என்கிற 6 வயது சிறுமி அனுமதிக்கப்பட்டு, பின்பு எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அதேபோன்று, நாகையிலே ராஜேஸ்வரி என்கிற பாலிடெக்னிக்கில் படிக்கிற ஒரு பெண், வயது 19, அவரும் இப்படித்தான் இந்த மாத்திரையை சாப்பிட்டு வாந்தி, பேதி ஏற்பட்டு மருத்துவமனையிலே அவரும் சேர்க்கப்பட்டிருக்கிறார். அதேபோன்று, நாகையிலே கணவன்-மனைவி, லதா என்கிற பெண்மணியும் அவருடைய வீட்டுக்காரர் திருநாவுக்கரசு ஆகிய இருவரும் சாப்பிட்டு அவர்களுக்கும் வாந்தி-பேதி மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதிலே வயது வித்தியாசம் பார்க்கிறபோதுகூட 6 வயது, 7 வயது, 19 வயது, கல்யாணம் ஆனவர்கள் என்று சிறு வயதிலிருந்து குடும்பம் நடத்துபவர்கள் வரை, அவர்களுக்கு வாந்தி-மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. உலக சுகாதார நிறுவனத்தோடு தமிழக அரசு இணைந்துதான் இந்த மாத்திரையை வழங்கியிருக்கிறது. இந்த மாத்திரையை வழங்குவதற்கு முன்னால் இதை அரசு பரிசோதனை செய்து, சிறப்பான ஆய்வுக் கூடத்திலே பரிசோதனை செய்து அதை அனுப்பியிருந்தால் அல்லது அதை மக்களுக்குக் கொடுத்திருந்தால், இந்த இழப்பு வந்திருப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப்





பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும். காரணம் வயது வித்தியாசம் இல்லாமல் ஆறு வயதிலிருந்து ஆரம்பித்து குடும்பம் நடத்துபவர்கள் வரை இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இதை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

*முற்பகல் 11-35*

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனேஸ்வரி என்ற 14 வயது சிறுமி இறந்துபோனதையும், யானைக்கால் நோய்த் தடுப்பு மாத்திரை சாப்பிட்டதையும் தயவுசெய்து உறுப்பினர்கள் சம்பந்தப்படுத்த வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். புவனேஸ்வரியின் இறப்பு யானைக்கால் நோய்வராமல் தடுக்க அரசால் வழங்கப்பட்ட D.E.C. மாத்திரைகள் மற்றும் Albendazole மாத்திரைகளை உட்கொண்டதால் அல்ல என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பெண்ணுக்கு ஏற்கெனவே இருந்த encalphylitis அதாவது, மூளைக் காய்ச்சலுக்கு உண்டான ஆரம்ப கட்டம். (குறுக்கீடு) திருத்திக்கொள்கிறேன். Encephalitis என்ற நோயால் இறப்பு ஏற்பட்டிருக்கிறது.

24-3-2002 ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உலக சுகாதார நிறுவனத்தினுடைய ஒத்துழைப்போடு—"prone districts"— யானைக்கால் நோய் அதிகப்படியாகக் காணப்படுகிற 13 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அதிலே இருக்கிற 2.8 கோடி மக்களுக்கு அந்த மாத்திரைகளை வழங்குவதற்கு சுமார் 17 கோடி ரூபாய் அளவிலே இந்தத் திட்டத்தை அந்த நாளிலே செயல்படுத்த யானைக்கால் நோய்த் தடுப்பு நாள் என்று கடைப்பிடிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 2.3 கோடி பேர் அந்த மாத்திரையை அன்றையதினமும் அடுத்த நாள் 25-3-2002 அன்றும் உட்கொண்டார்கள். நானும் காஞ்சிபுரம் மாவட்டத்திலே அந்தத் திட்டத்தைத் துவக்கினேன். மற்ற மாவட்டங்களில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் துவக்கினார்கள். நாங்களும் அந்த மாத்திரையைச் சாப்பிட்டோம்; அதிகாரிகளும் சாப்பிட்டார்கள். யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. காரணம், இந்த மாத்திரைகளைச் சாப்பிடுவதன் மூலம் எந்த பாதிப்பும் பக்க விளைவுகளும் ஏற்படுவது இல்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்களும் மாண்புமிகு உறுப்பினர்

ஞானசேகரன் அவர்களும் இங்கே பேசுகிறபோது, அந்த மாத்திரைகள் பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்பட்டனவா என்றெல்லாம் கேட்டார்கள். இந்த மாத்திரைகளை உலக சுகாதார நிறுவனம்தான் நமக்கு வழங்குகிறது. உலக சுகாதார நிறுவனம் எப்படிப்பட்ட நிறுவனம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, வழங்கப்பட்ட இந்த மாத்திரைகளின் தரத்தையும் பாதிப்பு இல்லாத தன்மையையும் நன்கு பரிசோதித்து அவர்கள் நமக்குக் கொடுத்தார்கள். இந்த மாத்திரைகள் ஏதோ நமது தமிழகத்திற்கு மட்டும் புதிதாகக் கொடுக்கப்படவில்லை. இது தொடர்ந்து பல நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. பல மாநிலங்களிலே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால் இந்த புவனேஸ்வரி குடும்பத்தைச் சார்ந்த இரண்டு சகோதரிகள் மற்றும் அவர் பெற்றோர்கள் இந்த மாத்திரைகளை அன்றைக்குச் சாப்பிட்டார்கள். அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த நேரத்திலே, மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னால் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆயிரம் மக்கள் தொகைக்கு சாதாரணமாக ஒரு ஆண்டுக்கு எட்டு பேர் இறப்பு இருக்கும். அதுபோல - 16 பேர் - 16 குழந்தைகள் பிறப்பார்கள், ஆயிரம் ஜனத்தொகைக்கு. அந்தக் கணக்கின்படி பார்த்தால், இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்ட 13 மாவட்டங்களில் இருக்கிற 2.8 கோடி மக்களுக்கு அன்றையதினம் மட்டும்—இயற்கையாக மரணம், நோய் ஏற்பட்டு அல்லது வயது முதிர்ச்சி ஏற்பட்டு அல்லது மாரடைப்பு ஏற்பட்டு. இதேபோல இயற்கையாகச் சாகிறவர்கள்—அந்த 13 மாவட்டங்களில் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 60 முதல் 70 வரை இருக்கும்—இந்த சாதாரண இயற்கை மரணம். இந்த மாவட்டங்களிலே 60-லிருந்து 70 வரை இறப்பு இருந்திருக்கும். எனவே, அந்தவகையில் அந்த மாவட்டங்களில் அன்றையதினம் எங்காவது இதுபோன்ற ஒரு மரணம் ஏற்பட்டால் அதற்கு இதுதான் காரணம் என்று சொல்வது எந்தவகையில் நியாயம் என்பதை நான் இந்த மன்றத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால், சோறு சாப்பிடுகிறோம்; விக்கல் எடுத்து சிலபேர் இறந்து விடுகிற செய்தி வருகிறது. அதற்காக சோற்றைக் குற்றம் சொல்லமுடியாது. பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறபோது 'பட்' என்று போய்விடுகிறார்கள். எனவே, பத்திரிகைதான் இதற்குக் காரணம் என்று நாம் சொல்ல முடியாது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில நேரத்தில் அது காரணமாகவும்கூட இருக்கலாம். *(சிரிப்பு)*

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** எனவே, திரு. ஞானசேகரன் போன்ற விவரமான உறுப்பினர்கள் இந்த சன் டி.வி. நியூஸ் பாணியிலே இதுபோன்ற குற்றச்சாட்டுகளை, புகார்களை எழுப்பக்கூடாது என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்னும் சொல்லப்போனால், சில அரசியல்வாதிகள் எங்காவது பிணம் விழாதா என்று பிணம் தின்னிக் கழுகுகளைப்போல எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களாலே பரப்பப்பட்ட வதந்திகள் இவை என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுபோன்ற தவறான செய்திகளைக் கேட்டுத்தான் மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்ன குணா என்ற பெண்ணும், சித்ரா என்ற பெண்ணும் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டார்கள். குணா என்ற பெண் எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று இப்போது குணமடைந்துவிட்டார். அதுபோல சித்ரா என்ற பெண்ணும் வேலூர் சி.எம்.சி.-யிலே சேர்க்கப்பட்டு அவரும் குணமடைந்து விட்டார். இந்த மாத்திரைகளைச் சாப்பிடுகிறபோது எந்தப் பக்க விளைவும் ஏற்படாது என்று சான்று கொடுத்துத்தான் உலக சுகாதார நிறுவனம் இந்த மாத்திரைகளை இங்கே விநியோகித்தார்கள். அந்த வகையிலேதான் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 24-3-2002 அன்று இதை 13 மாவட்டங்களில் அமல்படுத்தினார்கள். இன்னும் சொல்லப்போனால், உலக சுகாதார நிறுவனம் 2020-க்குள் இந்த உலகம் முழுவதும் யானைக்கால் நோயற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் அவர்கள் திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய முயற்சியினால் 2005 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்திலே யானைக்கால் நோயை முழுவதுமாக ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக, முன்மாதிரித் திட்டமாக முதன்முதலிலே *(மேசையைத் தட்டும் ஒலி)* எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நம்முடைய மாநிலத்தில்தான் 24-3-2002 அன்று அந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இன்னும் சொல்லப் போனால்,

இந்த 13 மாவட்டங்களில்தான் அதை நாம் கடைப்பிடித்திருக்கிறோம்.
அடுத்த ஆண்டு இதே 24-3-2003 அன்று இதே உலக சுகாதார
நிறுவனத்தின் உதவியோடு இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும்
விரிவுபடுத்தப்பட்டு முழுமையாக தமிழகத்தை யானைக்கால் நோய்
இல்லாத தமிழகமாக ஆக்கிட நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சூளுரைத்ததைப்போல,
இந்தியாவிற்கே தமிழகம் இந்தத் திட்டத்தில் முன்னோடியாக, முதல்
மாநிலமாக இருக்கும் என்கின்ற வகையிலேதான் இந்தத் திட்டத்தை
நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். எனவே, அருள்கூர்ந்து மாண்புமிகு
உறுப்பினர் ஞானசேகரன் போன்றவர்கள் இந்தத் திட்டத்தைக்
கொச்சைப்படுத்த வேண்டாமென்று நான் பணிவன்புடன்
கேட்டுக்கொள்கிறேன். காரணம், இதுபோன்ற sensitive
பிரச்சினைகளில் யாரோ வைக்கிற தீயை நாம் ஊதி அணைக்க
வேண்டுமே தவிர, அதை ஊதி பெரிதுபடுத்தக்கூடாது. எனவே,
மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் இந்தத் திட்டங்களுக்கு வருகிற
ஆண்டில் நல்ல ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி
இதிலே பதட்டப்பட எதுவும் விஷயமில்லை. எனவே, பதட்டமான
நிலையை நீங்கள் உருவாக்காமல் இருந்தால் போதும் என்று
பணிவன்போடு கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை
ஒன்றை அளிக்க வேண்டும் என்று... (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நீண்ட நெடிய விளக்கம் தந்தார்கள். அவர்
தந்ததைப் பற்றி ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால்,
தேவையில்லாமல் சன் டி.வி. என்று அந்தப் பெயர்களை எல்லாம்
இங்கே பயன்படுத்துவது முறையானதா? ஒழுங்கானதா? இல்லை
எல்லா டி.வி.-யிலும் இப்போது, நாங்களும் ஜெயா டி.வி. என்று
சொன்னால்....... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அதாவது சன். டி.வி.-
யில் இந்தச் செய்தி சொல்லப்பட்டது. (குறுக்கீடுகள்) சன் டி.வி.-யில்
இதுபோன்ற செய்தி சொல்லப்பட்டது. அதைத்தான் அவர்
குறிப்பிட்டுச் சொன்னார். (குறுக்கீடுகள்) நானே பார்த்தேன். நானே
சன். டி.வி.-யில் பார்த்தேன். யானைக்கால் வியாதிக்கான மாத்திரை
சாப்பிட்டு குழந்தை இறந்துவிட்டதாக சன் டி.வி.-யிலே செய்தி





சொல்லப்பட்டது. அதைத்தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.-
(குறுக்கீடுகள்) பேராசிரியர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, செய்திகளை அடிப்படையாக வைத்து எந்த ஒரு நிறுவனம்
நடைபெறுமானாலும் செய்தி கிடைத்தவுடன் அந்தச் செய்திக்கு
எப்படிப்பட்ட முக்கியத்துவம் இருக்கிறதோ அதைத்தான்
பரப்புவார்கள். அதேபோல, சட்டமன்றத்திலும் உறுப்பினர்கள் ஒரு
பிரச்சினை என்று தங்கள் காதுக்கு வருமானால் அந்தப் பிரச்சினையை
எழுப்புவார்கள். அந்தப் பிரச்சினையை இங்கு எழுப்புவது ஊதி, ஊதி
ஒரு பிரச்சினையை வளர்ப்பது அல்ல. அந்தப் பிரச்சினையை எழுப்பிய
காரணத்தால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான
விளக்கத்தைச் சொல்லி நாடு தெரிந்துகொள்ளக்கூடிய நிலைமை
ஏற்பட்டது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் வேறு நோக்கத்தோடு
இந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை என்பதையும், செய்தி
நிறுவனங்கள், பத்திரிகைகளில்—எந்தப் பத்திரிகையை
வேண்டுமானாலும் நான் படித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன் அந்தச்
செய்திகள் வருகிறபோது அதைப் படிக்கிறபோது யாருக்கும்
தோன்றக்கூடிய கருத்தைத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே
எடுத்து வைத்தார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஒரு நிறுவனத்தையோ அல்லது பத்திரிகையையோ அல்லது மாண்புமிகு
உறுப்பினரையோ ஒரு நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை
எழுப்புவதாகச் சொல்வது அவ்வளவு பொருத்தம் அல்ல என்பதை
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சில உவமைகள் உலகப் பிரசித்தி பெற்றவை.
அவற்றைப் பயன்படுத்துவதைத் தவறு என்று சொல்ல முடியாது.
உதாரணத்திற்கு உண்மைக்கு மாறான தகவல்களைத் தரும்போது இது
கோயபல்ஸ் பிரச்சாரம் என்று சொல்வது உலக வழக்கம்.
அதைப்போலவே, இன்றைய காலகட்டத்தில் உண்மைக்கு மாறான
செய்திகளைத் தரும்போது சன் டி.வி. பாணி என்று சொல்வது
வழக்கமாகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான்
அமைச்சர் அவர்கள் சொன்னார். அதில் எந்தத் தவறும் இல்லை
என்று கருதுகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் போட்டி வளருகிற காரணத்தினால் சன் டி.வி. பாணிதான் ஜெயா டி.வி. பாணியாகவும் இன்றைக்கு ஆகியிருக்கிறது. இதிலே ஒன்றும் வேற்றுமை இல்லை. உலகம் முழுவதும் இந்தப் போட்டிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வேலு அவர்களும், ஞானசேகரன் அவர்களும் சொன்னதைப்போல, சேலத்தில் இந்த மாத்திரைகளை உட்கொண்டதால் எந்த இறப்பும் ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று....

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே பேராசிரியர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். பிரச்சினை முடிந்தது. வேலு உட்காருங்கள். பேரவை விதி 110-ன் கீழ்....

## 2. தகவல் கோரல் — தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினை குறித்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள்.

## 4. விதி 110-ன்கீழ் அறிக்கை

### பொது விநியோகத் திட்டத்திற்காகக் கொள்முதல் செய்யும் நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்பியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.





***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அரிசிக்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் காவிரி வடிநிலப் பகுதிகளிலிருந்து சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் தமிழக அரசு, நெல் கொள்முதல் செய்து வருகிறது. அந்தந்த பருவத்தில் நிகழும் சூழ்நிலைக்கேற்ப ஏகபோகக் கொள்முதல், (Monopoly Procurement) அல்லது இணைக் கொள்முதல் (Parallel Procurement) முறை மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதே நேரத்தில், மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஆதார விலைக்கு, Minimum Support Price-க்கு அதிகமாக, விவசாயிகளின் நலன் கருதி, ஊக்கத் தொகையோ அல்லது இடை நிகழ்ச் செலவையோ தமிழக அரசு வழங்கி வருகிறது.

2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசு 'ஏ' ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 560 ரூபாயும், சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 530 ரூபாயும், ஆதார விலையாக நிர்ணயித்திருந்தது. 2001 ஆம் ஆண்டு குறுவையிலும், 2002 ஆம் ஆண்டு சம்பா பருவத்திலும் இணைக் கொள்முதல் முறையைப் பின்பற்றி நெல் கொள்முதல் செய்யலாம் என்றும், மத்திய அரசின் ஆதார விலைக்கு மேல், குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் இடை நிகழ்ச் செலவிற்காக வழங்கவும் தமிழக அரசு முடிவு செய்தது.

2001 ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில், இணைக் கொள்முதல் முறை மூலம், 337 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு 2,23,275 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு சம்பா பருவத்தில் 1-1-2002 முதல் காவிரி வடிகால் பகுதிகளில், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலமாகவும், இதர பகுதிகளில் வட்டக் கிடங்குகள் மூலமாகவும், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன்—அதாவது சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 530 ரூபாய்—'ஏ' ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 560 ரூபாய் என்பதற்கு மேலாக, குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாயை கூடுதலாக வழங்கி, விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்ய தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

மேலும், விவசாயிகளின் நலன் கருதி, முழு அளவிலான தரவெட்டுக்குப் பதிலாக இரண்டாம் தர நெல், குவிண்டால் ஒன்றுக்கு

5 ரூபாயும், மூன்றாம் தர நெல் குவிண்டால் ஒன்றுக்கு 7 ரூபாய் 50 பைசாவும் பிடித்தம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. மேலும், காவிரி வடிநிலப் பகுதிகளில், இந்த ஆண்டு பிப்ரவரி மாதம், பருவம் தவறி பொழிந்த பெரும் மழையினால், சம்பா நெற்பயிர் பாதிக்கப்பட்டதை கருத்தில்கொண்டு, ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தபடி 18 சதவிகித ஈரப்பதமுள்ள நெல்லை மட்டும் கொள்முதல் செய்வதற்கு பதிலாக 22 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்யலாம் என்றும், அவ்விதம் அதிகமான ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வதால் ஏற்படுகின்ற இழப்பினை ஈடு செய்யும் வகையில் விவசாயிகளிடமிருந்து எவ்வித பணப் பிடித்தமும் செய்ய வேண்டியதில்லை என்றும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தமிழக அரசு ஆணையிட்டது. அதாவது, அந்த இழப்பை தமிழக அரசே ஏற்றுக்கொள்ள முன் வந்தது. ஆனால், நடப்பு சம்பா பருவம் முடிவுற்ற இந்த வேளையில், வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்கள், வேறு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் இதர பகுதிகளில் இருந்து நெல்லை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து, காவிரி வடிநிலப் பகுதிகளில் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விற்று லாபம் அடைய முயற்சிப்பது தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்வதை தமிழக அரசு 15-3-2002 அன்று முதல் நிறுத்திக்கொள்ளவும், இன்னும் அறுவடை நடந்துகொண்டிருக்கின்ற பகுதிகளில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி, அவர்கள் விரும்பினால், வட்டக் கிடங்குகளில், 15-4-2002 வரை நெல்லை விற்கலாம் எனவும், தமிழக அரசு ஆணையிட்டது.

*முற்பகல் 11-50*

இதற்கிடையே, சில புள்ளிவிவரங்களை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நடப்பு சம்பா பருவத்தில் 9,79,590 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் தற்பொழுது கையிருப்பில் உள்ள அரிசி மத்திய அரசு மாதந்தோறும் வழங்கும் அரிசியுடன் சேர்த்து, பொது விநியோகத் திட்டத்திற்கும், தமிழக அரசு அமல்படுத்தும் இதர நலத் திட்டங்களுக்கும், 9 மாதத்திற்குப் போதுமானதாகும். வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கான மத்திய அரசின் ஒதுக்கீட்டின்படி கிடைக்கும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு





8 ரூபாய் 30 பைசா என்று இருந்தபோதிலும், விவசாயிகளின் நலன் கருதி, தமிழக அரசு நெல் கொள்முதல் செய்வதன் மூலம் கிடைக்கும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு 12 ரூபாய் என்ற அளவில், அதாவது கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 70 பைசா அதிகமாக இருந்தபோதிலும் தேவைக்கு அதிகமாக அரிசி கையிருப்பில் உள்ள காரணத்தினால், மத்திய அரசின் ஒதுக்கீட்டினை தமிழக அரசு பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதனாலும் தமிழக அரசுக்கு பெருத்த இழப்பு ஏற்படுகிறது.

தற்போது காவிரி வடிநிலப் பகுதிகளில் ஒருசில இடங்களில் காலம் தாழ்ந்து சம்பா அறுவடை நடைபெற்றுள்ளதால், அந்தப் பகுதி விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை, 15-3-2002 தேதிக்குள் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியவில்லை எனவும், அரசு தற்போது அறிவித்துள்ளபடி வட்டக் கிடங்குகளுக்கு எடுத்துக்கொண்டு செல்வதற்குக் கூடுதலாக போக்குவரத்துச் செலவு செய்ய நேரிடுகிறது எனவும், தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி செயல்படுகின்ற இந்த அரசு, அவர்களது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, போக்குவரத்துச் செலவுக்கு அதிகபட்சமாக, குவிண்டால் ஒன்றுக்கு 12 ரூபாய் 50 பைசா வரை ஆகலாம் என்பதைக் கணக்கிட்டு, அதை ஈடு செய்யும் வகையில், ஆதார விலைக்குக் கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் அளிக்க, இந்த அரசு தீர்மானித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், ஏற்கெனவே, காவிரி வடிநிலப் பகுதிகளில் நெல் கொள்முதல் செய்து வரும் 39 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக வட்டக் கிடங்குகளுடன் மேலும் 28 சேமிப்புக் கிடங்குகளிலும் Buffer Godown-களிலும், நெல் கொள்முதல் செய்ய தமிழக அரசு ஆணையிட உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழக விவசாயிகளின் நலன் காப்பதில், யாருக்கும் இந்த அரசு சளைத்தது இல்லை. ஏற்கெனவே இந்த அரசு விவசாயிகளின் கடன்களுக்கான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்துள்ளது. இப்போது காவிரி வடிநிலப் பகுதி விவசாயிகளின குறை தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம். (குறுக்கீடு) 110-வது விதியில் பேசக்கூடாது. பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. அரசன் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள் இதுசம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானம் அல்ல. 110 அறிக்கைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. ஜே. ஹேமசந்திரன்:** ஏற்கெனவே, இது சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தும், எங்களை இதுசம்பந்தமாக பேச அழைக்காமல் விதி 110-ன்கீழ் முதலமைச்சர் அவர்கள் ஸ்டேட்மென்ட் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய right-ஐ நான் question பண்ணவில்லை. ஆனால், எங்களுடைய right-ல் இப்படி invade செய்வது சரிதானா என்று நான் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### அறந்தாங்கி தொகுதி, மனையல்குடி ஒன்றியம், கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலே 40 கிலோ மீட்டர் தொலைவிற்கு கடற்கரை, நீண்ட கடற்கரை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், அந்தத் தீர்மானத்தை அப்படியே வாசியுங்கள், அவ்வளவுதான். அதை வாசியுங்கள். பேசக்கூடாது; வாசியுங்கள்.



2002 ஏப்ரல் 2]

**திரு. ப. அரசன்:** புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மனையல்குடி ஒன்றியம், கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் ஆகிய இடங்களில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற 2 படகுகளையும் 7 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து அழைத்துச் சென்றது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள். மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் மீன்பிடித் தளங்களிலிருந்து இரண்டு மீன்பிடிப் படகுகளில் அதாவது PDK 939 என்ற எண்ணிட்ட படகில் திருவாளர்கள் வி. பழனியாண்டி, ஏ. ஆனந்தவேல், எம். சின்னமணி மற்றும் வி. முருகன் ஆகியோரும் PDK 1054 என்ற எண்ணிட்ட படகில் திருவாளர்கள் கே. வெள்ளைச்சாமி, ஏ. சகாயராஜ் மற்றும் எம். இராஜேந்திரன் ஆகியோரும் கடந்த 3-3-2002 அன்று கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது நள்ளிரவில் இந்தியக் கடல் எல்லையைக் கடந்து இலங்கைக் கடல் எல்லைக்குள் சென்று விட்டதால், இலங்கைக் கடற்படையால் படகுகளுடன் இந்த ஏழு மீனவர்களும் கைது செய்யப்பட்டு இலங்கையில் காவலில் வைக்கப்பட்டனர்.

2. மேலே சொல்லப்பட்டுள்ள ஏழு மீனவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளது குறித்து இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து 4-3-2002 அன்று பெறப்பட்ட நிகரிச் செய்தியின் பேரில் இம்மீனவர்கள் குறித்த அடையாளங்களை இந்தியத் தூதரகத்திற்குத் தெரிவித்து அவர்களை விடுவித்து தமிழகத்திற்கு திருப்பியனுப்ப விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள தூதரகம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

[திரு. எம். ராதாகிருஷ்ணன்] [2002 ஏப்ரல் 2

3. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தியப் பிரதமர் அவர்களை நிகரிச் செய்தி மூலமாக கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேலே சொல்லப்பட்டுள்ள ஏழு மீனவர்கள் உட்பட, 29 மீனவர்கள் இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டு 26-3-2002 அன்று தாயகம் திரும்பி விட்டனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன் விளக்கம் கேளுங்கள்; ஏதாவது கேளுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே நம்முடைய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குச் சென்றுள்ளதாலே பிடித்துச் செல்லப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைக் கடற்படையைச் சேர்ந்தவர்கள், பொதுவாகவே, நம்முடைய இந்தியக் கடற்பகுதிக்கு அத்துமீறி வந்து நம்முடைய மீனவர்களை எல்லாம் கைது செய்துகொண்டு போகிறார்கள். அதைப்போல, என்னுடைய தொகுதியிலே இருக்கிற கோட்டைப்பட்டினம், ஜெகதாப்பட்டினத்திலே இருக்கிற மீனவர்கள் நம்முடைய கடற்பகுதியிலேதான் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். நம்முடைய கடற்பகுதிக்கு வந்து இலங்கைக் கடற்படையினர் அவர்களை மிரட்டி, துன்புறுத்தி அழைத்துச் சென்று, இப்போது மீட்கப்பட்டுவிட்டார்கள். மீட்கப்பட்டதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், அந்த மீனவர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஜெகதாப்பட்டினத்திலே கடற்கரை காவல் படை இருக்கிறது. தக்க அதிகாரிகள் மூலமாக, அந்த கடற்கரை காவல் துறை அதிகாரிகளுக்கு, என்னுடைய பகுதியிலேயிருக்கிற மீனவர்களுக்குத் தகுந்த பாதுகாப்புகளைத் தருவதற்கு அறிவுறுத்துவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வதைத் தடுப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி



2002 ஏப்ரல் 2] [திரு. எம். ராதாகிருஷ்ணன்]

அம்மா அவர்கள் எந்தெந்த வழிவகைகளைக் கையாளலாம் என்பது குறித்து நிபுணர்களுடன் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் தமிழக மீனவர்களை மீட்பதிலே இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எந்த அளவிற்குச் சாதனை படைத்துள்ளார்கள் என்பதையும் இந்தச் சபையிலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினம் மீன்பிடித் தளங்களிலிருந்து பி.டி.கே. 939 என்ற எண்ணிட்ட படகில் திருவாளர்கள், வி. பழனியாண்டி, ஏ. ஆனந்தவேல், எம். சின்னமணி ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த அறிக்கை ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னால் போதும்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** சிறிய விளக்கம். இவர்கள் ஏழு பேர்களையும் இலங்கைக் கடற்படையினர் பிடித்துக்கொண்டு கைது செய்து விட்டனர். இதயதெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப் பிரதமர் அவர்களை 7-3-2002 அன்று நிகரிச் செய்தி மூலமாகக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே மேலே சொல்லப்பட்ட ஏழு மீனவர்கள் உட்பட 29 மீனவர்கள் இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டு, அன்று இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி நானும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஜீவானந்தம் அவர்களும், நாகப்பட்டினம் சென்று வரவேற்று, அவர்களை வீட்டுக்கு அனுப்பிவைத்தோம். இந்த ஏழு மீனவர்களும் 22 நாட்களில் தாயகம் திரும்பிவிட்டனர். இவ்வளவு விரைவில் இந்தியச் சரித்திரத்தில் மீனவர்கள் இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறை. மேலும், இவர்கள் சென்ற படகுகளுடன் திரும்பியது இதுவே முதல்முறை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரட்டிப்புச் சாதனை செய்துள்ளார்கள் என்று நான்

[திரு. எம். ராதாகிருஷ்ணன்] [2002 ஏப்ரல் 2

சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எதற்காக அம்மா அவர்கள் இரட்டிப்புச் சாதனை புரிந்துள்ளார்கள் என்று கூறுகிறேன் என்றால், இதுவரையில் மீனவர்கள் முதலில் விடுவிக்கப்படுவார்கள், சிறிதுகாலம் சென்று படகுகள் விடுவிக்கப்படும். இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் மீனவர்களையும், படகுகளையும் ஒரே சமயத்திலே விடுவித்தது என்று (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்கள் எல்லாம் சந்தோஷமாக அவர்கள் ஆனந்தக் கண்ணீர்விட்டு, என்னிடமும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடமும் கூறினார்கள் என்பதை இந்தச் சபையிலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## 6. வரவு–செலவுத் திட்டம், 2002–2003, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம். 11 பேர் பேச வேண்டும். 10 மணித்துளிகளுக்கு மேல் எடுத்துக்கொண்டால் அனைவரும் பேச முடியாது. இதை உறுப்பினர்கள் கவனத்திலே கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்குபவர் தண்டராம்பட்டு திரு. எ.வ. வேலு.

நண்பகல் 12-00

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் 2002-2003 ஆகிய ஆண்டுகளுக்குரிய நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்ததன்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவுக்கு, திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தால் இல்லாமை, நிதி இல்லாமை, நிதி நில்லாமை என்கிற புலம்பல் வாடைதான் இதிலே தெரிகிறதேயொழிய, இதில் ஒன்றும் இல்லை. படித்துப் பார்த்தால் கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதுபோல் குழப்பத்தின் மொத்த உருவமாகத்தான் எங்களுடைய கண்ணுக்கு இது புலப்படுகிறதே யொழிய, இதில் வேறு ஒன்றும் இல்லை. காரணம் 4 மாத காலத்திற்கு முன்னால் 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு வரிச் சுமையை சுமத்தி, 690 கோடி ரூபாய்க்கு மேலும் வரி போட்டு, அதுவும் பற்றாமல்



2002 ஏப்ரல் 2] [திரு. எ.வ. வேலு]

பற்றாக்குறையாக 640 கோடி ரூபாய் உள்ளது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு வரியும் போட்டும், இன்னும் பற்றாக்குறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏதாவது நாட்டு மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு நடந்ததா என்று சொன்னால் இந்த ஓராண்டு காலம் எதுவும் நடைபெறவில்லை. தொழிலாளர்களுக்கு ஏதாவது சலுகைகள் உண்டா? இல்லை. தொழிலாளர்களுக்கு போனஸ் உண்டா? இல்லை. விவசாயிகள் கரும்புக்கு ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கேட்டார்களே அதாவது நடந்ததா? இல்லை. விவசாயிகளுடைய முழு நெல்லும் வாங்கப்பட்டதா என்று சொன்னால், அதுவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் எம். ஜி.ஆர். அவர்கள், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்திற்கு...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்று அவையில் இல்லை என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கட்சியினுடைய தலைவர் அவர்கள் ஏற்கெனவே வெளியில் அறிவித்திருக்கின்ற அதே வாசகத்தை, அதே புலம்பலை அவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) புலம்புகிற போக்கு உண்மையிலேயே வேதனையான ஒரு போக்கு என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) இருங்கள், நான் பேசி முடிக்கிறேன். புலம்பல் என்று அவர்தானே சொன்னார்? அவசரப்படாதீர்கள். ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கும் அவைக்கும் நான் கொண்டுவர விழைகின்றேன். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு தி.மு.க.வினுடைய தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் குறிப்பிடுகின்ற புலம்பலுக்கு வித்திட்டவர்கள், அந்த சோக நிலைக்கு அடிப்படையாக, ஆணி வேராக, தமிழகத்தைச் சீரழித்தவர்கள், முன்பு தமிழகத்தை ஆண்ட தி.மு.க. ஆட்சியினர்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றல்ல, இரண்டல்ல, 1823 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுக்கு, அவர்களுக்கு மைய அரசின் ஊதியத்திற்கு நிகராகத் தரப்படும் என்று சொல்லப்பட்ட அந்த ஊதியத்தை, அதற்குரிய பென்ஷனை எல்லாம் காலத்தே தராமல் அந்தப் பணத்தையும், இந்தச் செலவு, அந்தச் செலவு என்று சாப்பிட்டுவிட்ட காரணத்தால், இந்த அரசுக்கு, எங்களுக்கு, எங்கள் தலைமீது (குறுக்கீடுகள்) நான் விளக்கம் சொல்கிறேன். இந்தச் செலவு, அந்தச் செலவு என்று (குறுக்கீடு) இந்தச் செலவு, அந்தச் செலவு

என்று முறையற்ற நிர்வாகத்தை மேற்கொண்டு cost management, material management என்ற வகைபாடுகளை எல்லாம் மேற்கொள்ளாமல் செலவிட்ட காரணத்தால், அந்தச் சுமை எங்கள் மீது சுமத்தப்பட்டு, 1823 கோடி ரூபாய் நீங்கள் விட்டுவிட்டுச் சென்ற அந்தச் சுமை, உங்களால் உருவாக்கப்பட்ட அந்த வேதனை எங்களுக்கு, இந்த நாட்டு மக்களுக்கு புலம்பலாக வந்துவிட்டது. நீங்களும் சேர்ந்து புலம்புகிறீர்கள். இப்போதேனும் உணர்ந்து விட்டீர்களே என்பதற்காக நான் உங்களைப் பாராட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12-05*

அதுமட்டுமல்ல. உணவு தானியத்தைப் பொறுத்தவரையில் தஞ்சையில் இருந்து நெல் எங்குமே செல்லக்கூடாது என்று தேவையற்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தீர்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கு வேண்டுமென்றாலும், எல்லா மாநிலங்களிலும் பசுமைப் புரட்சி, Green Revolution ஏற்பட்டு, ஏகப்பட்ட நெல் உற்பத்தியாகி, லட்சக் கணக்கான டன் அரிசி மைய அரசினுடைய Godown-களில் இருக்கின்றபோது எதற்காக இந்தக் கட்டுப்பாட்டை, 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருக்க வேண்டிய கட்டுப்பாட்டை, உபரி உற்பத்தி என்ற நிலையிலேகூட எந்த நோக்கத்தோடு, எந்த ஆதாய நோக்கத்தோடு அந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தீர்களோ அது ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஆனால், அதன் மூலமாக இந்த ஆட்சியின் தலையிலே நீங்கள் சுமத்திவிட்டுச் சென்ற சுமை, 1445 கோடி ரூபாய் சுமையை சுமத்திவிட்டுச் சென்றீர்கள். ஏகப்பட்ட நெல்லைக் கொள்முதல் செய்தீர்கள். 1 இலட்சம் டன் நெல்லே போதும் பொது விநியோக முறைக்கு என்ற முறையிலே, Food Corporation of India குறைந்த விலையிலே தரக்கூடிய பணம், அரிசி ஏராளம் இருந்தபோதும்கூட 1445 கோடி ரூபாய்க்கு உபரியாக 16 இலட்சம் டன் நெல்லைக் கொள்முதல் செய்தீர்கள். பிறகு, ஏலத்தில் விட்டீர்கள், கெட்டுவிட்டது என்று. கெட்டுவிட்டது என்று ஏலத்தில் விடப்பட்டதிலே அரசுக்கு ஏற்பட்ட இழப்பு சுமார் நூறு கோடி ரூபாய். ஆனால், யாருக்கோ இலாபம். தூத்துக்குடியிலேயிருந்து பெங்களூருக்கு இரயிலிலே சென்ற (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அரிசி இயற்கையின் கோளாறு காரணமாக இரயில் தடம் புரண்ட காரணத்தால் உலகுக்குத் தெரிந்தது. எப்படி இந்த 1445 கோடி ரூபாய்க்கு தேவையற்ற நெல்லைக் கொள்முதல் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) Godown-லே வைத்து பிறகு கெட்டுவிட்டது என்று சொல்லி



சுமார் 9 ரூபாய், 10 ரூபாய்க்குக் கொள்முதல் செய்துவிட்டு, கெட்டுவிட்டது என்ற நிலையில் ஏலம் என்று 4 ரூபாய், 5 ரூபாய்க்கு விற்று, இரயில் தடம் புரண்ட காரணத்தினால் உலகுக்கு, அந்த விஷயம் வெளிச்சத்திற்கு வந்தது. புலம்பலுக்குத் தமிழக மக்கள் உள்ளாக்கப்பட்டார்கள். அந்தப் புலம்பலை மறைப்பதற்காக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நீங்கள் புலம்பல் புலம்பல் என்று சொல்லி ஒப்பாரி வைக்கின்றீர்கள்.

அதுமட்டுமல்ல. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனிலிருந்து அவர்கள் நமக்குத் தரவேண்டிய ராயல்டி பணம் 250 கோடி ரூபாயை, முன்கூட்டியே அந்தப் பணத்தை வாங்கிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) இருக்கட்டும். அவை தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) கட்டாயம் அவை தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். தாங்கிக்கொள்கிற சக்தி உங்களுக்கு வேண்டும். (குறுக்கீடுகள்) கேட்கிற பொறுமை உங்களுக்கு வேண்டும். குற்றங்களைச் செய்துவிட்டு (குறுக்கீடு) நான் விளக்கத்தைச் சொல்லி முடித்த பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். நான் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் வேலு அவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** உங்களது எதிர்க்கட்சித் தலைவர் இருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேராசிரியர் அவர்களே, நான் இதைச் சொல்லி முடித்த பிறகு பேசுங்கள் Only two more points I have to reveal. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை அப்படியில்லை. நீங்கள் புலம்பல், புலம்பல் என்று சொல்லிவிட்டு அதைப் பத்திரிகையில் போட வைத்துவிட்டு மக்களுக்குத் தவறான தகவலைக் காட்டிவிட்டு அதற்கு அவ்வப்போது விளக்கத்தைத் தரவில்லை என்றால் நீங்கள் கெட்டிக்காரர்கள் என்றும் நாங்கள் ஏதோ ஏமாந்தவர்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்றும்

ஆகிவிடக்கூடாது. (குறுக்கீடுகள்) நான் விளக்கத்தை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறுகிறபோது உறுப்பினர்கள், அதிலேயும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஏதேனும் ஒரு வகையில் அவர்களுடைய மாறுபட்ட கருத்தை வலியுறுத்துவதற்காக சில சொற்களைப் பயன்படுத்த நேரிடுகிறது.

புலம்பல் என்று சொன்ன காரணத்தினால் அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் எடுத்து—அதை புலம்பல் என்று நான் சொல்லவில்லை—ஆனால், இவ்வளவு நேரம் அதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பது என்னுடைய கருத்து. அது என்னுடைய கருத்தாகக்கூட விட்டுவிடலாம். ஆனால், நிதிநிலை அறிக்கையை எப்படி மாற்றுக் கட்சியிலே உள்ளவர்கள் அணுகுவது? அந்தக் கருத்துகளிலே மாறுபாடுகள் இல்லை என்றால் அப்புறம் விவாதம் எதற்கு? எல்லோருமே ஒரே கட்சியாக இருந்துவிட்டால் ஒரே பக்கமாக இருந்தால் சட்டமன்றம் செயல்படுவதிலே அர்த்தமே இல்லாமல் போய்விடும். மாறுபட்ட கருத்துத்தான் நிதியமைச்சர் அவர்களுக்குத் தன்னுடைய வாதத்தை எடுத்து வைப்பதற்கும் மேலும் மேலும் விளக்குவதற்கும் வாய்ப்பு அளிக்கும். இறுதியாக நிதியமைச்சர்தான் பேசப் போகிறார் என்ற காரணத்தினாலே, இப்போதே இறுதி உரையை ஆற்றிவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அவருக்கே உரித்தான பண்பு நெறியோடு, இந்தப் புலம்பல் என்ற வார்த்தையைத் தவிர்த்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியிருந்தாலோ அல்லது அவருடைய இயக்கத்தினுடைய தலைவர் வெளியிலே விட்டிருக்கிறாரே அறிக்கை புலம்பல், புலம்பல், புலம்பல் என இதுபோன்றவை எல்லாம் தவிர்க்கப்பட்டிருக்குமேயானால், மாண்புமிகு பேராசிரியர் அவர்களுடைய பண்பு, பெருந்தன்மையை எல்லோரும் கடைப் பிடிக்கின்றபோது நான் பேராசிரியர்



அவர்களுடைய அறிவுரையை ஏற்கிறேன். பிறகு என்னுடைய விளக்கத்தைச் சொல்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய பெருந்தன்மை, பெருந்தன்மை என்றெல்லாம் சொல்கிற காரணத்தினாலே அதிலே ஒரு அரசியல் புகுந்துவிடக்கூடாது என்று நான் (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெருந்தன்மை என்பதைவிட நிலைமைகளைச் சமாளிப்பதுதான் மனிதத் தன்மை. ஒரு கருத்து மாறுபாடு ஏற்பட்டு ஒரு முரண்பாடு வருகிறபோது, நிலைமைகளுக்கேற்ப ஒவ்வொருவரும் ஒரு சொல்லைப பயன்படுத்துகிறபோது ஒவ்வொரு நோக்கத்திலே ஒரு சூழ்நிலையில் சொல்ல நேருகிறது. வெளியிலே நான் பேசுவதைக்கூட இங்கே பேசுவதில்லை. பொதுக் கூட்டத்திலே பேசுகிற அதே வகையான வார்த்தைகளை, சொற்றொடர்களை இங்கே பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இரண்டாவது, ஓர் அறிக்கையைப் படிக்கிறபோது, அந்த அறிக்கை முழுவதும் வருத்தம் தோய்ந்த, இன்னும் சொல்லப்போனால், செயலற்ற ஒரு நிலையில் தாங்கள் இருப்பதாகச் சொல்லிக்கொள்கிற ஒரு கருத்து வருகிற காரணத்தால், அந்தச் சொல் இடம் பெற்றதே தவிர, தனிப்பட்ட முறையில் அந்தச் சொல்லை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-10*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் சொன்னதில் பெருந்தன்மை இருப்பதாக நான் கருதவில்லை. பேராசிரியர் அவர்கள் சொன்னது எப்படி இருக்கிறது என்று சொன்னால், "மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம்" என்பதுபோல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினரும் அவருடைய கட்சித் தலைவரும் புலம்பல் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினால் தவறில்லை. ஆனால், அதே புலம்பல் என்ற சொல்லை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பயன்படுத்தினால் தவறு என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார். ஆகவே, நிச்சயமாக அதில் பெருந்தன்மை இல்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பேராசிரியர் அவர்களுக்கு (குறுக்கீடு) இப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னது பேராசிரியர் அவர்களுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தன்மை என்பது, தனக்கு வருகிற தீங்கை ஏற்றுக்கொண்டு அந்தத் தீங்கு காரணமாக பிறரிடத்திலே மாறுபாடு கொள்ளாமல் இருப்பதுதான் பெருந்தன்மை. அந்த வகையிலே இங்கொன்றும் நடைபெறவில்லை. ஆகவே, முதலமைச்சர் சொன்னதைப்போல், அது பெருந்தன்மை அல்ல. ஆனால், உண்மை விளக்கம் என்ற அடிப்படையில் நிலைமையைப் புரிந்துகொள்வதற்காக நான் எடுத்துச் சொன்னது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்க்கிறபோது ஒரு உவமையைச் சொல்ல வேண்டும். இப்பொழுதுதான் வேறொரு கருத்தைச் சொல்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயபல்ஸ் பற்றி உதாரணமாகச் சொல்லவில்லையா? அந்த அடிப்படையில் புலம்பல் என்கிற வார்த்தையை நான் ஒன்றும் சட்டமன்றத்திலே முதன்முதலாக இதைப் பயன்படுத்தவில்லை. ஒருமுறை பேரவைத் தலைவர்கூட பரிதியைப் பார்த்து புலம்புகின்றீர்கள் என்றுகூட ஒரு வார்த்தையைச் சொன்னார். நான் அதை உங்கள் மீது ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இப்படிப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது இந்த மாமன்றத்திலே. எனவே, இதையெல்லாம் படித்துப் பார்க்கிறபோது எனக்கு ஒரு புலம்பலாகத் தெரிகிறது என்று சொல்வதொன்றும் தவறில்லை. அது ஒன்றும் unparliamentary word இல்லை. எனவே, புலம்பி இருக்கிறார் என்று நான் சொன்னேன். எனவே, அந்த அடிப்படையைப் பார்க்கிறபோது எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தில் (குறுக்கீடு) கலைஞர் அவர்கள் சத்துணவு வேண்டும் என்பதற்காக முட்டை அளித்தார்கள். அதுகூட இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. ஆனாலும்கூட, எந்த வரியும் போடாமல் தொழிலாளர் பிரச்சினையாக இருந்தாலும், ஆசிரியர் பிரச்சினையாக இருந்தாலும், அலுவலர் பிரச்சினையாக இருந்தாலும், கரும்பு விவசாயிகள் பிரச்சினையாக இருந்தாலும், அத்தனை பிரச்சினைகளும் கலைஞர் ஆட்சியிலே தீர்க்கப்பட்டன. இது நாடறிந்த உண்மை.



அதேநேரத்திலே, இதிலே இரண்டைப் பாராட்டலாம் என்று நான் கருதுகிறேன். காரணம் குளச்சல் துறைமுகம், அது கலைஞர் காலத்திலே தொடங்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் அது தொடர்ந்து செயல்படுவதற்கு வேண்டிய முயற்சிகளை மலேசிய நிறுவனத்தோடு பேசி அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது.

அதேபோன்று தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 2000 ஆண்டிலேயே அதற்காக 5.56 கோடி ரூபாயில் கிட்டத்தட்ட 25 ஆயிரம் ஏக்கர் எடுக்க வேண்டும் என்று அப்பொழுதே முடிவு செய்தபோது, அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு 40 கோடி ரூபாய் செலவிலே இந்த அரசு முன்வந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியைக்கூட வரவேற்கலாம். பக்கம் 1-லே திட்டத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எ.வ. வேலு:** ஒளிவு மறைவற்ற நிதி நிர்வாகம் மற்றும் வெளிப்படையான ஆட்சிமுறை அமைய வேண்டும் என்று முதல் பக்கத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எங்களுடைய கழக அரசினால் தெரிவிக்கப்பட்ட அந்தக் கொள்கையை இந்த அரசும் அந்த வாக்கியத்திலே குறிப்பிட்டதற்காக இந்த நேரத்திலே நான் வரவேற்கிறேன்.

பக்கம் 9-ல் பொது விநியோக முறையில் சீர்திருத்தம்; தற்போது புழக்கத்திலுள்ள போலி அட்டைகளை ஒழிக்கும் நோக்குடன், பொது விநியோக முறையில் அரிசியை விற்பதற்காக 1-7-2000-ல் அடையாளச் சீட்டு முறையைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முறையில் அரிசி பெற தகுதி பெற்ற குடும்ப அட்டை வைத்துள்ளவர்களுக்குத்தான் இந்தக் கூப்பன் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம், அந்த அரிசியைப் பெறுகின்ற தகுதி யாருக்கு வருகிறது. ஏனென்று சொன்னால், கிட்டத்தட்ட 1 கோடியே 61 இலட்சம் கார்டு உறுப்பினர்கள் இன்றைக்கு 3½ ரூபாய்க்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த 1 கோடியே 61 இலட்சம் பேருக்கும் 3½ ரூபாய்க்கு தொடர்ந்து அளிக்கப் போகிறீர்களா? அவர்களுக்குக் கூப்பன் அளிக்கப் போகிறீர்களா அல்லது வறுமைக் கோட்டிற்குக்

கீழே என்று ஏற்கெனவே கிட்டத்தட்ட 4 மாத காலத்திற்கு முன்னால் தினமணியிலே இந்த அரசினுடைய கொள்கை என்று சொல்லப்பட்டிருப்பது, வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் அரிசியின் விலை ரூ.9. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை ரூ. 3½ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, இந்தக் கூப்பன் என்பது இப்போது அரிசி வாங்கிக் கொண்டிருக்கிற அத்தனை பேருக்கும் பொருந்துமா அல்லது வறுமைக்கோடு என்கிற ஓர் அளவைப் பயன்படுத்தி, அவர்களுக்கு மட்டும் ஒதுக்கி, அவர்களுக்கு கூப்பன் அளிக்க இந்த அரசு கருதியுள்ளதா என்கிற விளக்கத்தை...........

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் வருத்தம் அடைந்திருக்கிறார்கள். அதனால்தான் அவ்வப்போது ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று பல உறுப்பினர்கள் எழுந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய உள்ளக்கிடக்கையை நான் வெளிப்படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை பெயர் சொல்லிக் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக திரு. தண்டராம்பட்டு வேலு அவர்களை சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்தப் பேரவைக்கு அனுப்பியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நன்றியை மறந்து அவரை வெறும் எம்.ஜி.ஆர் என்று அழைக்கிறார். ஆனால், இன்றைக்கு அவரை இந்த அவைக்கு அனுப்பியிருக்கிற தலைவரை கலைஞர் என்று அவர் பேசுகிறார். அதனால்தான் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித் தன்னை ஆளாக்கிய, முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக்கிய தலைவரை, நன்றி மறந்து இப்படி பெயர் சொல்லி அழைப்பது நல்லதல்ல. அவருக்கே இது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மக்கள் திலகம் என்ற அந்த வார்த்தையைத்தான் பயன்படுத்தினேன்.



நான் நேரடியாகச் சொல்லவில்லை. குறிப்பெடுத்ததைப் பார்க்கலாம். (குறுக்கீடுகள்). மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்ற வார்த்தையைத்தான்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் முதன்முதலில் வெறும் எம்.ஜி.ஆர் என்றுதான் சொன்னார். அதன் பிறகு மக்கள் திலகம் என்றார். அதன்பிறகு மீண்டும் வெறும் எம்.ஜி.ஆர். என்றுதான் சொன்னார். எல்லோரும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆகவே,

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கூட பேசுகிறபோது, தன்னை எம்.ஜி.ஆர். என்று அழைக்க வேண்டுமென்றுதான் சொல்வார். (குறுக்கீடுகள்) இன்னும் ஒருபடி போனால் அவர் வாத்தியார் என்று சொல்வதில்தான் மகிழ்வார். (குறுக்கீடுகள்) ஆனால், என்னைப் பொறுத்த அளவில், பேரவைத் தலைவர் அவர்களே, நான் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்றுதான் குறிப்பிட்டேன். நீங்கள் வேண்டுமானால் குறிப்பை எடுத்துப் பாருங்கள். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்றுதான் நான் குறிப்பிட்டேன். அதோடு மட்டுமல்ல. கலைஞர் ஒன்றும் சாதாரணமானவர் அல்ல. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கே தலைவராக இருந்தவர்தான் கலைஞர் என்பது நாடறிந்த உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, (குறுக்கீடுகள்) உறுப்பினர் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலு (குறுக்கீடுகள்) மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் என்பது.. (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய உள்ளக் குமுறல் என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு அவர்கள் விளக்க வேண்டிய விதத்திலே விளக்கிவிட்டார்கள்; சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டார்கள். திரு. வேலு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். என்பது அவருக்குரிய பழைய அடைமொழி. 1972-க்குப் பிறகு அவர் புரட்சித்

தலைவர் எம்.ஜி.ஆர். தான். உங்களை எம்.எல்.ஏ. ஆக்கும்போது அவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.தான். ஆகவே, புரட்சித் தலைவர் என்று குறிப்பிடுவதிலே ஒன்றும் தவறில்லை.

**திரு. எ.வ. வேலு:** அதில் ஒன்றும் மாற்றுக் கருத்தில்லை. புரட்சித் தலைவர் என்று சொல்லக் கூடாது என்பதல்ல. பல்வேறு காலகட்டங்களில், பொதுக் கூட்டங்களில் பேசுகிறபோது நாங்கள் மக்கள் திலகம் என்று பேசி பழகியிருக்கிறோம். அதைத் தான் தொடர்ந்து சொன்னேன். அதனால் நான் நன்றி உள்ளவன் அல்ல என்று பொருள் அல்ல. என்னைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருக்கிற வரை அவருக்கு ஒரு சேவகனாக இருந்து, அவருடைய புகழை ஆயிரக்கணக்கான மேடைகளிலே நான் பேசியிருக்கிறேன். எனவே, புரட்சித் தலைவரைப் புறக்கணிக்கிறேன் என்று பொருள் அல்ல. உங்களுக்கே தெரியும். நீங்களும் நானும் எத்தனையோ மேடைகளில் புரட்சித் தலைவரின் புகழைப் பாடியிருக்கிறோம். எனவே, அதுவல்ல இப்போது பிரச்சினை.

நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அரிசி கொடுப்பதிலே 3.50 ரூபாய்க்கு அரிசியை அனைத்துத் தரப்பினருக்கும் கொடுக்கப் போகிறீர்களா அல்லது அவர்களுக்கெல்லாம் கூப்பன் வழங்கப்படுமா என்பதை இந்த அவையின் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பக்கம் 12-ல்..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3.50 ரூபாய் அரிசியை, ஏழைகளுக்குக் கொடுக்கப்படும் என்ற நிலையில் இருக்கிற அரிசியை, மாண்புமிகு உறுப்பினர் தண்டராம்பட்டு வேலு அவர்களுக்கும் இந்த அரிசி கிடைக்க வேண்டுமென்று எண்ணுகிறாரா, எந்தப் பொருளில் பேசுகிறார் என்பது தெரியவில்லை. ஏற்கெனவே தெளிவாக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்கள் தெளிவாக்கியிருக்கிறார்கள். 3.50 ரூபாய் அரிசி திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஏழைகளுக்கு வழங்கப்பட்டு வருகிற திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் இந்த நிலை தொடரும் என்று சொல்லியிருக்கிறார்கள். கூப்பன் திட்டம் கொண்டு வருவது போலி கார்டுகளை ஒழிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மக்களை திசை திருப்புவதற்காக ஏதோ மூன்றரை ரூபாய் அரிசி நிறுத்தப்பட இருக்கிறது என்ற



எண்ணம் எழுகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசவேண்டாம். அரசு தெளிவாக இருக்கிறது. மூன்றரை ரூபாய் அரிசித் திட்டம் தொடரும். ஏழைகளுக்கு என்றென்றும் தொடரும்.

பிற்பகல் 12-20

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3½ ரூபாய்க்குக் கொடுப்பதை நிறுத்திவிடுவீர்கள் என்று நான் சொல்லவில்லை. 3½ ரூபாய் என்பது தினமணியிலே 29ஆம் தேதி நவம்பர் மாதம் வந்த தினமணியிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு 3½ ரூபாய், அதற்கு மேலே இருப்பவர்களுக்கு ஒன்பது ரூபாய் என்பது அரசினுடைய கொள்கை என்ற அடிப்படையிலே தினமணியிலே வந்து இருக்கிற செய்தியைத்தான் நான் சொல்கிறேன். எனவே, அனைவருக்கும், சர்க்கரை அட்டை வைத்து இருக்கிற அனைவருக்கும் அடையாள அட்டை கொடுக்கப் போகிறீர்களா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்கு எழுப்புகின்ற இந்தக் கேள்விகள் அனைத்தையும் நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே கேட்டுவிட்டார்கள். அதற்கெல்லாம் விரிவாக, விளக்கமாக நானும் பதில் அளித்தேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் நேற்று பதில் அளித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் நேற்று இந்த அவைக்கு வரவில்லையோ, என்னவோ எனக்குத் தெரியவில்லை. அப்படி வரவில்லையென்றாலும்கூட, அந்தச் செய்திகள் எல்லாம் பத்திரிகைகளிலே விரிவாக வந்திருக்கின்றன. ஆகவே, அவர் பத்திரிகைகளையும் படிக்கவில்லையென்று தெரிகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்களின் பேச்சைப் பார்க்கின்ற போது அவர் எப்போதோ தயார் செய்து வைத்துக்கொண்டதை இப்போது படித்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேலு, நேற்று புகழேந்தி இதே கருத்தைச் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கான விளக்கத்தை மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் சட்டமன்றத்திற்கு வந்தேன். பத்திரிகை படித்தேன். நான் என்ன கேட்கிறேன் என்று சொன்னால் 3½ ரூபாய்க்கு இந்த அரசாங்கம் கொடுப்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், 3½ ரூபாய்க்கு

இந்த அரசாங்கம் கொடுக்கிற அரிசிக்கு அளவுகோல் என்ன? யார், யாருக்கு கொடுக்கப் போகிறீர்கள் என்பது தெரிய வேண்டும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 12-ல் போக்குவரத்துத் துறையைப் பொறுத்த அளவிற்கு நலிவு அடைந்த (மணியடிக்கப்பெற்றது) மொத்த நேரத்தையும் நீங்கள் எடுத்துக் கொண்டு விட்டீர்கள். நலிவடைந்த போக்குவரத்து வழித் தடங்களை இந்த அரசாங்கம் படிப்படியாக தனியார்மயமாக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த நலிவடைவது எங்கே என்று சொன்னால், ஒரு நகரத்திலிருந்து கிராமத்திற்குப் போகும்போது அதற்கு வசூல் இருக்காது. காரணம் நகரப் பேருந்திற்கு எப்போதுமே சார்ஜ்கூட கம்மிதான். பஸ் சார்ஜ்கூட கம்மிதான். எனவே, அதிலே அதிக வருமானம் எதிர்பார்க்க முடியாது. கிராமத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் நகரத்திற்கு வரவேண்டும் என்று சொன்னால் அந்த நகர பேருந்திலேதான் வர முடியும்.

இன்னொன்று, இலவச பஸ் பாஸ் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு பள்ளி பிள்ளைகளும் இன்றைக்கு நகர்ப்புறத்திற்கு வந்தாகவேண்டும். இப்படி இலவச பஸ் பாஸ் திட்டமும் அமலிலே இருக்கிறபோது கிராமத்திலே இருக்கும் மாணவர்கள் எல்லாம் நகரத்திற்கு வருகிறபோது, குறைந்த கட்டணத்திலே வருகிறபோது அந்த ரூட்டுகள் எல்லாம், நட்டத்தில்தான் இயங்கும். அப்படி இயங்குகிறது என்று சொன்னால், அதையெல்லாம் நீங்கள் எடுத்து விட்டீர்கள் என்று சொன்னால் அந்த பஸ் பாஸ் பெற்ற மாணவர்களின் நிலை என்ன? கிராமத்திலே இருக்கிற விவசாயி குறைந்த செலவிலே நகரத்திற்கு வந்தானே, அவனுடைய நிலை என்ன? எனவே, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பக்கம் 13. தமிழ்நாடு மின்சார வாரியம் மாநிலத்தில் வழங்கியுள்ள மின் இணைப்புகள் அனைத்திற்கும் மின்னளவைக் கருவிகளைப் பொறுத்தும் முழுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நாங்கள் எல்லாம் விவசாயிகள். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே முனிசிபாலிட்டியே கிடையாது. அனைத்தும் கிராமங்கள். அதுவும் இறவைப் பாசனத்தையே நம்பியிருக்கிற தொகுதி, என்னுடைய தொகுதி. ஏற்கெனவே இலவச மின்சாரம் விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டீர்கள். இன்றைக்கு விவசாயிகள் எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலே ஒரு மீட்டர் வைக்க வேண்டும் என்று சொன்னால் அது என்ன பொருள் என்று எனக்குப் புரியவில்லை. காரணம் என்ன என்று சொன்னால்...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் தொடரும் என்பதை ஏற்கெனவே தெளிவாக அறிவித்து விட்டோம். இப்போது மீட்டர்கள் பொருத்தப்படுகின்றன. அது எதற்காக என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். விவசாயிகளுக்காக எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அரசிற்கு, விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு எத்தனை யூனிட் மின்சாரம் தேவைப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. அதை அளவிடத்தான், கணக்கிடத்தான் மீட்டர்கள் பொருத்தப்படுகின்றன.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 23. அதிலே அடுத்த நிதியாண்டில் சென்னைக் குடிநீர் வழங்கல் பெரும் திட்டம் ஒன்றுக்கான புதிய வீராணம் திட்டத்திற்காக 77.38 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இப்போது சற்று முன்னால் நடைபெற்ற விவாதத்தில்கூட காவிரியினுடைய பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாத நேரத்தில், காவிரித் தண்ணீர் எல்லாம் அதைப் பயனாளிகளாக இருக்கிற விவசாயிகள் எல்லாம் பகிர்ந்து கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கிற காரணத்தினால் உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு போய் உரிய பங்கை நாம் பெற வேண்டும் என்று இந்த அரசு முயற்சி செய்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில்—ஏனென்று சொன்னால் வீராணம் ஏரியே காவிரியை நம்பியிருக்கிற ஒரு ஏரி. எனவே, அந்த ஏரிக்கு தண்ணீரே வராமல்—77.38 கோடி ரூபாய் அதற்காக பணம் ஒதுக்குவது என்பது சரியாக இருக்குமா என்று நான் இந்த அரசைக் கேட்க விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால் காவிரித் தண்ணீர் உறுதி செய்யப்பட்ட பின்பு, இந்த வீராணம் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால், அது பயனை அளிக்கும். அப்படி காவிரி நீர் வராத முன்பு, இதை நீங்கள் உறுதி செய்தால், அந்தப் பணம் வீணாக ஆகிவிடும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பக்கம் 27....

முற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

[2002 ஏப்ரல் 2

**திரு. எ.வ. வேலு:** நான் 6 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். என்னுடைய நேரங்களையெல்லாம் நீங்களே எடுத்துக் கொண்டீர்கள். ஒரு பிரதான எதிர்க்கட்சிக்கு நீங்கள் 20 நிமிடங்களாவது கொடுக்க வேண்டும். நேற்றுகூட, உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேச்சிலே மொத்த நேரத்தையும் எடுத்துக்கொண்டீர்கள். ஆளுங்கட்சித் தலைவர்களே பேசி விட்டால் நாங்கள் எப்படிப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உரையின் கடைசிக்கு வாருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** பக்கம் 27-ல், தற்போதுள்ள அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், இம்மாநிலத்திலுள்ள 385 யூனியன்களிலே இந்த 1.00 கோடி ரூபாய் மூலதனத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கொண்டுவரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இதற்காக எங்கேயாவது ஒரு 100 கோடி ரூபாய், இல்லை, 100 ரூபாய் டோக்கன் அமௌண்ட் எங்கேயாவது இதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறதா என்று சொன்னால் கிடையாது. ஆனால், ஆளுநர் உரையிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள். தனியார் உதவியுடன் ஊக்குவிக்கப்பட்டு, இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தனியார் யாரும் வரவில்லை என்று சொன்னால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அவ்வளவுதானா? ஆக, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்த நோக்கம் என்ன என்று சொன்னால்,—என்னுடைய தொகுதியிலே நான் ஆரம்பத்திலேயே சொன்னதுமாதிரி, முனிசிபாலிட்டியே கிடையாது. எல்லாம் கிராமம்தான்—ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவைப் பெறுவதற்காக, ரோடைப் போடுவதற்காக, பாலம் கட்டுவதற்காக, தார் ரோடுகள் போடுவதற்காக, பள்ளிக்கூடம் கட்டுவதற்காக, இப்படி ஒரு கிராமத்தினுடைய அன்றாடப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்கிற ஒரு திட்டமாகத்தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இருந்தது. ஆனால், நீங்கள் என்ன சொல்கிறீர்கள். நாங்கள் 1.00 கோடி ரூபாய் அங்கே மூலதனத்தைப்போட்டு, அங்கே ஒரு தொழிற்சாலையை அமைத்து அந்தப் பகுதியிலே இருக்கிற ரா-மெட்டீரியலைக் கொண்டு உற்பத்திச் செய்யப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலே இரண்டே இரண்டுதான் உற்பத்தி ஆகிறது. ஒன்று கரும்பு, இன்னொன்று நெல். ஆக, நெல்லை அரைவை செய்கிற ரைஸ்-மில்லை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்களா? ஒரு ரைஸ் மில்லில் எத்தனை பேருக்கு



2002 ஏப்ரல் 2] [திரு. எ.வ. வேலு]

வேலைவாய்ப்பைத் தரமுடியும்? கரும்பு ஆலை என்று சொன்னால், எங்களுடைய பகுதியிலே ஏற்கெனவே இருக்கிற கரும்பு விவசாயிகள் இன்றைக்கு பணம் கிடைக்காமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஒரு கரும்பாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட இன்றைக்கு இருக்கிற ப்ராஜெக்ட் பிரகாரம் 50 கோடி ரூபாய் தேவை. அப்படி 50 கோடி ரூபாய் செலவிலே என்னுடைய பகுதியிலே ஒரு கரும்பாலையை உருவாக்கப் போகிறீர்களா? ஆக, கலைஞர் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்தார் என்கிற அடிப்படையிலே இதற்கு மூடு விழா நடைபெறுகிறதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியைப் பற்றி நானும் அறிவேன். கரும்பும், நெல்லும் மட்டுமே அந்தத் தொகுதியில் இருக்கும் என்று சொன்னால், அந்தத் தொகுதி ஏழைகளே இல்லாத ஒரு மறுமலர்ச்சித் தொகுதியாக இருக்கும். அப்படி அல்ல. மேட்டுக்காடு நிறைய உள்ள தொகுதி. கடலைப் பயிர். சோளம், கம்பு விளைகின்ற பகுதி நிறைய இருக்கின்றது. அங்கு குச்சிக்கிழங்கை பயிரிடலாம், காட்டாமணக்குச் செடியைப் பயிரிடலாம். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கமிட்டி கொடுத்திருக்கிற ஆலோசனையின் அடிப்படையில், உங்கள் தொகுதியிலே காட்டாமணக்குச் செடியிலேயிருந்து டீசலுக்குச் சமமான எண்ணெய் எடுக்கின்ற ஒரு தொழிற்சாலை உங்கள் தொகுதிக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதுபோன்ற திட்டங்களைக் கொண்டுவருவதுதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவிற்கு, தமிழக அரசு, தமிழுக்காக வாழுகிறோம். தமிழைப் பரப்புகிறோம் என்று பேசப்படுகிறதேயொழிய, ஆனால், தமிழ்ப் பண்பாட்டுத் துறை தலைப்பிலே எதையும், எந்தத் திட்டங்களையும் இங்கே சொல்ல வில்லை. காரணம், சென்ற ஆண்டுகூட, நீங்கள் தமிழ்ப் பண்பாட்டுத் துறையைப் பொறுத்த அளவிற்குப் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னீர்கள். ஆன்மீகவாதிகள் அவர்களுடைய பெயரால்—அருணகிரிநாதர் பிறந்தது எங்கள் ஊர் திருவண்ணாமலையில்—

[திரு. எ.வ. வேலு] [2002 ஏப்ரல் 2

அதிலே நீங்கள் சொல்லியிருந்தீர்கள்; அருணகிரிநாதர், காரைக்கால் அம்மையார், தேவாரம் பாடிய மூவர், வள்ளலார், ஆழ்வார்கள் இவர்கள் பெயர்களிலே தமிழ்ப் பண்பாட்டுத் துறை மூலமாக விருதுகள் எல்லாம் வழங்கப்படும் என்று சென்ற ஆண்டு சொன்னீர்கள். ஆனால், ஒன்றையும் காணோம். இப்போது என்ன சொல்லியிருக்கிறீர்கள்; திருவள்ளுவர் பெயரால் நாங்கள் பல்கலைக்கழகம் ஒன்றை வேலூரிலே உருவாக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். இதுவும் காற்றோடு காற்றாகப் போகிறதா? எனக்கு இருக்கிற பயமெல்லாம் இங்கே மரபுகள் எல்லாம் சிறிது சிறிதாக மாற்றப்பட்டு இருக்கின்றன. இரண்டாவது பக்கத்திலே சொல்லியிருக்கிறீர்கள்; அண்ணா காலத்திலேயிருந்து, இந்த மாமன்றத்திலே எப்பொழுதும் நிதிநிலை அறிக்கையிலே, அண்ணா வந்ததிலிருந்தே திருவள்ளுவர் இயற்றியுள்ள திருக்குறள் இடம் பெறும். ஆனால், இதிலே இடம் பெறவில்லை; என்ன காரணம்?

உலகளாவிய தமிழர்கள் எல்லாம், இன்றைக்கு கன்னியாகுமரியிலே இருக்கிற திருவள்ளுவர் சிலையை கலைஞர் வைத்தார் என்று பாராட்டிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், கலைஞர் மீது இருக்கின்ற கோபத்தில்தான், இந்தத் திருக்குறள் இதில் இடம் பெறவில்லை என்ற அடிப்படையில்தான் நாங்கள் எடுத்துக்கொள்ள முடியுமேயொழிய வேறு ஒன்றும் இல்லை. நேற்றையதினம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, அந்தச் சிலைக்கு புரட்சித் தலைவர்தான் அடிக்கல் நாட்டினார்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், புரட்சித் தலைவியினுடைய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழைப் பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. தமிழுக்கு எந்த அளவிற்கு உயர்வு தர வேண்டும். தமிழினுடைய... (குறுக்கீடு) நான் உண்மையைச் சொல்கின்றேன். வள்ளுவர் பெயரால் உங்களுடைய மாவட்டத்தில் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்குகிறார்கள் என்றால், அதற்காக நீங்கள் பெருமைப்படவேண்டும். ஆகவே, ஏதோ வள்ளுவர், (குறுக்கீடு) நீங்கள் சொல்கிறீர்களே, இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்?



2002 ஏப்ரல் 2]

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி. (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) போதும், போதும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள், தவறான ஒரு தகவலை அவையின் மூலம் மக்களுக்குப் பரப்பிக் கொண்டிருக்கிறார். மொழியின் பெயரைச் சொல்லி, இனத்தின் பெயரைச் சொல்லி, குறளின் பெயரைச் சொல்லி, பொதுவாழ்வில் வந்துவிட்டால் மட்டும் அவர்கள் பச்சைத் தமிழர்கள். உண்மைத் தமிழர்கள் என்று ஆகிவிட முடியாது. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் மதுரையிலே உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். தமிழ் மொழிக்காக—இவ்வளவு, மொழிக்காக, குறளுக்காகப் பேசுகின்றவர்கள், தமிழ் மொழிக்காக—பன்னெடு ஆண்டுகாலம் முதலமைச்சராக எதிர்க்கட்சியினுடைய தலைவர் இருந்த காலத்தில்கூட, தி.மு.க. வினுடைய தலைவர் இருந்த காலத்தில், தமிழ் மொழிக்காக ஒரு பல்கலைக் கழகத்தைத் தொடங்கவில்லை. ஆனால், பச்சைத் தமிழனான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.தான் தஞ்சையிலே தமிழ் மொழிக்காக ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கினார். அதையடுத்து, தமிழ் மொழிக்காக உலகத் தமிழ் மாநாட்டை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்தான், (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்திலுள்ள தமிழ் இனமே பாராட்டுகிற அளவிற்கு, உண்மைத் தமிழ் உணர்வோடு, அதைக் கூட்டியது மட்டுமல்ல, அறிவியல் தமிழுக்கு முக்கியத்துவம் தந்தால்தான், தாழ்ந்த தமிழ் இனம் தலை நிமிர்ந்து வாழமுடியும், வறுமைப் பிணியிலிருந்து மீள முடியும். உலகிலே ஒரு மேன்மையான சமுதாயமாக மிளிர முடியும்; அதற்கு அச்சாணியாக விளங்குவது அறிவியல் தமிழ் என்பதனை உலகிற்கு எடுத்துக் காட்ட, நடைமுறையில் இதைக் கொண்டு வந்தது நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள். மொழியின் பெயரைச் சொல்லி அரசியல் வளர்ப்பது; அரசியல் வாழ்வில் பிழைப்பது எங்களது நோக்கமல்ல. மொழியின் பெயரைச் சொல்லி, இந்த இனத்தை வளர்க்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணினித் தமிழ் என்கிற தமிழை கலைஞர் அவர்கள்தான் கொண்டு வந்தார்கள் என்பதையும் அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டி, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவிற்கு, விவசாயிகளின், தொழிலாளர்களின், ஏழைகளின் பசியைத் தீர்க்காது. பகட்டாய், பளபளப்பாய், பந்தாவாக இருக்கிற பஞ்சுமிட்டாய் போன்றுதான் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறதேயொழிய போகாத ஊருக்கு இல்லாத வழியைக் காட்டுவதைப்போல இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது. அதோடு மட்டுமல்ல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக் கொள்ளுங்கள். நேற்று அலங்கரிக்கப்பட்ட பொம்மை; இன்று பஞ்சு மிட்டாய். முடித்துக் கொள்ளுங்கள். திரு. சி. சிவசாமி.

***திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலமாம் கோவை மாவட்டத்தின் ஒரு குக்கிராமத்திலே பிறந்த என்னை, திருப்பூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்திலே இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த எங்கள் இதயதெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், எதிர்கால இந்திய அரசியலுக்கே வழிகாட்டுகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கை என்று கூறினால், அது மிகையாகாது. ஏனென்றால், இந்த நிதிநிலை அறிக்கையை வாசிக்கின்றபோது, தமிழகத்தினுடைய முதல்வராக அம்மா அவர்கள் வந்துவிடுவார்களோ என்று அஞ்சி, கடந்த காலங்களில் எண்ணற்ற ஆர்ப்பாட்டங்கள், கூச்சல் கூப்பாடு களெல்லாம் போட்டார்கள் எதிர்க்கட்சியினர். அத்தனையையும் சுக்கு நூறாக்கி, அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி தேர்தலைச் சந்தித்தபோது, அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சியினரெல்லாம் என்ன சொன்னார்கள்; படி அரிசி விலையை, ரேசன் அரிசி விலையை உயர்த்தி விடுவார்கள் என்று கூறினார்கள். ஆனால், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள், அந்த ஆண்டிப்பட்டி தேர்தலிலே வெற்றிபெற்று, இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றபோது, ரேசன் அரிசிக்காக, உணவு மானியத்திற்காக ரூ. 1240 கோடி ஒதுக்கி, இந்த ரேசன் அரிசி விலையை



அதே அளவிலே இருக்கச் செய்திருப்பதை இந்த நாடு போற்றுகின்றது; இந்த நாட்டிலுள்ள மக்கள் போற்றுகின்றார்கள்.

அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும், ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி, வேளாண் அடிப்படையில் ஒரு புதிய தொழில் தொடங்குகின்ற ஒரு திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். இது எதைக் காட்டுகின்றது என்றால், கடந்த காலங்களிலே—ஆட்டாங்கல்லிலே இருக்கிற அந்த அம்மி, அதாவது ஆட்டாங்கல் அப்படியே இருக்க அம்மி மட்டும் சுற்றி வரும். ஆனால், தற்போது அம்மி அப்படியே இருக்கிறது; கிரைண்டர் சுற்றி வருகின்றது. அதைப்போல, கடந்த காலத்திலே—கிராமங்களிலேயிருந்து விவசாயிகளும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் தொழில் செய்வதற்காக நகரத்தைச் சுற்றிய அந்த நிலையை மாற்றி, இன்றைக்கு அந்த விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் இருக்கக்கூடிய அந்த கிராமத்தைச் சுற்றி, தொழிற்சாலைகளை அமைக்கின்ற விதத்தில் இன்றைக்கு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கின்றார்கள் என்றால் இதை எந்த அளவிற்குப் பாராட்டுவது என்று தெரியவில்லை. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நல்லவர்கள் மட்டுமல்ல, நயவஞ்சகம் கொண்டவர்கள்கூட இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு சிறப்பு மிகுந்த திட்டமாகத்தான் இருக்கின்றது.

இந்தத் திட்டத்தின் மூலமாக கிராமத்திலே ஏற்கெனவே இருக்கின்ற வேளாண்மைப் பயிர் நீங்கலாக புதியதாக ஜாட்ரோஃபா மற்றும் பாரடைஸ் போன்ற மரங்களை உற்பத்தி செய்வதன் மூலமாக அதிலேயிருந்து எடுக்கின்ற 'எத்தனால்' மூலமாக புதிய எரிபொருள் தயாரிக்க முடியும். காட்டாமணக்குச்செடி மற்றும் புதிய நவீன ரக நெல்லிக்காய், வேப்பமரம் போன்ற நவீன விவசாயப் பயிர்களைப் பயிரிடுகின்றபோது, அந்தப் பகுதியிலே விவசாயிகள் இலாபம் அடைவார்கள் என்கின்ற அளவிற்கு இன்றைக்கு 1 இலட்சம் விவசாயிகளுக்கு புதிய வணிகப் பயிர் உற்பத்திக்குப் பயிற்சி அளிப்பதற்கு இந்த அரசு திட்டம் மேற்கொண்டிருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரிய செயலாகும். இதைத்தான் கடந்த காலத்திலே வள்ளுவப் பெருந்தகையனார் கூறினார்கள்

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*

என்று. அந்தத் திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப புரட்சித் தலைவியினுடைய இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபோது இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெரிய, பெரிய தொழில் அதிபர்கள் எல்லாம் வேளாண்மை சார்ந்த தொழில் செய்கிற விவசாயிகளின் பின்னால் செல்லக்கூடிய ஒரு காலம் இருக்கிறது என்பதற்கு ஏற்ப இந்தத் திட்டம் அமைந்திருக்கிறது என்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

*பிற்பகல் 12-35*

அதேபோல, கிராமத்திலே இன்னொரு பழமொழி சொல்வார்கள். அகலத்திலே உழுவதைவிட ஆழத்திலே உழுவது மேல் என்று கூறுவார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால், ஒரு விவசாயி உழுகின்றபோது அந்த நிலத்தை மூன்று அடி அளவிற்கு உழுதால்தான் அந்த நிலத்திலே easy-ஆன மண்நிலை ஏற்பட்டு, காற்றோட்டம் நடைபெறுகின்றபோது அந்த நிலத்திலே உற்பத்தி செய்கின்ற விளைபொருள் நன்றாக விளையும் என்று கூறுவார்கள்.

அதைப்போலவே, புரட்சித் தலைவி அவர்களுடைய பட்ஜெட், அகலத்திலே உழாமல் ஆழமாக உழப்பட்டு இருக்கிறது. கடந்த கால ஆட்சிபோல கவர்ச்சியான அளவிலே பெயர் அளவிற்கு திட்டங்களை மட்டும் அறிவிக்காமல், பயனுள்ள விதத்திலே ஆழமான நிதிநிலை அறிக்கையாக இருப்பதை இந்த நாடு போற்றிக்கொண்டிருக்கிறது.

அடுத்து, அவினாசி-அத்திக்கடவுத் திட்டம். 'சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்ற அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த தேர்தலின்போது கோவை மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, அவினாசி-அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்றித் தருவேன் என்று கூறினார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் 270 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் மூலமாக படிப்படியாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்றபோது, இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்ற கோவை பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த 50 இலட்சம் மக்களுக்காக ஆண்டு ஒன்றிற்கு இந்த அரசு குடிநீருக்காக 50 கோடி ரூபாய் செலவழித்துக்கொண்டிருக்கிறது. புதிய ஆழ்குழாய்க் கிணறுகள், அந்த ஆழ்குழாய்க் கிணறுகளிலே பொருத்துவதற்கு மின் மோட்டார்கள், கம்ப்ரசர்கள் என்று ஆண்டு ஒன்றிற்கு 50 கோடி ரூபாய் குடிநீருக்காக செலவழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம்



நிறைவேறுகின்றபோது இந்த 50 கோடி ரூபாயில் ஆண்டு ஒன்றிற்கு 30 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு நிதி சேமிப்பு ஆகும் என்று நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதைப்போல, இந்தத் திட்டத்தில் விடுபட்டிருக்கின்ற சில பகுதிகளையும் இணைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னையிலே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்காக கழிவு நீரை சுத்திகரிப்பது, சவ்வூடு பரவல் முறையிலான சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே புரட்சித் தலைவி அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய திட்டம். இன்றைக்கு இந்தக் கழிவு நீரால் சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியாத நிலைமை ஏற்படுகின்றபோது, அந்தக் கழிவு நீரையே சுத்திகரித்து அந்தத் தொழிற்சாலைகளுக்கு திருப்பிச் செலுத்துகின்றபோது, அந்தக் கழிவு நீர் சாக்கடையிலே கலக்காது. இதனால் சுற்றுப்புறச் சூழலும் பாதுகாக்கப்படுகின்றது. தண்ணீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படுகின்றது. எங்களது திருப்பூர் நகரம் பின்னலாடைத் தொழிலுக்குப் பெயர்பெற்ற நகரம். அந்த பின்னலாடைத் தொழிலுக்கு உப தொழிலாக இருக்கக்கூடிய dying தொழிலிலே வெளியேறுகின்ற கழிவு நீரை இந்த முறையில் சுத்தப்படுத்த வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் அதிபர்களோடு நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படிப் பேசுகின்றபோது, இந்தப் புதிய சவ்வூடு பரவல் முறையிலான சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு பல கோடி ரூபாய் செலவு ஆகும். இந்தத் திட்டத்தை அமைப்பதற்கு எங்களுக்கு நீங்கள் பக்கபலமாக இருக்கவேண்டுமென்று கேட்டபோது—நான் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே வேண்டுகோள் விடுத்து—திருப்பூரில் இருக்கக்கூடிய ஒரு dyeing தொழில் அதிபர் எம். பழனிசாமி என்பவர் மூலமாக முதல் முறையாக தனிப்பட்ட முறையில் இந்த சவ்வூடு பரவல் முறையிலான சுத்திகரிப்பு நிலையத்தை இன்றைக்கு திருப்பூரிலே தோற்றுவிப்பதற்கான நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி நடைபெற்று, அது வெற்றி பெறுகின்றபோது, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களிலும் இந்த முறை பின்பற்றப்படும். எனவே, முன்மாதிரியாக தனியாரால் அங்கு உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலைகளுக்கு நமது அரசு கொஞ்சம் மானியம் கொடுத்து அதனை ஊக்கப்படுத்திட வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அங்கிருந்து கழிவுப் பொருளாக வெளியேறுகின்ற அந்த sludge-களை மூலப் பொருளாக வைத்து உபபொருள் தயாரிப்பதற்கு, அதனைப்

பயன்படுத்த ஆராய வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

அதேபோல, பின்னலாடைத் தொழில் மூலம் ஆண்டு ஒன்றுக்கு *5,000* கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது திருப்பூர் நகரம். ஆனால், அந்தத் தொழிலின் மூலமாக மத்திய அரசுக்கு மட்டுமே வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி திருப்பூர் பின்னலாடைத் தொழில் நிர்வாகம் மூலமர்க பெறுகின்ற அந்த வருமானத்தில் இரண்டு சதவிகிதத்தை திருப்பூர் நகரத்தினுடைய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, ஆற்றங்கரையிலிருந்து *5* கிலோ மீட்டருக்கு அப்பால் dyeing factory அமைய வேண்டும் என்று — மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தொகுதியான திருமங்கலம் தொகுதி, அம்மா தொகுதியான ஆண்டிப்பட்டி, சேடப்பட்டி மற்றும் பெரியகுளம் போன்ற தொகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் திருப்பூர் தொகுதியில் இருப்பதால், அவர்கள் சார்பாகவும் பேசுவதற்கு இரண்டு நிமிடத்தை நீட்டித்து கூடுதலாகக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆற்றங்கரையையொட்டி *5* கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்க வேண்டும் என்று ஒரு புதிய G.O.; ஒரு கிலோ மீட்டருக்கு தள்ளி இருக்க வேண்டும் என்று ஒரு புதிய G.O.; கடந்த காலத்தில் வந்திருக்கிறது. அந்த G.O.-க்களை மறுபரிசீலனை செய்து *2000* ஆண்டுக்கு முன்பு அனுமதி பெற்றுத் தொடங்கப்பட்டிருக்கிற அந்த dyeing தொழில்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டி விடுகிறார்கள். இன்றைக்கு போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை அம்மா அவர்கள் *227* கோடி ரூபாய் ஒதுக்கி *2275* புதிய பஸ்களை விட்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில்கூட பெருந்துறையிலே ஒரு மெடிக்கல் காலேஜ், சித்தோட்டிலே ஒரு இன்ஜினியரிங் காலேஜ், பர்கூர், குரோம்பேட், திருநெல்வேலியில் எல்லாம் பாலிடெக்னிக் போன்றவற்றைத் தொடங்கி, போக்குவரத்துத் துறைக்கே ஒரு பெயர்பெற்ற துறையாக



புரட்சித் தலைவி அவர்களின் அரசு நடந்து இருக்கின்றது. இன்றைக்கு ஏதோ ஒருசில வழித் தடங்களை, போக்குவரத்துத் துறையிலே நட்டத்தில் இயங்கி வரும் ஒருசில வழித் தடங்களை, தனியாருக்குக் கொடுக்கலாம் என்று சொன்னதற்காக சிலர் கூப்பாடு போடுகிறார்கள். இதை நான் ஏன் சொல்ல வருகிறேன் என்றால், குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் இங்கே ஆட்டுகிறார்கள் என்று சொன்னால் அது மிகையல்ல. *1962*-லே தஞ்சாவூர் தேர்தலிலே தேர்தல் களத்திலே வேட்பாளராக முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் போட்டியிட்டார்கள். அவரை எதிர்த்து திரு. பரிசுத்த நாடார் போட்டியிட்டபோது அவருக்கு ஆதரவாக சக்தி விலாஸ் பஸ் கம்பெனியைச் சார்ந்தவர்கள் தேர்தல் பணியாற்றினார்கள் என்ற காரணத்திற்காக *1967*ஆம் ஆண்டு போக்குவரத்துத் துறையின் அமைச்சராக வந்த முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களால் பஸ்கள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் பழிவாங்கும் நோக்கத்தோடு வந்தது. அப்படி பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்று அவர் விரும்பி அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, அனைத்து பஸ்களையும் தேசியமயமாக்கி இருக்கலாமே? அன்றைக்கு தப்பிய எத்தனை வண்டிகள் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஓடிக்கொண்டிருக்கின்றன? அதனுடைய மர்மம் யாருக்கும் தெரியாதா? ஒரு பக்கம் தேசியமயம் என்கிறார்கள் இன்னொரு பக்கம் தனியார்மயம் என்று சொல்கிறார்கள். கடந்த காலத்தில் *4000* மினி பஸ்களுக்கு Permit கொடுக்கப்பட்டது. அது தனியார்மயம் இல்லையா? அது தேசிய மயமா? *4000* மினி பஸ்களை விட்டார்கள். எந்த அடிப்படையில் விட்டார்கள்? இந்தந்த ரூட்டுக்கு வண்டி வேண்டும். இதில் யார் யார் ஓட்டுகிறீர்கள் என்று கேட்டு விட்டார்களா? இல்லையே! அப்ளிகேஷன் கொடுத்தால் சரி. வேண்டும் என்கிற ரூட்டுக்கு ஆட்டமேட்டிக்காக சாங்ஷன். இதனால் என்ன ஆகியது? அரசு போக்குவரத்துதான் பாதிக்கப்பட்டது.

அதேபோல, *1998* ஆம் ஆண்டு நடந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் பேசுகின்றபோது, உதிரி பாகங்கள் வாங்கும்போது, கமிஷன் வாங்குவதைக் குறைத்ததன் விளைவாகவும், Body Building- ஏற்பட்ட கமிஷனை வாங்கியதைக் குறைத்ததன் விளைவாகவும் மூலதனச் செலவைக் குறைத்திருக்கிறோம் என்று பேசியுள்ளார். இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "கமிஷன் வாங்கியதைக்

குறைத்ததன் மூலம்" என்றால் இவர் கமிஷனில் ஒரு பங்கைக் குறைத்து வாங்கியுள்ளார் என்பது அவரது ஒப்புதல் வாக்குமூலமாகவே உள்ளது. போக்குவரத்துத் துறையில் கடந்த கால ஆட்சியில் ஊழல் நடைபெற்றுள்ளது என்பதற்கு இதுவே சாட்சி. மேலும் அவர் பேசுகையில், எந்தப் பொருளின் விலை ஏறிக்கொண்டிருந்தாலும், Body கட்டுவதிலே, கூடு கட்டுவதிலே இந்த இரண்டு ஆண்டுகளில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2 மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.*

**திரு. சி. சிவசாமி:** இந்த இரண்டாண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களில் ஒரு பேருந்துக்கு ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்குக் குறைகிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம் என்று பேசியுள்ளார். ஆனால், தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையின்படி, டயர் கொள்முதல், டீசல் கொள்முதல், ஸ்பேர்ஸ் கொள்முதல், Body கட்டுவது போன்ற வகையிலே கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். கமிஷன் வாங்குவதைக் குறைத்ததால் மூலதனச் செலவு குறைந்தது என்பது மாண்புமிகு உறுப்பினருடைய வாதம். ஆனால், தணிக்கைத் துறைத் தலைவர் போக்குவரத்துத் துறையில் கூடுதல் செலவு என்கிறார். எனவே, கூடுதல் செலவு என்றால், கமிஷன் வாங்கியதாகப் பொருள். இதை நான் கூறவில்லை—மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சருடைய பேச்சு. அப்படியானால் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் கமிஷன் வாங்கியது மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களா அல்லது அவர்களுக்கு உரியவர்களா என்பதை இந்த அவைக்கு நினைவூட்ட விரும்புகிறேன். *1999* ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய நிர்வாக ரீதியாக, போக்குவரத்துத் துறையில் பயன்படுத்தப்பட வேண்டிய டயர்கள் *1,78,376*. பயன்படுத்திய டயர்கள் *2,07,219*. அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்திய டயர்கள் *28,843*. இதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு *19.62* கோடி ரூபாய். இதற்குக் காரணம், தரக் குறைவான டயர்கள் வாங்கியதுதான் என்று கூறப்படுகிறது. இதைப்போல, டயர்களைப் புதுப்பித்தல், தரம் தாழ்ந்த ரப்பர் மற்றும் இதரப்பொருள்களை வாங்கியதால் அரசுக்குக் கூடுதல் செலவு *4.88* கோடி ரூபாய். எந்த இலாபத்திற்காக இப்படிப்பட்ட தரம் குறைந்த டயர்களும், ரப்பர்களும் வாங்கப்பட்டன என்பதை அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல .... *(குறுக்கீடு)*



**டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.........*

**திரு. சி. சிவசாமி:** I am not yielding. (Interruption) I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேச்சை முடித்து விடட்டும்; பிறகு பேசுங்கள்.*

**திரு. சி. சிவசாமி:** நான் பேசும்போது குறுக்கிட வேண்டாம். நேரம் ஆகிவிட்ட காரணத்தினால், ஒரேயொரு கருத்தை மட்டும் கூறி அமரலாம் என்று நீங்கள் time கேட்டு வாங்கிப் பேசுங்கள். நான் நினைக்கிறேன்.

திருப்பூர் தொகுதியில் இருக்கக்கூடிய அனுப்பர்பாளையம், இடுவம்பாளையம் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய அரசுப் பள்ளிகளில் இடவசதி போதாத காரணத்தினால், அந்தப் பகுதியின் அருகிலுள்ள அறநிலையத் துறையைச் சார்ந்த இடங்களைப் பொதுமக்கள் அதற்குரிய தொகையைச் செலுத்தி, அந்தப் பள்ளிக்கூடத்திற்கான இடத்தைப் பெறுவதற்காகத் தயாராக இருக்கிறார்கள். அதற்காக முறையான விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசீலித்து அறநிலையத் துறையைச் சார்ந்த இடங்களைப் பள்ளிக்கூடங்களுக்கு எடுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காதித் துறை மூலமாக அங்கே ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியும், சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க மாவட்டத்திலே இருக்கக்கூடிய எஸ்.பி. ஆபீஸை திருப்பூர் நகருக்கும், தமிழகத்திலே மிகப் பெரிய நகராட்சியாக இருக்கக்கூடிய திருப்பூர் நகராட்சியைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அங்கே இருக்கக்கூடிய அந்த நகராட்சி ஆணையரை ஐ.ஏ.எஸ். அந்தஸ்திலே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இனிய நிதிநிலை அறிக்கைமீது, நாடு போற்றுகின்ற, நல்ல உள்ளம் கொண்டவர்கள் போற்றுகின்ற அருமையான இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களது கழகக் காவல் தெய்வம், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த காலங்களிலே, போக்குவரத்துக் கழகங்களிலே, உதிரி பாகங்கள்

வாங்குகிறபோது, Central Purchase Committee என்ற ஒரு கமிட்டி உருவாக்கப்பட்டு அதன் மூலமாக டெண்டர் விடப்பட்டுத்தான் பொருள்கள் எல்லாம் வாங்கப்பட்டிருக்கின்றன. அதிலே தவறு இருக்குமானால், யார் மீது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுப்பதற்கு நானும் உங்களோடு ஒத்துழைப்புக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். நான் தவறு செய்திருந்தால், சுட்டிக்காட்டினால் நிச்சயமாக அதற்குரிய தண்டனையை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன். ஏனென்றால், கடந்த காலங்களிலே, எந்தப் பொருளையும் வாங்க வேண்டுமென்று சொல்லி, அமைச்சரவையில் இருந்தோ, மற்றவர்களிடமிருந்தோ எந்தப்பரிந்துரையும் சென்றது கிடையாது. Central Purchase Committee என்ற ஒன்று நியமிக்கப்பட்டு, அவர்களின் மூலமாக டெண்டர் பெறப்பட்டுத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றொன்று, மாண்புமிகு நிதியமைச்சர் அடிக்கடி சொல்வார்கள். 75 ஆணையைப் பயன்படுத்துவதன் மூலமாக, தமிழகத்திலே இருக்கிற சிறுதொழில்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றுகூட சொல்லிக் கொண்டிருந்தார். நேற்றைக்கு நிதியமைச்சர் அவர்கள், சிமெண்டைப் பற்றிப் பேசுகிறபோது, மற்ற மாநிலங்களிலே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொன்னதற்கு விளக்கம் சொல்லிவிட்டீர்கள். அதோடு விடுங்கள். திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையையொட்டி நடைபெறுகிற இந்த விவாதத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், என்னுடைய கருத்துகளை நான் முன்வைக்க விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அதேநேரத்தில், கூடுதலான கடுமை, மக்கள்மீது திணிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆகஸ்ட் மாதம் 135 கோடி ரூபாய்க்கான உயர்வு, நவம்பர் மாதம் 3300 கோடி ரூபாய்க்கான உயர்வு. இப்போதைய பட்ஜெட்டில் 690 கோடி ரூபாய்க்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரி விதிப்பிற்குப் பின்னரும், இறுதிப் பற்றாக்குறை 640 கோடி ரூபாய் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேற்றையதினம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே குறுக்கிட்டுப் பேசுகிறபோது, 3,000 கோடி, 4,000 கோடி என்று மொத்தமாகச் சொல்வதில் அரசுக்குக் கிடைப்பது எவ்வளவு என்ற விளக்கத்தைச் சொல்லி, மின்சாரத் துறைக்கும், அதைப்போல



போக்குவரத்துத் துறைக்கும் ஒரு பெரும்பகுதி போகிறது என்றும் சொன்னார்கள். எதுவாக இருந்தாலும், தமிழ்நாட்டு மக்கள் இந்த மொத்த வரி விதிப்புகளினால் தாக்கப்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. ஏழை, நடுத்தர மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். மத்திய அரசு, கடைப்பிடித்து வருகிற தாராளமய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்துகிற வகையிலே இந்த பட்ஜெட்டும் அமைந்துள்ளது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு சமீபத்தில் உயர்த்தியுள்ள ரெயில்வே கட்டண உயர்வுகள், நேற்றைய தினத்திலிருந்து அமல் நடத்தத் தொடங்கியாகிவிட்டது. சமையல் gas, டீசல், பெட்ரோல், இரயில் கட்டண உயர்வால் பெரும் பாதிப்புக்கு மக்கள் ஆளாகி உள்ளனர். ஏற்கெனவே மத்திய அரசாங்கத்தினுடைய வரி விதிப்போடு, நம்முடைய மாநில அரசின் பட்ஜெட்டும் தன் பங்கிற்கு உயர்த்தியுள்ள வரிச் சுமையால் மேலும் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். மொத்தத்தில் மத்திய, மாநில அரசுகளின் வரி விதிப்புக் கொள்கை மக்களின்மீது அறிவிக்கப்படாத பொருளாதார யுத்தத்தைத் தொடுப்பதாக அமைந்திருப்பதாக நாங்கள் பார்க்கிறோம்.

பிற்பகல் 12-50

ஏற்கெனவே, பஸ் கட்டணம், மின் கட்டணம், பால் விலை போன்றவற்றை உயர்த்தியுள்ள மாநில அரசு, தற்போதைய பட்ஜெட்டில் அரிசி, கோதுமை, பருப்பு, வெல்லம், மிளகு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு வரியை உயர்த்தியதோடு, சாம்பிராணியைக்கூட விட்டுவைக்கவில்லை. அலுமினியம், சலவைக் கற்கள், செராமிக் ஓடு, கோதுமைப் பொருட்கள், இரும்பு, புகையிலை உட்பட 15 பொருட்கள் மீது நுழைவு வரி விதிக்கப்பட்டுள்ளது. இவற்றினால் எல்லாம் ஏற்படப்போகும் பாதிப்புகளை மக்கள் நிச்சயம் எப்படி சகிப்பார்கள் என்பதை மாநில அரசு சிந்திக்கவேண்டும். முன்பெல்லாம் உப்பு முதல் கற்பூரம் வரை விலை உயர்ந்ததாக நாமெல்லாம் பேசுவோம். அதனுடைய பரிணாம வளர்ச்சி இப்போது சர்க்கரை முதல் சாம்பிராணி வரை என்று நீடித்து இருக்கிறது. ஒரு வகையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கூர்மையான பார்வையிலே இருந்து பப்பர்மிட்டாயும் பலூனும் தப்பி இருப்பது பாராட்டுக்குரியது. இவற்றிற்கெல்லாம் மாநிலத்திலே நிலவுகிற கடுமையான நிதி நெருக்கடிதான் காரணம் என்று கூறப்படுகிறது. உண்மைதான். மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டிய நிதிப்

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 ஏப்ரல் 2

பகிர்வுகளில் தொடர்ந்து இழைத்து வருகிற அநீதி குறித்து நிதிநிலை அறிக்கை சரியாகவே சுட்டிக்காட்டியிருக்கிறது. கூட்டாட்சி அமைப்பில், பல்லாண்டு கால செயல்பாடுபற்றி மாநிலங்களவையிலே அறிஞர் அண்ணா அவர்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னால் பேசியிருப்பது இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த நிலைதான் இப்போதும் நீடிக்கிறது என்றால், கூட்டாட்சித் தத்துவத்தின் உயரிய கோட்பாடுகளை மத்திய அரசு கொஞ்சம் கொஞ்சமாக தகர்த்து வருகிறது என்றுதானே அர்த்தம்? இந்த நெருக்கடியிலேயிருந்து மாநிலங்கள் மீளுகிற வண்ணம் முழு அளவிலான ஒரு கட்ட உதவித் திட்டம் - One time package - ஒன்றை மாநிலங்கள் அனைத்திற்கும் வகுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களைக் கேட்டுக்கொண்டதோடு மட்டுமல்லாமல் 3,000 கோடி ரூபாய் நிதி தேவை என்று ஒரு கடிதத்தை அனுப்பி, அதை அனைத்து மாநில முதல்வர்களுக்கும் அனுப்பி ஆதரவு கேட்டு இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இந்தப் பிரச்சினை குறித்தும் பதினோராம் நிதிக் குழு இழைத்து இருக்கக்கூடிய அநீதி காரணமாக தமிழகத்திற்கு 2000-2005 ஆம் ஆண்டு காலத்திற்குள் 2,946 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது குறித்தும், இந்த பாதிப்பு பதினோராம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு செயல்படுத்தியதால், 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய வரிகளில் தமிழகத்தினுடைய நிதிப் பகிர்விலே 512 கோடி ரூபாய் அளவுக்குக் குறைத்துள்ள மத்திய அரசாங்கத்தின் நிலை குறித்தும், மத்திய கூட்டணி அரசில் பங்கு பெற்று வருகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். நாட்டின் பாதுகாப்புத் தேவைகளுக்காக மத்திய வரிகள் அனைத்தின்மீதும் 5 சதவிகிதம் மேல் வரி விதிப்பது என்ற மத்திய அரசின் முடிவை மாநில அரசு வன்மையாகக் கண்டிப்பதாக நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

தேசிய பாதுகாப்பு மத்திய அரசின் ஒரு முக்கிய பொறுப்பு என்பதனால், அதற்கான செலவினத்தை மத்திய அரசு தனது வருவாய் இனத்தில் இருந்துதான் மேற்கொள்ள வேண்டும். இந்த மேல் வரி அடுத்த நிதி ஆண்டில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ள அதிலும் குறைந்த அளவேயான நிதி ஆதாரங்களைப் பாதிக்கும் என்பதால், இதனைச் செயல்படுத்துவதை மத்திய நிதியமைச்சர் கைவிடுவார் என்று நாங்கள் நம்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த நல்லெண்ண நம்பிக்கை மட்டும் போதாது என்று



2002 ஏப்ரல் 2] [திரு. கே.சி. கருணாகரன்]

நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல், நம்புகிறோம் என்பதைவிட, மத்திய அரசு அதைச் செயல்படுத்துவதை நிறுத்திட வேண்டுமென்று இந்த மாமன்றம் மத்திய அரசை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை ஒருமனதாய் நிறைவேற்ற வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்ள விரும்புகிறது. தமிழ்நாட்டு மக்களின் நிலையைக் கருதி, இப்போது ஏற்பட்டிருக்கிற நிதி நெருக்கடி என்பது ஒட்டுமொத்த தமிழக மக்களைத் தாக்குகிறபோது, உண்மையிலேயே 6 கோடி தமிழ் மக்களின் நலனைக் கருதி, இதுபோன்ற நிதியினைப் பெறுவதில் தமிழகத்திலுள்ள எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சியும், மத்திய ஆளும் கட்சியிலே இருக்கக்கூடியவர்களும் இணைந்து நின்று செயல்பட வேண்டியுள்ளது. அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் இவ்வாறு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு தருவார்களா என்பதையும், அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

தமிழக அரசினுடைய தற்போதைய வரி விதிப்புகளை வரிக்கு வரி திராவிட முன்னேற்றக் கழகம் விமர்சிக்கிறது. ஒரு பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையில் அந்தக் கட்சிக்கு இருக்கும் உரிமையை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை. அதேநேரத்தில் மத்திய அரசாங்கத்தினுடைய பெட்ரோல், டீசல், சமையல் gas, இரயில் கட்டண உயர்வு போன்றவற்றாலும் தமிழக மக்கள் பாதிப்படைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த விலை உயர்வு பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? பாட்டாளி மக்கள் கட்சியின் நிலை என்ன? மாநில அரசிடம் உரிமைக்குக் குரல் கொடுக்கிறார்கள். மத்திய அரசிடம் உறவுக்குக் கை கொடுக்கிறார்கள். ஆக, உரிமை, உறவு, நட்பு போன்றவற்றையெல்லாம் இப்போது புதிதாக ஆராய வேண்டிய நிலையில் தமிழக அரசு படாதபாடு பட்டுக்கொண்டிருக்கிறது. மாநில அரசுகள் எந்த அரசால் பாதிக்கப்பட்டாலும் ஒருசேர குரல் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதேநேரத்தில் இந்த அறிக்கையில் இருக்கிற சில பலகீனங்களைச் சுட்டிக்காட்டுவது ஒரு அரசியல் கட்சி என்ற நிலையில், உழைப்பாளி மக்களின் நியாயங்களுக்காக போராடுகிற

கட்சி என்ற நிலையில் ஒரு கூடுதல் பொறுப்பு இருக்கிறது என்ற காரணத்தாலே சில குறைகளை விமர்சிக்க நாங்கள் விரும்புகிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையில் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் இல்லை. வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எந்த வழிகாட்டுதலும் இல்லை. மாறாக இருக்கும் வேலைகளை படிப்படியாகக் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இலாபம் தரும் பொதுத் துறையின் பங்குகளை தனியாருக்கு விற்பது, நஷ்டம் ஏற்படும் பொதுத் துறைகளை மூடி விடுவது, இலாபம் தரக்கூடிய பங்குகளை தனியாருக்கு விற்பது, நஷ்டம் ஏற்படுவதை மூடி விடுவது போன்ற இந்தக் கொள்கைகள் அமலானால் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே, இந்தக் கொள்கை அமல் நடத்தப்பட்டால் எந்த நிறுவனங்களும் முன்னேற்றம் காண முடியாது. மருந்து வியாதியை குணப்படுத்துவதாக இருக்க வேண்டுமே தவிர நோயாளியைக் கொன்றுவிடுவதாக இருந்துவிடக்கூடாது. அந்தவகையில் மூடப்பட்டுள்ள ஆலைகளைத் திறப்பதற்கான எந்தவொரு வழியுமே குறிப்பிடப்படவில்லை. இதைச் சொல்கிறபோது நான் மிகுந்த வேதனையோடு நினைவுபடுத்த விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள ஆலைகள் சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முழு கவனத்தையும் அல்லது சிறப்புக் கவனத்தையும் அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்வேன். ஏனென்றால், இராதாகிருஷ்ணா மில்ஸ், பீளமேடு; ஜெயலட்சுமி மில்ஸ், சிங்காநல்லூர்; வசந்தா மில்ஸ், சிங்காநல்லூர்; மது ஸ்பின்னிங் மில்ஸ், சிங்காநல்லூர்; ஸ்ரீஜனார்த்தனா மில்ஸ், உப்பிலிபாளையம், சிங்காநல்லூர்; இராஜலட்சுமி மில்ஸ், சிங்காநல்லூர்; சிவானந்தா மில்ஸ், சிங்காநல்லூர்; ஸ்ரீஹரி மில்ஸ், ஒண்டிபுதூர், சிங்காநல்லூர், கோவை; கே.ஜி. ஸ்பின்னர்ஸ், ஒண்டிபுதூர், கோவை ஆகியவை ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் மாத்திரம் 10 பஞ்சாலைகள் பூட்டப்பட்டிருக்கின்றன.

இது தவிர, கமல் ஸ்பின்னர்ஸ், குரல்குட்டை, உடுமலைப்பேட்டை; பாலமுருகன் ஸ்பின்னர்ஸ், உடுமலைப்பேட்டை; பாலமுருகன் டெக்ஸ்டைல்ஸ், உடுமலைப்பேட்டை; ஸ்ரீராஜ்கொண்டல் டெக்ஸ்டைல்ஸ், ஆர்.எஸ்.புரம்; கோவை (மேற்கு), ஸ்ரீசக்தி ஸ்பின்னர்ஸ், உடுமலைப்பேட்டை; கொம்மினார் டெக்ஸ்டைல்ஸ், உடுமலைப்பேட்டை; ஸ்ரீமீனாட்சி பிளாஸ்டிக்ஸ், கோவை; ஸ்ரீஇராமலிங்க சூடாம்பிகை மில்ஸ், திருப்பூர்; தனலட்சுமி மில்ஸ், திருப்பூர்; ஸ்ரீ ராஜலட்சுமி மில்ஸ், காரமடை; ஸ்ரீ அம்பாள் மில்ஸ், சோமனூர் ஆகிய பஞ்சாலைகள் பூட்டப்பட்டு இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது)



இதனுடைய விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பாருங்கள். இந்த ஆலைகளைத் திறக்காமல், நூற்றுக்கணக்கான இன்ஜினியரிங் தொழிற்சாலைகளைத் திறக்காமல், அதிலே வேலையிழந்து வீதியிலே இருக்கிற பல்லாயிரக்கணக்கான உழைப்பாளி மக்களைப் பாதுகாக்காமல், தொழில் துறையைப் பாதுகாக்காமல் தமிழகம் இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆகும் என்பதை நீங்கள் எவ்வாறு நம்புகிறீர்கள்? எப்படி ஆக்க முடியும்? இன்ஜினியரிங் கம்பெனிகளைப் பொறுத்தளவில் எவரெஸ்ட் இன்ஜினியரிங் கம்பெனி, நியூசிட்டி இன்ஜினியரிங் கம்பெனி, கெம்ப்ஸ் இந்தியா லிமிடெட், ஸ்ரீராமகிருஷ்ணா மில்ஸ் இண்டஸ்ட்ரீஸ், ஸ்ரீலட்சுமி காயத்ரி இன்ஜினியரிங், மெட்ராஸ் போர்ஜிங்க்ஸ் இண்டஸ்ட்ரிஸ், துல்யா அலாய் காஸ்டிங்க்ஸ் ஓர்க்ஸ், டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் உள்ளிட்டவை. விஸ்கோஸ் இப்போது மூடுவதற்கு தயாராகிக்கொண்டிருக்கிறது. நம்முடைய அரசு நிர்வாகம் உறுதிபூர்வமான நடவடிக்கை எடுத்திருந்தால் அதைத் தடுத்து இருக்கமுடியும் என்பதெல்லாம் இருக்கிறது. ஆக, பாதிக்கப்பட்டு வேலையிழந்திருக்கிற பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மத்தியில் எங்களைப் போன்றவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்மவியூகத்தில் சிக்கிக்கொண்ட அபிமன்யூவைப் போல தத்தளித்துக் கொண்டிருக்கிறோம்; மீள முடியவில்லை. தயவுசெய்து மாநில அரசு வழிகாட்ட வேண்டும். இதற்கான தீர்மானத்தைக் கொண்டுவந்தோ அல்லது ஏதாவது வழியில் இதைத் திறப்பதற்கு, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பதில் பேசுகிறபோது மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய கவனம் செலுத்தி நியாயம் வழங்குவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அடுத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிற அதே நேரத்தில் 8 சதவிகிதம் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ஏமாற்றம் அளிக்கிறது. இரண்டாவது, நிதி ஆணைக்குழு செய்துள்ள பரிந்துரையை இந்தச் சபையிலே வைத்து விவாதிப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கல்வி சம்பந்தமான பிரச்சினையில் இப்போது

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 ஏப்ரல் 2

சொல்லப்பட்டிருக்கிற கொள்கை அமல் நடத்தப்பட்டால், 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற அரசியல் சட்டக் கோட்பாடு கேள்விக்குரியதாக ஆக்கப்படுகிற அபாயம் இருக்கிறது. ஆகவே, கட்டண விகிதத்தை இரத்து செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன். இன்றைய தினமணி பத்திரிகையில் சிமெண்ட் விலை சம்பந்தமாக நம்முடைய அரசாணை குறித்து ஒரு செய்தி வந்திருக்கிறது. அரசு சிமெண்ட் நிறுவனத்திற்கு அரசு ஆணையால் 36 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது என்ற தலைப்பில் வந்திருக்கக் கூடியதில் அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்கான சிமெண்ட்டை தனது நிறுவனம் மூலம் அரசு கொள்முதல் செய்து காண்ட்ராக்டர்களுக்கு அளிக்கும் முறையை இரத்து செய்ததால் அரசு சிமெண்ட் டான்செம் நிறுவனத்திற்கு 36 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இரண்டு அம்சங்களைக் கொண்ட அந்த அரசாணையில் ஒன்றை இரத்து செய்துள்ளது, இப்போதைய நம்முடைய அரசு. டான்செம் நிறுவனத்திற்கு பெரம்பலூர் மாவட்டம், அரியலூர், விருதுநகர் மாவட்டம், ஆலங்குளம் ஆகிய இடங்களில் சிமெண்ட் ஆலைகள் உள்ளன. 9½ லட்சம் டன் அதில் உற்பத்தி ஆகிறது. 2,500 பேர் வேலை செய்கிறார்கள். இந்த விவரங்கள் எல்லாம் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த அரசாணையின் விவரத்தில் 1. காண்ட்ராக்டர் அல்லாத அரசுத் துறைகள் டெண்டர் முறை மூலம் சிமெண்டைக் கொள்முதல் செய்வது, 2. காண்ட்ராக்டர் உள்ள அரசுத் துறை Turn-key முறையில் அரசுக் கட்டடங்கள் கட்டத் தேவைப்படும் சிமெண்ட்டை வெளிச் சந்தையில் வாங்குவது. காண்ட்ராக்டர்களே எந்த நிறுவன சிமெண்ட்டையும் கொள்முதல் செய்து கொள்வதுதான் Turn-key முறை. இதிலே முதலாவது முறை இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது முறை அமலாகிக் கொண்டிருக்கிறது. இதனுடைய விளைவாக இந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அதை இரத்து செய்தால் டான்செம் நிறுவனம் லாபத்துடன் இயங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகையினால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட அரசாணையின்படி காண்ட்ராக்டர்கள் வெளிச்சந்தையில் சிமெண்டை வாங்கிக்கொள்ளும் Turn-key முறைதான் இப்போதும் தொடர்கிறது. அரசாணையில் உள்ள இந்தப் பகுதியை இரத்து செய்தால் அரசுக் கட்டடங்கள் கட்டும்



2002 ஏப்ரல் 2] [திரு. கே.சி. கருணாகரன்]

காண்ட்ராக்ட்காரர்களுக்கு அரசே சிமெண்ட்டைக் கொள்முதல் செய்து தரும் கட்டாயம் ஏற்படும். நஷ்டத்திலிருந்து டான்செம் நிறுவனத்தைக் காப்பாற்ற சொல்லப்பட்டிருக்கிறது இந்த ஆலோசனை. அரசாணையின் ஒரு பகுதியை இரத்து செய்ய அரசு முன்வருமா என்பதையும் கேட்டு நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கைகளை இரண்டாக நான் பிரித்துப் பேச விரும்புகிறேன். 1991-96, 1996-2001. இந்த ஆண்டுகளிலே தமிழகம் இரண்டு முதலமைச்சர்களைச் சந்தித்திருக்கிறது. அப்படிச் சந்தித்தபோது தமிழகத்தினுடைய வளர்ச்சி தேசிய அளவிலே இந்திய நாட்டில் இருக்கின்ற மாநிலங்களினுடைய வளர்ச்சியோடு பார்க்கின்றபோது 1996 வரை ஏற்பட்டிருந்த வளர்ச்சி அதற்குப்பின் ஏன் ஏற்படவில்லை என்ற ஒரு கேள்வி இப்போது மக்கள் மத்தியிலே வந்துகொண்டு இருக்கிறது. அப்படி வருகின்றபோது 1998-லே அன்றைய முதலமைச்சரும், நிதியமைச்சரும் இணைந்து கொண்டு வந்த இந்த நிதிநிலை—பட்ஜெட்—அரசினுடைய வருவாயைக் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது வருவாயை மீறிய செலவினம் கூடுதலாக இருந்ததனுடைய விளைவு அரசு கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறது. 1998-லேயிருந்து தமிழகத்தினுடைய நிதி நிலை குறைந்ததற்குக் காரணம் தவறான நிர்வாகமா, அல்லது தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் ஏமாளிகள் என்ற எண்ணத்தோடு அவர்கள் கொண்டு வந்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. இதைச் சொல்வதற்குக் காரணம் காழ்ப்புணர்ச்சியல்ல. 5 ஆண்டுகள், 1996 வரையிலே தமிழகத்திலே பல்வேறு துறைகளிலே வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால்—பிரதான எதிர்க்கட்சிகூட argue பண்ணலாம் எங்கள் ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்தோம் என்று. ஹுண்டாய் கம்பெனி, ஃபோர்டு கம்பெனி போன்றவற்றிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் அதற்கான திட்டங்கள் தீட்டி, தமிழகத்திலே தொழில் வளத்தைப் பெருக்கினார்கள். இதே அவையில் நான் அன்றைக்குக் கேட்டேன்; அம்மா [illegible] சொன்னார்கள். ஹுண்டாய் கம்பெனி ஸ்ரீபெரும்[illegible] நான்



தமிழ்நாடு [illegible] சேப்பகம்
224485
சென்னை-600 008

[திரு. போளூர் வரதன்] [2002 ஏப்ரல் 2

போராடியபோது பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில் வேண்டுமானால் அதைத் திறந்து வைத்திருக்கலாம். 5 ஆண்டுக்காலத்திலே 1996-லேயிருந்து 2001 வரையில் இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகளை அவர்கள் தமிழகத்திலே ஏதாவது கொண்டு வந்திருக்கிறார்களா என்று சொன்னால், இல்லை. அப்படிக் கொண்டு வராமல் அவர்கள் சொல்கிறார்கள் இன்றைக்கு, நலத் திட்டப் பணிகளை நிறைவேற்றினோம் என்று. என்ன நலத் திட்டம்? தெரியவில்லை. வளர்ச்சிகள் என்ன? கடன் வாங்கினீர்கள். என்ன கடன்? மத்திய சர்க்கார் மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டிய royalty-ஐ முன்கூட்டியே திட்டமிட்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் வாங்கிவிட்டீர்கள். அப்படி முன்னாலே வாங்கினீர்கள், அதுமட்டுமல்லாமல், நபார்டு வங்கியிலே கொடுக்கின்ற கடனை மட்டும் வாங்கி திட்டங்களாக நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அந்தத் திட்டங்களினுடைய விளைவு, இன்றைக்குத் தமிழகம் நிதி நெருக்கடியிலே தள்ளப்பட்டு, தலைகுனிந்து நிற்கிறது. மத்தியிலே இன்றைக்கு கூட்டு என்று சொல்கிறார்கள், நட்பு என்று சொல்கிறார்கள், உறவு என்று சொல்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அளவுக்கு எனக்குத் தமிழ் தெரியாது. தமிழ் வல்லுநரும் நான் அல்ல. நட்பு, உறவு என்பதன் meaning புரியவில்லை எனக்கு. நீங்கள் சொன்னீர்கள் என்றால், தமிழ்நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். என் பாஷையிலே எனக்குத் தெரியவில்லை. தமிழிலே நட்பு, உறவு (குறுக்கீடு) நான் பட்ஜெட் பற்றித்தான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) இல்லை, நட்பு, உறவு—மத்திய சர்க்கார் பட்ஜெட் இங்கே வரவேண்டுமென்று கேட்கிறேன்.......

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், நட்பு என்றால் நட்புதான். உறவு என்றால் உறவுதான். *(சிரிப்பு)*

**திரு. போளூர் வரதன்:** அரசின் செலவினங்களைப் பார்க்கின்றபோது Department-wise-ஆகப் பார்க்கின்றபோது, அவர்கள் செலவிட்ட பணமும், அதற்காக அவர்கள் வாங்கியிருக்கிற கடன்களையும் பார்க்கின்றபோது, வட்டிகூடக் கட்ட முடியாத நிலையில்தான் அன்றைய ஆட்சி இருந்திருக்கிறது. நான் அண்ணா தி.மு.க. உறவில்தான் ஜெயித்தவன். புரட்சித் தலைவியின் தயவில்தான் ஜெயித்தவன். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸினுடைய எங்கள் அன்னை



2002 ஏப்ரல் 2] [திரு. போளூர் வரதன்]

சோனியா காந்தி கொடுத்த சீட்டில்தான் இந்த அவையிலே நின்று கொண்டிருக்கிறேன். உங்களை மாதிரி நட்பு என்று ஓடுவதும் நான் இல்லை. உறவு என்று சொல்லி கை நீட்டுவதும் நான் இல்லை. உண்மையைச் சொல்வேன். உண்மையை எங்கு வேண்டுமானாலும் பேசுவேன். இந்த அவைக்கு இரண்டு முறை வந்திருக்கிறேன். புரட்சித் தலைவியினுடைய தயவால் இரண்டு முறை வந்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் தலைவி அன்னை சோனியா காந்தி கொடுத்தது அந்த சீட். எங்கள் கட்சிக்கு நாங்கள் உறவாக இருக்கிறோம், நட்பாக இருக்கிறோம். என்றைக்கும் எங்களோடு நட்பு இருந்து கொண்டிருக்கிறது, உறவு இருந்து கொண்டிருக்கிறது. காரியத்திற்காக நாங்கள் ஓடவும் இல்லை. காரியத்திற்காக யார் காலையும் பிடிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

மத்திய அரசின் நிதித் தொகுப்பிலே இருந்து தமிழகத்திற்கு வருகின்ற பங்கு 512 கோடி ரூபாய் குறைக்கப்பட்டதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், யார் மேலே கோபப்படுகிறீர்கள் என்று தெரியாமல் இருக்கிறார்கள்.

**திரு. போளூர் வரதன்:** நட்பு, உறவு என்று சொன்னார்களே, அந்த நட்பு, உறவு பற்றி எனக்குப் புரியவில்லை. அதனால்தான் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது அது. நட்பு என்றால் நட்பு, உறவு என்றால் உறவு என்கிறபோது, இப்போது இவர்கள்தான் சொன்னார்கள், நாங்கள் எல்லாம் சம்பந்தி; சம்பந்தி வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள் போன மாதம். என்ன சம்பந்தி? தாட்கோவிலே தாழ்த்தப்பட்ட வர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நிதியை எடுத்து விளாவினார்கள் சமத்துவபுரம் என்று. என்ன நியாயம்? இதுதான் சம்பந்தி வேலையா? தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கின்ற நிதியை புரட்சித் தலைவியினுடைய அரசு என்றைக்காவது வேறு துறைக்கு ஒதுக்கி யிருக்கிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள், எல்லா சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் தாயுள்ளத்தோடு, தாயாக நடந்து கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்டவர்களுக்கு சம்பந்தி என்று சொல்லிவிட்டு, எங்கள் பணத்தை எடுத்துக்கொண்டுபோய், எங்கேயோ கொடுத்துவிட்டு, இதுதான் சமத்துவபுரம் என்று சொன்னால், நாங்கள் எல்லாம் என்ன ஏமாளிகளா? சம்பந்தி என்று வந்தால் ஓட்டுப் போட்டுவிடுவார்களா முடியாது. மக்களை ஏமாற்ற முடியாது. தெளிவாக இருக்கிறோம்.

பிற்பகல் 1-10

அதுமட்டுமல்ல. இன்னொன்றும் சொல்கிறார். என்ன சொல்லியிருக்கிறார், சைக்கிள். தாழ்த்தப்பட்ட இனத்திலே, மலைவாழ் பகுதியிலே இருக்கிற மக்கள் ஆயிரம் ரூபாய், 1,200 ரூபாய் கொடுத்து சைக்கிள் வாங்க வேண்டுமென்றால், பிறவியிலேயே முடியாத கதை. 100 ரூபாயை மொத்தமாகப் பார்க்க முடியாத சமுதாயம் கிராமப் புறத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறது. 15 ரூபாய் சில ஊர்களில் கூலி. சில ஊர்களில் 20 ரூபாய், 25 ரூபாய் அதற்கு மேல் இல்லை. அதை வாங்கி பிழைப்பு நடத்துகின்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தன்னுடைய குழந்தைகளுக்கு 1,500 ரூபாய்க்கு சைக்கிள் வாங்க வேண்டுமென்றால் முடியாது. அந்தப் பெற்றோர்களை மகிழ்விக்கின்ற விதத்திலே புரட்சித் தலைவி அவர்கள் சைக்கிள் வாங்கிக் கொடுத்தார்கள். பொறுத்துக்கொள்ள முடியவில்லை உங்களுக்கு. ஏனென்றால், எங்கள் வீட்டு துட்டை எடுத்துக்கொண்டு போய் இன்னோர் ஆளுக்கு நீர் விளாவின ஆள் நீங்கள். ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்துப் பெண் சைக்கிளில் போவதைப் பார்க்கக்கூட சகிக்காத நீங்கள் அதிலே ஊழல் என்று சொன்னீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன அதில் ஊழல்? சைக்கிள் எல்லா இடங்களிலும் விற்கிறது, போய் விசாரியுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) நான் சொல்ல வருகிறேன். எங்கள் தலைவர் சொன்னார், உங்கள் தலைவர் (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்ல வருகிறேன், நான் சொல்கிறேன். அந்த அறிக்கை எங்கே தயாரிக்கப் பட்டது? (குறுக்கீடுகள்) இல்லை நான் சொல்ல வருவது, (குறுக்கீடுகள்) நீங்கள் எதை வேண்டுமானாலும் கேளுங்கள். நான் சொல்லத் தயார். அந்த அறிக்கை எங்கே தயாரிக்கப்பட்டது என்பது உங்களுக்கும் தெரியும். இந்த நாட்டுக்கும் தெரியும். அறிக்கை, அறிக்கை என்று சொல்லி நீங்கள் ஆடுவது, (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. போளூர் வரதன்:** அறிக்கை, அறிக்கை என்று சொல்லி நீங்கள் ஆடுவது..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். அப்புறம் ஏதாவது கேட்க வேண்டுமென்றால் கேட்கலாம்.



**திரு. போளூர் வரதன்:** அறிக்கை விடுவது மட்டும்தான் அவர் வேலை. ஆக்கப் பணிகளைச் செய்வது புரட்சித் தலைவியினுடைய வேலை. நேற்று மதுராந்தகத்தில் போய்ப் பேசியிருக்கிறார். நன்றாக யோசிக்க வேண்டும். அவர்களும் யோசிக்க வேண்டும் இதை. என்ன பேசியிருக்கிறார்? 'விற்பனை வரியை நான் ஆட்சியில் இருந்தபோது collect செய்ய முயற்சி செய்தேன். பத்து மாதங்களாக இந்த அரசு என்ன செய்தது' என்று கேட்டார். நான் கேட்கிறேன், 1996-லேயிருந்து இதுவரையில் விற்பனை வரி நிலுவையில் இருக்கிறது. கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். பத்து மாதங்களாக இவர்கள் என்ன செய்தார்கள் என்று கேட்கிறீர்கள். ஆறு வருடங்களாக நீங்கள் என்ன செய்துவிட்டுப் போனீர்கள்? அதை வாங்கி நீங்கள் செலவு செய்திருந்தால், இந்த மாதிரி திவால் பட்ஜெட் போய்க் கொண்டிருக்காது, பாருங்கள், தமிழ்நாடு இன்றைக்கு இந்த நிலைக்கு வந்திருக்காதே? இதை ஏன் அன்றைக்குச் செய்யவில்லை. இன்றைக்குச் சொல்கிற அவருக்கு நான் கேட்கிறேன், அறிக்கை விடலாம். இந்த அவைக்கு வர முடியாதவர்கள், மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் வேண்டுமானால் இந்த அவைக்கு வர முடியாது. அவர்களுடைய கருத்துகளை பத்திரிகையிலே வெளியிலே சொல்லலாம். மக்களால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தானே? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) பேராசிரியர், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், இங்கு வரக்கூடிய உரிமை உள்ள ஒருவர், வர முடியாத நிலையில் இருப்பாரேயானால், அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் குறைவுபடுத்தியோ அல்லது கேவலப்படுத்தியோ பேசுகிற பழக்கம் இந்த அவையில் கிடையாது. அப்படிப் பேசுவதைத் தாங்கள் அனுமதிப்பீர்களானால், அதற்குப் பின்னர் அதே மாதிரியான முறைகள் தொடர்ந்து வளரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன் சொல்வது, மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அவைக்கு வராமல் போகலாம். தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஏன் வரவில்லை என்கிற மாதிரி அந்தப் பொருளில்தான் சொன்னார்.

[2002 ஏப்ரல் 2

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட பலபேர் இந்த அவைக்கு வராமல் இருந்த கடந்த கால வரலாறு எனக்கும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், பேசுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களை குறை சொல்லிப் பேசவேண்டுமென்பது என்னுடைய எண்ணம் இல்லை. அவருடைய வயதுக்கு மரியாதை அளிக்கிறேன். (குறுக்கீடு) பன்னீர், ஜால்ரா இல்லை, ஜால்ரா போடுகிற பழக்கம் என்னிடம் இல்லை. விரல் காட்டிப் பேசுகிற வேலை என்னிடம் வேண்டாம். மன்னிக்க வேண்டும். விரல் காட்டிப் பேசுகிற வேலைக்கு நான் அப்பாற்பட்டவன். **(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன் உட்காருங்கள், (குறுக்கீடு) பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் நீங்கள் பேசவேண்டுமே தவிர, வேறு கருத்துகளைச் சொல்லக் கூடாது. வரதன் நீங்கள் பேசுங்கள். இன்னும் இரண்டு மணித் துளிகள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர் வாக்கியத்தை முடிக்கட்டும். வரதன் சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மைக் இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கோபத்தில் வேண்டுமானால் எங்களைப் பேசிவிட்டுப் போகட்டும். எங்களை மிரட்டுகிற வேலையை வைத்துக்கொள்வதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. விரல் காட்டிப் பேசுவது, ஆள் காட்டிப் பேசுவது, வா என்று அழைப்பது அவர்கள் பாரம்பரியம். எங்களுக்கு அதுவல்ல பாரமபரியம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், பேசுங்கள்.

*பிற்பகல் 1-15*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஒரு வாக்கியத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். ** என்று சொன்ன அந்த வாக்கியத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடலாம். (குறுக்கீடுகள்) ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2002 ஏப்ரல் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. போளூர் வரதன்:** நான் சொன்ன அந்த வார்த்தையை நானே திரும்ப . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களும் அவையினுடைய மரபைக் கடைப்பிடிக்கவேண்டும். அவர் மிரட்டுகிற பாங்கு, விரலை நீட்டி எச்சரிக்கிற பாங்கு, இது உண்மையிலேயே ஓர் அச்சுறுத்துகிற பாங்காக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவர் உணர்வுமயமான ஒரு நிலைக்கு மாண்புமிகு வரதன் அவர்களை இட்டுச் செல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நல்ல பண்புமுறையை நாம் கடைப்பிடிக்கவேண்டும். (குறுக்கீடுகள்) No, no.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. பன்னீர்செல்வம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி உட்காருங்கள். மாண்புமிகு பேராசிரியர்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் பொன்னையன் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். ஆனால், அமைச்சர் பொன்னையன் அவர்களுக்கு—அவர்களுக்குப் பின்பக்கம் நடப்பது தெரியாது. எனக்குத்தான் அமைச்சர் பொன்னையனுக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பது தெரியும். எனக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பது அவருக்குத் தெரியும். ஆகவே, அங்கே ஏற்பட்ட அந்த உணர்ச்சி அலைகள் இங்கே வேறுவிதமாக வெளிப்பட்டுள்ளது. அங்கே ஏற்பட்டதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன்; நீங்கள் பார்க்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், இப்போது எனக்குப் பின்னால் எதுவும் நடைபெறவில்லை. எனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், திரு. போளூர் வரதன் அவர்களைப் பார்த்து அச்சுறுத்தும் வகையில், கையை நீட்டி, சொல்லக்கூடாத வார்த்தையைச் சொன்னார். அதன் காரணமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன்

அவர்கள் உணர்ச்சிவயப்பட்டு அதற்குப் பதிலளித்தார் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எல்லாவற்றையும் தவறு என்று சுட்டிக்காட்டுகின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தனது கட்சியைச் சார்ந்த உறுப்பினர் தவறு செய்தாலும் அதையும் கண்டிக்க வேண்டிய கடமை உடையவர் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னீர்செல்வம் அவர்கள் எந்தச் சூழ்நிலையில் அந்த நிலைக்கு ஆளானார்; அப்படி, உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள் கைகாட்டிப் பேசும் நிலைக்கு பன்னீர்செல்வம் அவர்களுக்கு எந்த நிலை ஏற்பட்டதன் காரணமாக ஆளானார் என்பதைத்தான் நான் சொன்னேனே தவிர, பன்னீர்செல்வம் அவர்கள் செய்தது சரி என்று நான் சொல்லவில்லை. பன்னீர்செல்வம் அவர்கள் செய்தது தவறு என்பதை நான் ஒப்புக்கொண்டுதான் முதலிலேயே பேசுகிறபோதே சொன்னேன். ஆனால், அந்தத் தவறு ஏற்பட்டதற்கான காரணம், சூழ்நிலை அமைச்சர் பொன்னையன் அவர்களுக்குப் பின் பக்கத்திலே இருந்தவர்கள்—நான் பார்த்துக்கொண்டிருந்தேன்—பெயர் வேண்டுமானால் சொல்லத் தெரியாதே தவிர அடையாளம் காட்டத் தெரியும். அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நிலை சரியல்ல. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன். இரண்டு மணித் துளியிலே பேச்சை முடித்து விடுங்கள். இன்னும் ஒருவர் பேசவேண்டும்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பல்வேறு நல்ல திட்டங்கள் இருந்தாலும், எதைச் சொன்னாலும் நிதியமைச்சர் அவர்கள் நிதிப்பற்றாக்குறை, நிதி இல்லை, நிதி இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு இன்றைக்கு மைய அரசு ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழகத்தைப் பார்க்கிறது என்று நான் எண்ணுகிறேன். காரணம், கடந்த அரசு கேட்கின்றபொழுது, கடனாக ராயல்டியை முன்னாலேயே 3 வருடங்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இந்த அரசு பொறுப் பேற்றபொழுது, சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருந்தும்கூட ரிசர்வ் வங்கியிலே கடனைப் பெற்றுத்தான் அம்மா சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். ஏன் இந்த மைய அரசு கடந்தகால ஆட்சிக்குக் கொடுத்தது மாதிரி, நமக்குக் கிடைக்க வேண்டிய ராயல்டியைக்கூட



3 வருடம் அட்வான்சாகக் கொடுத்திருந்தால் தமிழகத்தினுடைய நிதிநிலை இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இன்றைக்கு ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியிலே உரையை முடித்து விடுங்கள். இன்னும் ஒருவர் பேச இருக்கிறார். (குறுக்கீடு)

**திரு. போளூர் வரதன்:** மொத்தத்திலே நான் பேசினது 3 நிமிஷம்கூட இல்லை, சார். இன்றைக்குக் கல்வித் துறை என்று வருகிறபோது, அனைவருக்கும் கல்வி என்ற ஒரு நிலையை அம்மா உருவாக்கியிருக்கிறார்கள். பாராட்ட வேண்டியது. அரசாங்கம் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாயைக் கல்விக்குச் செலவிட்டும் ரிசல்ட் என்ன என்று பார்க்கும்போது, கிராமப்புறங்களிலே படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு இருக்கின்ற இந்த ரிசல்ட் ரொம்ப குறைச்சலாக இருக்கிறது. தனியார் பள்ளியிலே படிக்கின்ற குழந்தைகளுக்கு நல்ல ரிசல்ட் வருகிறது. தனியார் பள்ளியிலே ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் கம்மி. உழைப்பு அதிகம். அரசாங்கப் பள்ளிகள், கல்லூரிகளிலே இருக்கின்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம், பணம் அதிகம். செலவு அதிகம் பண்ணுகிறோம். Profit என்று பார்க்கும்போது Nil-ஆக இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைப்பதற்குத் தகுந்த ஒரு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, மகளிர் மேம்பாட்டிற்கு மகளிர் மீது சொல்லப் பட்டிருக்கிற குற்றங்கள், குறைகளை நீக்குவதற்காக தமிழகத்திலே முதல் முறையாக கோவையிலும், சென்னையிலும் மகளிருக்கு என்று தனி நீதிமன்றங்களை அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். மிகவும் வரவேற்கத்தக்கது. அதை மதுரைக்கும், திருச்சிக்கும் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

இலவச சைக்கிள் திட்டத்தைப் பற்றி சொல்கிறபோது ஒன்றைக் குறிப்பிட வேண்டும் என்று ஏற்கெனவே விரும்பினேன். இப்போது ஒரு கிராமத்திலேயிருந்து பள்ளிக்கு வருகிற பெண் குழந்தைகள் 4, 5 பேர் வருகிறார்கள் என்றால் இப்போது இரண்டு தாழ்த்தப்பட்ட சகோதரிகளுக்குக் கிடைத்துவிட்டது. பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் 8 கி.மீட்டர் தூரம் நடந்து வருகிற ஒரு

[திரு. போளூர் வரதன்] [2002 ஏப்ரல் 2

சூழ்நிலை இருக்கிறது. இந்த ஆண்டிலே 6 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறீர்கள். மேலும் 4 கோடி ரூபாயை ஒதுக்கி பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கும் கொடுத்தால் அவர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதை அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இப்போது பேருந்து Privatisation என்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், அருகிலே உள்ள ஆந்திர மாநிலத்திலே இருக்கிற அரசு பஸ்கள் எல்லாம் இலாபத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றது. நஷ்டத்தில் ஓடிய அந்தத் துறை இன்றைக்கு இலாபத்தில் செல்கிறது. இப்போது அதையே பின்பற்றிக்கூட தமிழகத்திலேயே நாம் அதையும் கொண்டு வரலாம். இப்போது சொல்கிறபோது 2275 பஸ்கள் புதிதாக வாங்குவதற்கு அம்மா இந்த வருடம் உத்தரவிட்டிருக்கிறார்கள். நான் எதையாவது சொன்னால் கையைக் காண்பித்து, தகராறு என்று சொல்கிறார்கள். கடந்த 5 ஆண்டுக் காலத்தில் எவ்வளவு புதிய பஸ்கள் வாங்கினார்கள் என்று கேட்டால் தெரியாது. ஓடாத பஸ்கள்தான் நிறைய இருக்கின்றன. அதற்கு வாங்கிய spare parts தான் நிறைய. ஓடாத பஸ்ஸிற்கே spare parts. ஓடிய பஸ்ஸிற்கு என்ன ஆச்சு என்று தெரியவில்லை...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. போளூர் வரதன்:** இவற்றை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னால், அருகிலிருக்கிற ஆந்திர மாநிலத்திலே இருக்கின்ற நிலைமை போன்று தமிழகத்திலே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன் பேசி முடித்தவுடனே உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. போளூர் வரதன்:** தமிழகத்திலே இருக்கிற இந்தத் துறை இலாபத்தில் இயங்குவதற்கு மாற்று வழி என்ன என்பதை நீங்கள் நிச்சயம் கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரே ஒரு நிமிடம். குப்பநத்தம் அணை ஏற்கெனவே திட்டங்கள் தீட்டப்பட்டு, நிலத்திற்கும் பட்டுவாடா செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் 3



2002 ஏப்ரல் 2] [திரு. போளூர் வரதன்]

கோடியே 22 இலட்சம் ரூபாய் நிலுவையில் இருக்கிறது. இந்த மாதம் 1ஆம் தேதியோடு அதை செட்டில்மெண்ட் பண்ணி இருக்கவேண்டும். பண்ண முடியவில்லை. நான் மாண்புமிகு அம்மா அவர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே குப்பநத்தம் அணை வருவதன் மூலம் அந்தப் பகுதியினுடைய மேம்பாட்டிற்கு அது உகந்ததாக இருக்கும். அதைத் தாங்கள் இந்த ஆண்டே கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மேல்செங்கத்திலே இருக்கிற விவசாயப் பண்ணை மத்திய-மாநிலக் கூட்டிலே வந்தது. கூட்டு முறிந்தவுடன் இப்போது அது விலக்கிக்கொள்ளப்பட்டிருக்கிறது. மைய அரசிற்குச் சேரவேண்டிய பங்கைக் கொடுத்துவிட்டு மாநில சர்க்கார் அதை எடுத்து நடத்த வேண்டும் என்று நான் ஏற்கெனவே அம்மா அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். சட்டமன்றத்திலேயும் பேசியிருக்கின்றேன். அதைச் செய்வதன் மூலம் 10 ஆயிரம் குடும்பங்கள் அங்கே முன்னுக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

செங்கத்திலே ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. பள்ளிக் கட்டடங்கள் கிடையாது. Congested Place-லே இப்போது 1,500 குழந்தைகள் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சந்தைமேடு இருக்கிறது. அந்தச் சந்தைமேட்டிலே பள்ளியைக் கட்டி அந்தக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு அம்மா அவர்கள் உதவ வேண்டும். சந்தைமேட்டிற்கும் அங்கே வேறு இடம் இருக்கிறது. மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அதேநேரத்திலே கோட்டகுளம் ஆறு மற்றும் செய்யாறு ஓடுகிறது. அந்த ஆற்றிலே தரைப்பாலம் இருக்கிறது. ஏற்கெனவே நான் பொதுப் பணித் துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களும் அதைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். மழைக் காலங்களில் 3 மாதத்திற்கு 10, 20 கிராமங்கள் துண்டிக்கப்படுகின்றன. அந்த வழியில் போக முடியவில்லை. அதை ஒரு மேம்பாலமாக அமைத்துக் கொடுப்பதன் மூலம் அந்தப் பகுதியில் இருக்கின்ற கிராமப்புற மக்கள், நகர்ப்புறம் வருவதற்கும், பள்ளிக்குச் செல்வதற்கும், மருத்துவமனைக்குச் செல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று கூறி, இந்த வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி. (குறுக்கீடு) சரி, திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** ஐந்து ஆண்டுகளில் வாங்கிய புதிய பேருந்துகளின் எண்ணிக்கையை அவர் படித்துவிட்டு வந்து சொன்னார் என்றால் பரவாயில்லை. ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லிக்கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழைய குறிப்புகளையும் பார்த்திருந்தால் தெரிந்திருக்கும். இவர்கள் அளித்த, இந்த ஆளுங்கட்சி அளித்த நிதிக் குறிப்பிலேகூட அவையெல்லாம் இருக்கின்றன. 5 ஆண்டுகளுக்கு வாங்கிய புதிய பேருந்துகள் 9250 என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி. (குறுக்கீடு)

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. ஓடாத பேருந்துகளின் எண்ணிக்கையைப் பார்த்து அதற்கேற்ற மாதிரி வாங்கி இருந்தால் இவ்வளவு பணம் வேஸ்ட் ஆகியிருக்காது என்றுதான் சொன்னேன். 8 ஆயிரம் பஸ்கள் அவர்கள் வாங்கியிருக்கலாம். ஓடாத பஸ்களின் எண்ணிக்கை என்ன? எத்தனை கோடி ரூபாய்க்கு spare parts வாங்கியிருக்கிறார்கள்? அப்படி வாங்கியிருந்தால் அந்த பஸ்கள் ஏன் ஓடவில்லை? அதற்கு யார் காரணம்? இன்றைக்கு ஓடுகிற பஸ்களில் பூராவும் ஏன் சீட் கிழிந்து கிடக்கிறது? ஜனங்கள் ஏறமாட்டேன் என்கிறார்களே, பார்த்தால் பயப்படுகிறார்கள். சைடிலே போனால் கழுத்தை வெட்டிவிடும், காலை வெட்டிவிடும் என்பதுதான் அந்த பஸ்ஸினுடைய நிலைமை. இதை மாற்றியமைக்க வேண்டும். (குறுக்கீடு) நான் நல்ல கருத்தைத்தான் சொல்கிறேன். யார் மேலேயும் குறை சொல்லவில்லை. ஆந்திராவிலே ஓடுகிறதே பஸ், அந்த மாதிரி விடுங்களேன். தவறு என்ன அதிலே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

பிற்பகல் *1-25*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று சொல்கின்றேன். ஒரேயொரு உதாரணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் லாவணிக் கச்சேரி நடத்திக்கொண்டிருந்தால் எப்படி?

**டாக்டர் க. பொன்முடி:** தமிழ்நாடு போக்குவரத்துக் கழக பஸ்தான் சிறப்பாக இருக்கிறது. ஆந்திராவிற்கு, சித்தூர், திருப்பதிக்குச்



செல்லும்போது எந்தக் காலத்திலும் நம்முடைய தமிழ்நாடு போக்குவரத்துக் கழக பஸ்சில்தான் அதிகமாகப் போவார்கள். ஆந்திரா பஸ்சில் ஏறமாட்டார்கள். அதுதான் சூழ்நிலை. இதை மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-25 மணிக்கு என்னைப் பேச அனுமதித்திருக்கின்றீர்கள். இன்றைய விவாதத்திலே நிறைய குறுக்கீடுகள் நடந்திருக்கின்றன. குறுக்கீடு தேவைப்படாத அளவிலே நான் பேச இருக்கின்றேன். ஆகவே, நான் பேசுகின்ற வரையிலே நீங்கள் அவை நேரத்தை நீட்டித்துக் கொடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோதே மாநிலத்தில் நிலவிடும் மோசமான நிதிநிலைமை குறித்து விவரமாக ஒரு வெள்ளை அறிக்கையைக் கொடுத்திருந்தார்கள். அதனையடுத்து இரண்டே மாதங்களில் சென்ற நவம்பர் மாதத்தில் ரூ.3,300 கோடி அளவிற்கு பஸ் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு ஆகியவற்றின் மூலமாக மக்கள்மீது ஒரு சுமை ஏற்றப்பட்டது. இந்தச் சுமையின் மூலமாக அரசின் சுமை எந்த அளவிற்குக் குறைந்திருக்கின்றது என்று பார்க்கின்றபோது எந்த அளவிற்கும் குறையவில்லை என்பதை நேற்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும்கூட வருவாய் மற்றும் நிதிப் பற்றாக்குறை நிலை பெரும் கவலையளிப்பதாகவும், இனியும் சமாளிக்க முடியாத அளவிற்கு உருவாகியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கின்றார்கள். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் நிதியமைச்சர் அவர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு, மிகுந்த பொறுப்புணர்வுடன் ஒரு நல்ல வரவு-செலவுத் திட்டத்தினைக் கொடுத்துள்ளார்கள். அவரை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அனைத்துத் துறைகளுக்கும் சேர்த்து, ஆதி முதல் அந்தம் வரையில் அழகுபெற அணி சேர்த்து சிறப்பினைக் கொடுத்திருப்பது நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி] [2002 ஏப்ரல் 2

புதிய இலட்சியங்களோடு, ஆட்சியில் புதிய வழிமுறைகளோடு ஆளத் தொடங்கியிருக்கின்ற அவரை பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக நான் காணுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) புதுமைப் பெண்ணின் இலட்சியங்களை பாரதி பாடுகின்றான்:

*'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்,* (மேசையைத் தட்டும் ஒலி)

இதை நான் அழுத்தமாகச் சொல்கின்றேன்.

*'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்,*
*திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்'*

என்று பாரதி பாடியிருக்கின்றான். புதுமைப் பெண்கள் என்றைக்குமே வீழ்ச்சியடைவதில்லை என்பதைத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அவனுடைய வார்த்தைகளில் குறிப்பிடுகின்றான்.

கடந்த ஓராண்டில் நம்முடைய முதல்வர் அவர்கள் சந்தித்த சோதனைகள், அனுபவித்த சங்கடங்கள் அனைத்தையும் கடந்து, வெற்றிச் செழிப்போடும், வைர நெஞ்சத்தோடும் இலட்சியத்தின் சிகரத்தை எட்டுகின்ற நிலையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவையிலே அமர்ந்திருக்கின்றார்கள். அவர்களுடைய இப்போதைய இலக்கு, சமூகப் பொருளாதாரக் குறியீடுகளில் உலகளவில் தலைசிறந்த இடத்தைப் பெறவும், எல்லாத் துறைகளிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழகத்தை விளங்கச் செய்யவேண்டும் என்பதும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு அடிப்படையாக 15 அம்சத் திட்டம் என்ற குறிக்கோள்களின் பட்டியலை அறிவித்து, அதை அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு வழிகாட்டும் நெறிமுறைகளாக வகுத்துக் கொடுத்துள்ளார்கள். இந்த இலட்சியத்தை நோக்கித்தான் நம்முடைய வரவு-செலவுத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். வரவு-செலவுத் திட்டத்தில் பல நல்ல அம்சங்களும் இருக்கின்றன; சின்னச் சின்ன நெருடல்களும் இருக்கின்றன. அவற்றைத் தவிர்த்திருக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

வேலைவாய்ப்பினை உருவாக்க வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கோடி ரூபாய் செலவு செய்யும் வகையில்,



2002 ஏப்ரல் 2] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

385 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது, 10 ஆயிரம் பெண்கள் பயன்பெற 145 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது, சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட சிறப்பான முயற்சிகள் எடுத்திருப்பதுடன், வீராணம் திட்டத்திற்கு 77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பது, போக்குவரத்தினைச் சீரமைக்க 227 கோடி ரூபாயில் 2275 புதிய பஸ்கள் (மணியடிக்கப் பெற்றது) வாங்குவது, சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த ....

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜி. வினாயகமூர்த்தி அவர்கள் பேசி முடிக்கிறவரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாலை 5 மணி வரை பேசுவீர்களா?

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** முயற்சி எடுத்திருப்பது, சுகாதார மேம்பாட்டிற்காக மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்துவது, ஏழை முதியவர்கள் சிறப்பு சிகிச்சை பெற மருத்துவ வசதி அட்டைகள் வழங்கிட ஏற்பாடு செய்வது, சென்னையில் உள்ள குடிசைப் பகுதி குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுதுபார்க்கும் மற்றும் நிலை உயர்த்தும் புதிய திட்டத்தை மேற்கொள்வது, வேலூரில் திருவள்ளுவர் பெயரால் புதிய பல்கலைக்கழகம் தொடங்குவது, ஆதிதிராவிடர் மக்களுக்கு புதிதாக 31,000 வீடுகள் கட்டுவது, ஆதிதிராவிடர் மாணவிகள் இலவச சைக்கிள் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது, இப்படிப் பல்வேறு நல்ல அம்சங்கள் இந்தத் திட்டத்திலே இருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் ஒரு சில அம்சங்கள்— நகைச்சுவைக்காகச் சொல்கிறேன்—Krack-Jack Biscuit-ஐப் போல இருப்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதைப் புண்படுத்தும் நோக்கத்திலே சொல்லவில்லை. அந்த பிஸ்கெட்டுக்கு இருக்கிற தன்மையே, அது இனிப்பாகவும் இருக்கும். உவர்ப்பாகவும் இருக்கும். ஆக, இரண்டு சுவைகள் இருப்பதாக நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக பொது விநியோகத் துறை மூலமாக விற்கப்படும் அரிசியின் விலை 3½ ரூபாய் இருக்குமென்று சொல்வது ஒரு இனிப்பான செய்தி. அதேநேரத்தில் வெளிச் சந்தையில் விற்கும் அரிசிக்கு 2 பர்சென்ட் வரி விதித்து இருப்பது உவர்ப்பான ஒரு செய்தி. இரண்டாவதாக, மலிவு விலை மதுவைப் புத்தாண்டு தினத்திலேயிருந்து ஒழிப்பது ஒரு இனிப்பான செய்தி. மதுபான விற்பனைக் கடைகளிலே Bar திறக்க வசதிசெய்து தருவது உவர்ப்பான ஒரு செய்தி.

[2002 ஏப்ரல் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Krack-Jack Biscuit-ஐ எல்லோரும் விருப்பமுடன் சாப்பிடுகிறார்களே?

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** நானும் விருப்பத்தோடுதான் சொல்கிறேன். (சிரிப்பு) கசப்பானது என்று சொல்லவில்லை. உவர்ப்பானது என்று சொல்லியிருக்கின்றேன்.

அடுத்து, சித்தா, யுனானி, ஆயுர்வேதா போன்ற இந்திய மருத்துவ முறைகளின் கட்டமைப்பு வசதிகளைப் பரவலாக்க அனைத்து மாவட்ட மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்திட முயற்சி எடுத்திருப்பது இனிப்பான ஒரு செய்தி. சித்தா, யுனானி மருந்துகளுக்கு 4% வரி விதித்து இருப்பது உவர்ப்பான ஒரு செய்தியாகும். ஆகவே, இந்த உவர்ப்பான செய்திகளை எல்லாம் முதல்வர் அவர்கள் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து மிக முக்கிய அம்சமாக நான் கருதுவது, தரிசு நிலங்களை ....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிப்பை மட்டும் வைத்துக்கொண்டு உவர்ப்பை எடுத்து விட்டால் Krack-Jack Biscuit-ன் தன்மையே மாறிவிடுமே, போய்விடுமே. (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இனிப்பைச் சாப்பிடமாட்டார்கள். (சிரிப்பு)

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** முதல்வர் அவர்களே, இனிப்பை எவ்வளவு சாப்பிட்டாலும் திகட்டுமே ஒழிய, வேறு ஒன்றுமே செய்யாது. ஆனால் நான் சாப்பிடுவது இல்லை. ஆனால் உப்பைப் பொறுத்த அளவிலே கொஞ்சம் அதிகமானாலும்கூட யாராலுமே சாப்பிட முடியாது. ஆகவே, உவர்ப்பு என்பது ஒரு அளவோடு இருந்தால்தான் சரியாக இருக்கும்.

அடுத்து, நான் மிக முக்கிய அம்சமாகக் கருதுவது தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதில் முதலமைச்சர் தனிக் கவனம் செலுத்தி வருவதை நான் மனம் திறந்து பாராட்ட விரும்புகிறேன். அந்தப் பிரச்சினையைப் பற்றி நேற்றையதினம் அவர்கள் ஒரு விளக்கம்கூடக் கொடுத்தார்கள். அவர் சொல்லிய விளக்கங்கள் எனக்கு மன நிறைவைக் கொடுத்தாலும்கூட ஓர் ஆய்வுக்காக மீண்டும் ஒரு கருத்தை அவர்களிடம் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். தரிசு



2002 ஏப்ரல் 2] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

நிலங்களை மேம்படுத்த நிதி அதிகமாகத் தேவைப்படும். அரசிடம் நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற நிலையிலே, நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் குத்தகை விடுவதிலே சிரமங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்தக் கருத்தில் நியாயம் இருக்கிறது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இருப்பினும், விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கில் வேலையில்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு எல்லாம் இப்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் வேலை பெற்றுக் கொடுக்க முடியாது. ஒவ்வொரு பகுதியிலே உள்ள இப்படிப்பட்ட இளைஞர்களை ஒன்று திரட்டி கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களை அமைத்திட அரசே நடவடிக்கை எடுத்து, அவர்கள் நிதி நிறுவனங்களின் மூலமாகக் கடன் பெற்றிட அரசாங்கமே உதவி செய்தால் பயன் கூடுதலாக இருக்குமென நான் நம்புகிறேன். வேலையில்லா இளைஞர்கள் வசதி படைத்தவர்களிடம் கூலிகளாக வேலை செய்யும் நிலைமையை மாற்றி, அவர்களை நில உடைமைதாரர்களாக ஆக்கி வைத்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் அது ஒரு புரட்சிகரமான திட்டமாக அமைந்துவிடும் என நான் திடமாக நம்புகின்றேன். முதல்வர் இதைச் செய்வார்களேயானால் அவர்கள் வரலாற்றிலே நிரந்தரமான இடத்தைப் பெறுவார்கள் என்பதிலே எந்த ஐயமும் இல்லை.

பிற்பகல் 1-35

நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்திலே இரண்டு வழிமுறைகளை நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். முதலாவதாக, இந்த நெருக்கடியிலிருந்து மாநிலங்கள் மீளும் வண்ணம், முழு அளவிலான ஒரு கட்ட உதவித் திட்டம்—one time package—ஒன்றை மாநிலங்கள் அனைத்திற்கும் வகுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இவ்வகையில் தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் நிதியுதவி 3,000 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை மீண்டும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கு ஏதுவாக இத்தொகையை மானியமாக அளிக்க வேண்டும் என்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை மத்திய அரசு சாதகமாகப் பரிசீலிக்கும் என்று நம்புகின்றோம் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். சாதகமாகப் பரிசீலிக்கும் என்ற ஒரு ஐயப்பாட்டோடு ஏன் அந்த வார்த்தையை அவர்கள் உபயோகப்படுத்தி இருக்கின்றார்கள் என்று எனக்குப்

புரியவில்லை. நம்முடைய முதலமைச்சருடைய சக்தி இன்றைக்கு நாடு முழுவதும் அறிந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 3,000 கோடி ரூபாயை அவர்கள் கேட்பார்களேயானால் மத்திய அரசாங்கம் தங்குதடையின்றிக் கொடுக்கும் என்று நான் முழுமையாக நம்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்குச் சக்தி படைத்த ஒரு முதலமைச்சரை வைத்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே ஓர் ஐயப்பாட்டினை நிதியமைச்சர் அவர்கள் எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்தையும் சொல்லியிருக்கின்றார்கள், 62ஆவது பக்கத்திலே. கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்தச் சூழ்நிலையில் சில கடினமான முடிவுகளை எடுக்கவேண்டியது அவசியமாகிறது. புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர் டாக்டர் இராஜா செல்லையா அவர்களது தலைமையின்கீழ் "வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம்" ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த முயற்சியை நான் வரவேற்கின்றேன். அதேநேரத்திலே சில விவரங்களை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆணையத்திற்குக் காலக்கெடு ஏதேனும் கொடுக்கப்பட்டிருக்கின்றதா? இந்த ஆணையத்திற்கு Terms of Reference என்ன என்று சொல்லப்பட்டிருக்கின்றதா என்று எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தமட்டிலே வரிச் சீரமைப்பைக் காட்டிலும்—அது தேவைதான்—செலவினச் சீரமைப்பு மிக முக்கியமானது என்று நான் கருதுகின்றேன். காலங்காலமாக, பல வருடங்களாக செலவினங்களை நம்மை அறியாமலேயே அதிகரித்துக் கொண்டிருக்கின்றோம். அதை இந்தச் சபையிலே அரசியல் கட்சிகளை எல்லாம் வைத்துக்கொண்டு பேசி ஒரு முடிவுக்கு வரக்கூடும் என்பதை என்னால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, ....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கச் செலவினங்களை எவ்வாறு குறைப்பது என்பது குறித்து ஆலோசனை வழங்க இந்த அரசு ஏற்கெனவே ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் 'சுவாமிநாதன் கமிட்டியை அமைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** அதை வரவு-செலவுத் திட்டக் குறிப்பிலேயும்கூட நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த சுவாமிநாதன் குழுவிற்கு ஒரு வரம்பு இருப்பதாக நான் நினைக்கின்றேன். நான் சொல்ல வருவதெல்லாம் செலவினங்கள் எப்படி மிகைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் காலக்கெடு இல்லாமல் தொடர்ந்து கொடுத்து வரும் மானியங்கள், வரைமுறை இல்லாமல் கொடுத்துவரும் இலவசங்கள், சக்தியை மீறி கொடுத்து வரும் சலுகைகள், நஷ்டப்பட்டாலும் நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்ற கோரிக்கைகள், கடன்பட்டாலும் தீர்க்கப்பட வேண்டும் என்று வருகின்ற நிர்ப்பந்தங்கள், என இந்தப் பட்டியல் இப்படியே நீண்டுகொண்டு போகின்றது. இதிலே ஒவ்வொரு கட்சியும், இன்னொருவர் செய்தால் அதை எதிர்ப்பது என்கின்ற கொள்கையிலேயே நாம் நடந்துகொண்டு வருவதாலே இதை நாம் ஒரு முடிவுக்குக் கொண்டுவர முடியாமல் திணறுகின்றோம் என்றுதான் நான் நினைக்கிறேன். திரு. இராஜா செல்லையா அவர்களின் தலைமையிலே இயங்குகின்ற அந்த ஆணையம், இந்தச் செலவினச் சீரமைப்பைக்கூட ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதேநேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். நீதிமன்றத் தீர்ப்பு என்று சொன்னால், அதைத் தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறோம். அதைப்போல இந்த ஆணையத்தினுடைய தீர்ப்பை ஒரு கமிட்மென்டோடு நாம் ஏற்றுக்கொள்கின்ற நிலை வரவேண்டும். அப்போதுதான் இந்த நிதி நெருக்கடியிலிருந்து நாம் மீள முடியும் என்று நான் அன்போடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1-40

என்னுடைய தொகுதியைப் பற்றியோ, சென்னை நகரைப் பற்றியோ பேசுவதற்கு எனக்கு நேரமில்லை. அவற்றையெல்லாம் முதலமைச்சர் அவர்களிடத்திலும், அந்தந்தத் துறை அமைச்சர்களிடத்திலும் நான் சொல்லிக்கொள்கிறேன் என்று சொல்லி, ஒரேயொரு வேண்டுகோளை முதலமைச்சர் அவர்களுக்கு வைக்க ஆசைப்படுகிறேன்.

இந்த ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த நாள் நூற்றாண்டு விழா. ஏற்கெனவே இதுபற்றி முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். எளிய குடும்பத்திலே பிறந்த பெருந்தலைவர் அவர்கள் 10 வருட காலம் சிறையிலே வாடி, 9 வருட

[திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி] [2002 ஏப்ரல் 2

காலம் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக ஆட்சி செய்து ஒரு முன்மாதிரியான முதல்வர் என்ற பெயருக்கு ஆளாகி இருக்கின்றார்கள். இதை நம்முடைய முதல்வர் அவர்களே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அரசியல் கட்சிகளின் சார்பாக, எங்களுடைய கட்சியிலும்கூட அவருடைய பிறந்த நாள் விழாவுக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்யவிருக்கிறோம் என்றாலும்கூட, அந்தப் பெரியவருக்கு, பெருந்தலைவருக்கு இந்த அரசின் சார்பாக, உலகமே வியக்கின்ற அளவுக்கு ஒரு சிறப்பான நூற்றாண்டு விழா ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், முதல்வருடைய தலைமையிலேயே அதைச் செய்ய வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை விடுத்து, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

70. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 23-11-2001 ஆம் நாளிட்ட 250 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

71. 1-5-1981 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 1-5-1981 ஆம் நாளிட்ட II(1)/PE/239 (d)/81 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது மற்றும் 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 2-1-2002 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]



2002 ஏப்ரல் 2]

72. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம்ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

73. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

74. 2000-2001 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

75. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

50. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

224485
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.